T
6611

T.6611

T.6611

நன

டை்டெ

ச்சிட்

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பரமகாருணிகரான ஸ்ரீ அருளாளப்பெருமாளெம்பெருமானார்

திருவாய்மலர்ந்தருளிய

# ஞானஸாரம் ப்ரமேயஸாரம்.

இதற்கு

விசதவாக்சிகாமணியான

ஸ்ரீ மணவாளமாமுனிகளருளிச்செய்த

வ்யாக்யாநமும்

பதவுரையும்.

ஸபாபண்டிதர்களான:

ஸ்ரீமான் புதுப்பேர்

வித்வான்: வெங்கடாசார்யராலும்,

ஸ்ரீமான் புதுப்பட்டு

திருவேங்கடா சாரியராலும்,

நன்றாகப் பரிசோதிக்கப்பட்டு

ஸ்ரீவைஷ்ணவக்ரந்த முத்ராபக ஸபையாரால்

பராங்குச திருவவதாராதி ௫௲௧௮-வது ஸம்வத்ஸரமான

நள ஸம்வத்ஸரத்தில்:

காஞ்சீபுரம்.

யுனைட்டெட் அச்சுக்கூடத்தில்

அச்சிட்டு ப்ரசுரம் செய்யப்பட்டது.

விஜயதேதராம்

1916.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# வைஷ்ணவக்ரந்த முத்ராபகஸபை (லிமிடெட்).

## இச்சபையில் தமிழ்லிபியில் அச்சிட்ட க்ரந்தங்கள்.

——(*)——

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தனிஸ் ராகம் ஸவ்யாகயாநம், | ப்ரதிபத தாத்பர்யஸஹிதம் | | 1 | 10 | 0 |
| பாரதாதி தனிஸ்லோகம் | ,, | ,, | 0 | 3 | 0 |
| ராமசரமஸ்லோகம் | ,, | ,, | 0 | 1 | 0 |
| துஷ்கரஸ்லோக டிப்பிணி | ,, | ,, | 0 | 2 | 6 |
| யதிதர்மஸமுச்சயம் | ,, | ,, | 0 | 9 | 0 |
| முதல் திருவந்தாதி | ,, | அரும்பதப்ரதிபத ஸஹிதம் | 0 | 9 | 0 |
| இரண்டாம் திருவந்தாதி | ,, | ,, | 0 | 6 | 6 |
| மூன்றாம் திருவந்தாதி | ,, | ,, | 0 | 6 | 0 |
| நான்முகன் திருவந்தாதி | ,, | ,, | 0 | 7 | 0 |
| திருவிருத்தம் | அரும்பதப்ரதிபத தாத்பர்யஸஹிதம் | | 1 | 14 | 0 |
| திருவாசிரியம் | ,, | ,, | 0 | 3 | 0 |
| பெரியதிருவந்தாதி | ,, | ப்ரதிபதஸஹிதம் | | 7 | 0 |
| திருவெழுகூற்றிருக்கை | ,, | ,, | 0 | 3 | 0 |
| சிறியதிருமடல் | ,, | ,, | 0 | 5 | 0 |
| பெரிய திருமடல் | ,, | ,, | 0 | 5 | 0 |
| திருக்குறுந்தாண்டகம் | ,, | ,, | 0 | 3 | 0 |
| திருநெடுந் தாண்டகம் | ,, | ,, | I | 0 | 0 |
| திருப்பல்லாண்டு | ,, | ,, | 0 | 8 | 0 |
| இராமாநுச நூற்றந்தாதி உரையுடன் | | ,, | 0 | 8 | 0 |
| பராசரவிசிஷ்ட பரமதர்ம சாஸ்த்ரம் தாத்பர்ய ஸஹிதம் | | | 0 | 7 | 0 |
| ஷண்மததர்ஸினி | | | 0 | 1 | 0 |
| பெரியதிருமொழி க-முதல் கக-பத்துக்கள் | | | 8 | c | 0 |
| பெரியாழ்வார் திருமொழி ஸவ்யாக்யாநம் | | | 5 | 6 | 6 |
| திருச்சந்த விருத்தம் ஸவ்யாக்யாநம் | | | 1 | 6 | 0 |
| திருமாலை ஸவ்யாக்யாநம் | | | 0 | 14 | 0 |
| திருப்பள்ளியெழுச்சி | | | 0 | 8 | 0 |
| அமலனாதிபிரான் | | | 0 | 7 | 0 |
| திருவாய்மொழி நூற்றந்தாதி | | | 1 | 0 | 0 |
| உபதேசரத்தினமாலை | | | 1 | 0 | 0 |
| ஞானஸாரம் ஸவ்யாக்யாநம் | | | 0 | 8 | 0 |

இப்படிக்கு:

ம. திருவேங்கடமுடையான்.

கார்யதர்சி [illegible].

ரே, ஙக, வெங்கடாசல முதலி வீதி, சென்னை.

ஸ்ரீ



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.
ஜீயர் திருவடிகளே சரணம்.

# விஶதவாக்ஶிகாமணியான மணவாளமாமுனிகள் திருவாய்மலர்ந்தருளிய

# ஞானஸார வ்யாக்யாநம்,

அருளாளப்பெருமா ளெம்பெருமானார் விஷயமான

## தனியன்,

காதிதோஷஹரம் ஜாதம் யதீந்த்ராஶ்ரயஶ்ரயே ।
ஜ்ஞாநப்ரமேயஸாராதி வக்தாரம் வரயோகிநம் ॥
ராமாநுஜார்யஸச்சிஷ்யம் வேதஶாஸ்த்ரார்த்தஸம்பதம் ।
சதுர்த்தாஶ்ரமஸம்பந்நம் தேவராஜமுநிம் பஜே ॥

சுருளார் கருங்குழல் தோகையர்வேல்விழியில் துவளும்
மருளாம்வினைகெடும் மார்க்கம்பெற்றேன் மறைநான்கும்சொன்ன
பொருள்ஞானஸாரத்தைப் புந்தியில் தந்தவன் பொங்கொளிசேர்
அருளாளமாமுனி யம்பொற்கழல்க ளடைந்தபின்னே. ॥

அவ:—எம்பெருமானார் திருவடிகளிலே யாஶ்ரயித்து, ஸகல வேதஶாஸ்த்ர தாத்பர்யார்த்தங்களெல்லா மவ ரருளிச்செய்யக்கேட்டு, தத்வஹிதபுருஷார்த்த யாதாத்ம்யவித்தமராய், (க) "தேவுமற்றறியேன்" என்று, அவர் திருவடிகளிலே நித்யகைங்கர்யம் பண்ணி

(க) கண்ணி-உ.

ஸேவித்திருந்த அருளாளப்பெருமாளெம்பெருமானார், தம்முடைய பரமக்ருபையாலே, இவ்வர்த்தவிசேஷங்களெல்லாருமறிந்துஉஜ்ஜீவிக்க வேணுமென்று, தத்வஹித புருஷார்த்த ஜ்ஞானத்தினுடைய ஸாராம்ஶத்தைப் பெண்ணுக்கும் பேதைக்கும் தெரியக்கடவதாக த்ராவிட பாஷையாலே இப்ப்ரபந்தமுகேந வருளிச்செய்கிறார். ஆகையாலே இதுக்கு ஜ்ஞாநஸாரமென்று திருநாமமாயிற்று.

அவ;-முதற்பாட்டு;-ஸகலவேதாந்த தாத்பர்ய பூமியாய், தத்வஹித புருஷார்த்த யாதாத்ம்ய ப்ரதி பாதகமாய், ஸம்ஸாரிசேதநோஜ்ஜீவநகாமனான ஸர்வேஶ்வரன் தன்னாலே ப்ரகாசிக்கப்பட்டுள்ளதாய், உபதேஶ பரம்பராப்ராப்தமாய், தத்வவித்க்ரேஸரரான நம்பூர்வாசார்யர்களுக்குப் பரமதநமாய், நித்யாநுஸந்தேயமாயிறே ரஹஸ்ய த்ரய மிருப்பது. அதில் ப்ரதம ரஹஸ்யமாய், பதத்ரயாத்மகமான திருமந்த்ரத்தில், ப்ரதமபத ப்ரதிபாத்யமானவர்த்தத்துக்கு விவரணமாயிருந்துள்ள மத்யமசரமபதங்களுக்கு, "[illegible] த்வயேநமந்த்ரரத்நேந" என்கிறபடியே, மந்த்ரரத்நாக்யமாய் மத்யமரஹஸ்யமான த்வயத்தில்பூர்வோத்தர வாக்யங்கள் விவரணமாய், அதில் பூர்வவாக்ய ப்ரதிபாத்யமான ஸித்தோபாயவரணம், உபாயாந்தரபரித்யாக பூர்வகமாய்ஸ்வீகாரத்திலுபாயத்வப்ரதிபத்திநிவ்ருத்தி பூர்வகமாக வேண்டுகையாலும், உத்தரவாக்ய ப்ரதிபாத்யமாய்ப்பரமபுருஷார்த்தமான கைங்கர்யம், ப்ராப்திப்ரதிபந்தக ஸகலபாபநிவ்ருத்தி பூர்வகமாக ஸித்திக்கவேண்டுகையாலும், பூர்வோத்தரார்த்தங்களாலே ததுபயப்ரதி பாதகமாய்ச்சரம ரஹஸ்யமான சரமஶ்லோகம், வாக்யத்வயத்துக்கும் விவரணமாய்க்கொண்டு தச்சேஷமாயிருக்கையாலே, ரஹஸ்யத்ரயத்திலும் த்வயமே ப்ரதாநமாகவிறே நம்மாசார்யர்களநுஸந்தித்துப்போருமது. அந்தத்வயந்தன்னில், பூர்வவாக்யத்தால் ப்ரதிபாதிக்கப்படுகிற ப்ரபத்திதான், ஆர்த்த ப்ரபத்தியென்றும், த்ரு(ஞ)ப்தப்ரபத்தியென்றும், த்விவிதமாயிறே யிருப்பது. அதில்ஆர்த்தப்ரபத்திமுக்யமாய், த்ருப்தப்ரபத்திகௌ(மள)ணமாயிருக்கும். அந்த ஆர்த்த ப்ரபத்திவேஷத்தை, இப்ரபந்தத்தின் முதற்பாட்டாலே யருளிச்செய்கிறார்.

பரமகாருணிகரான
அருளாளப்பெருமாளெம்பெருமானார்
திருவாய்மலர்ந்தருளிய,

# ஞானஸாரம்.

மூ.—ஊனவுடற்சிறை நீத்தொண் கமலக்கேள்வனடித்
தேனுகருமாசைமிகு சிந்தையராய்—தானே
பழுத்தால் விழுங்கனிபோல் பற்றற்றுவீழும்
விழுக்காடே தானருளும்வீடு. (க)

வ்யா;-(ஊனவுடற்சிறைநீத்து) ஊனாவது-மாம்ஸம், ஊன-என்றது-ஊனையுடையவென்றபடி. இத்தால்மாம்ஸமயமான ஶரீரமென்கை. இத்தேஹத்துக்கு தோஷம் சொல்லுவாரெல்லாம்,(க)"ஊனக்குரம்பை" என்றும், (உ) "ஊனேராக்கை" என்றும், (௩) "ஊனுடைக்குரம்பை" என்றும், இப்படியேயிறேசொல்லுவதும். மாம்ஸத்தைச்சொன்னவிது, மற்றுமிதிலுண்டான அஸ்ருக்பூயவிண்மூத்ரஸ்நாயுமஜ்ஜாஸ்திகளான அவாந்தர தோஷத்துக்கெல்லா முபலக்ஷணம். எல்லாமுண்டானாலும் மாம்ஸப்ரசுரமா யிருக்கையாலே, (௪) "புண்ணாராக்கை" என்றிறேஇத்தைச்சொல்லுவது. (௫) "புண்ணை மறையவறிந்து" என்கிறபடியே தோலைமறைக்கக்கைப்பாணியிட்டு மெழுக்குவாசியிலே ப்ரமிக்கும்படிபண்ணி வைக்கையாலே, ஆந்தர தோஷம் தோற்றாதிறே. அகவாய்ப்புறவாயானால், காக்கைநோக்கப்பணிப் போருமித்தனையிறே.

(உடற்சிறை) இப்படி ஆந்தரதோஷ யுக்தமாகையாலும், ஆத்மாவுக்கு ஸங்கோசகரமாகையாலும், ஆரப்த(ஃ)கர்மபலமாகையாலும், அந்த கர்மாநுகுணமாக இந்த தேஹத்திலே யிட்டுவைத்தவனே விடுவிக்கிலல்லது தன்னால்விடுவித்துக்கொள்ள வொண்ணாமையாலும், அறிவுபிறந்தார்க்கு இத்தேஹத்திலிருப்பு - காராக்ருஹம்

(க) க-திருவ-கக. (உ) தி-மொ-௬-உ-௩. (௩) தி-மொ.
(௪) தி-மொ க-க ௬. (௫) இ-வாய்-௫-க-௫.
‡ கைப்பாணி-மணியாசனம்.

போலே நிரந்தர துஃகாவஹமாகையாலே, இத்தேஹத்தைச் சிறையென்கிறது. இதிலே பொருந்தி யிருப்பார், இத்தேஹதோஷம் காணமாட்டாதவஜ்ஞரிறே.(௧)“மாம்ஸாஸ்ருக்பூய விண்மூத்ர ஸ்நாயு மஜ்ஜாஸ்தி ஸம்ஹதௌ । தேஹேஸ்மிந் ப்ரீதிமாந் மூடோ பவிதா நரகேபி ஸ:- மாம்ஸாஸ்ருக்பூய விண்மூத்ரஸ்நாயு மஜ்ஜாஸ்தி ஸம்ஹதௌ । தேஹேஸ்மிந் ப்ரீதிமாந்மூடோபவிதாநரகேபிஸ:” என்றாரிறே ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான். தன்னைச்சிறையனாகவும், பெருங்கடறபட்டானாகவும், அந்தகனாகவும், விஷதஷ்டனாகவும், அநுஸந்திப்பானென்று ப்ரதிஜ்ஞைபண்ணி, அதுநாலையும் அடைவே விவரிக்கிற பிள்ளைலோகாசார்யர், முதல் வார்த்தையை விவரிக்கிறவளவிலே, தேஹம் சிறைக்கூடமாகவும், தேஹாநுபந்திகளான பார்யாபுத்ராதிகள் கைக்கூடமாகவும், அஹங்காரமமகாரங்கள் வளையலாகவும், நாசமானபாசம் நாரியாகவும், அவிவேகம்பூட்டாணியாகவும், இந்த்ரியங்கள் பிரிவாளராகவும், விஷயங்கள் பிரியலாகவும், மநஸ்ஸு மேல் தண்டலாகவும், தான் சிறையனாகவும், எம்பெருமான் விமோசகனாகவும், அநுஸந்திப்பானென்றாரிறே.

(நீத்து) இப்படியிருந்துள்ளதேஹமாகிற சிறைவிட்டு; நீத்தல்-விடுதல். ராஜபுத்ரன் அழுக்குச்சிறையிலே கிடந்தால், முடிசூடி ராஜ்யம் பண்ணுமதிலும் சிறைவிடுகையே ப்ரயோஜநமாயிருக்குமாபோலே, ப்ராப்யலாபத்திலும் இதினுடைய விமோசநந்தானே ப்ரயோஜநமாகப் போரும்படியிறே இதினுடைய ஹேயதைதானிருப்பது.

(ஒண்கமலைக்கேள்வன்.)(௨)“பத்மே ஸ்திதாம்” என்கிறபடியே, ஒள்ளிதான தாமரைப்பூவை வாஸஸ்தாநமாகவுடைய பெரியபிராட்டியார்க்கு வல்லபனானவன். இத்தால் அநுபவ கைங்கர்ய ப்ரதி ஸம்பந்தியாய்க் கொண்டு, ப்ராப்யமான விஷயம் ஒரு மிதுநமென்னுமிடம் சொல்லுகிறது. இதுதன்னை உத்தரவாக்யத்தில ப்ரதமபதத்திலே கண்டுகொள்வது.

(அடித்தேன்) அடித்தேனென்று ஸ்ரியஃபதியானவனுடைய திருவடிகளில் போக்யதையைச்சொல்லுகிறது. (௩) ‘விஷ்ணோ:

(௧) வி·பு·௯. (௨) ஸ்ரீஸூக்தம். (௩) விஷ்ணுஸூக்தம்.

வஸேவாஜெஸ்யஉத்ஸ: - விஷ்ணோ: பரமே பதே மத்வ உத்ஸ:'' என்றும் (க) ''தேனே மலரும் திருப்பாதம்'' என்றும், சொல்லக்கடவதிறே. இதுதான் திவ்யமங்கள விக்ரஹ போக்யதைக்கு முபலக்ஷணம். திருவடிகளாகிறது - விக்ரஹைகதேசமிறே. (உ) ''நின் மாட்டாய மலர்புரையும் திருவுருவம்'' என்கிறதுக்கு, மட்டை - மாட்டென்று நீட்டிக்கிடக்கிறதாய், ''ஸ்யஉத்ஸ: - மத்வ உத்ஸ:'' என்கிறபடியே, மதுஸ்யந்தியாகையாலே, நிரதிசயபோக்யமான திருமேனியென்னுதலென்று நம்பிள்ளையருளிச்செய்தாரிறே.

(தேனுகரும்) நுகருகையாவது - புஜிக்கையாய், தேனுகருமென்று - அந்த போக்யதையை யநுபவிக்கையைச்சொல்லுகிறது. (ஆசைமிக்கு சிந்தையராய்) என்றது - அந்த போக்யதையை யநுபவிக்கவேணுமென்று ஆசைமிக்கிருந்துள்ள மநஸ்ஸையுடையவரென்கை. இத்தால், ப்ராப்யருசியினுடைய ப்ராசுர்யம் சொல்லுகிறது. இந்த ருசியிறே ப்ராப்யலாப நிபந்தநமான வார்த்திக்குக் காரணம்.

(தானே பழுத்தால் விழுங்கனிபோல்) பக்வமானால் தானே விழுந்து நிற்கும் பழம்போலே. இது ஆர்த்தப்ரபத்திக்கு த்ருஷ்டாந்தம். ஆர்த்த ப்ரபத்திக்கு வேஷமிருக்கும்படியென்னென்று ஆழ்வானைக்கேட்க, கனிப்பழம் காம்பற்றாற்போலே யிருக்குமென்றருளிச் செய்தாரென்றது ப்ரஸித்தமிறே.

(பற்றற்றுவீழும் விழுக்காடே). கீழ்ச்சொன்ன ப்ராப்யருசியாலே ப்ராப்யாபா(ஹா)ஸங்களிலும், ப்ராபகாபாஸங்களிலும்பற்றற்று, ஆர்த்தியால் வந்த பாரவஸ்யத்தாலே ப்ரபதந ரூபேண திருவடிகளிலே விழும் விழுக்காடென்று ஆர்த்தப்ரபத்தியைச் சொல்லுகிறது. (௩)'யசாவஸாநந்த்வயிஸர்வஸுகஸ்ய ஸித்தி | தந்தத்ஸாதகஸ்வாத்ஸ்வத்ஸாஸுவெஸ - யதாபராநந்வயிபிர்த்துஸ்ஸகஸ்ம்ருதிபிர்விநா | ஸேநதத்புரத:பாதஸ்ஸா ப்ரபத்திஸ்ததாபவேத்'' என்றிந்த ப்ரபத்திவேஷந்தான் ஸநத்குமார ஸம்ஹிதையிலே ஸங்க்ரஹேண சொல்லப்பட்டதிறே.

(விழுக்காடேதான்) என்றது, விழுக்காடுதானே யென்றபடி:

(க) தி-வாய்-௧-௫. (௨) தி-வாய்-௩-௧-௮. (௩) ஸநத்குமாரஸம்ஹிதை.

[illegible]
[illegible]

மூ.—நரகும்சுவர்க்கமும் நாண்மலராள்கோனைப்
பிரிவும்பிரியாமையுமாய் - திரிசற்றுச்
சாதகம்போல் நாதன்றனை தருமேபார்த்திருத்தல்
கோதிலடியார் குணம். (உ)

---

(அருளும் வீடு) என்றது, வீட்டையருளும்; மோக்ஷத்தைத் தருமென்றபடி. வீடென்று ஸம்ஸார நிவ்ருத்தி பூர்விகையான பகவத்ப்ராப்தியைச் சொல்லுகிறது. விழுக்காடுதானே மோக்ஷத்தைத்தருகையாவது-ஆர்த்தப்ரபத்தியாகையாலே அவிளம்பேந பலவ்யாப்தியாகை. (க)"த்ருப்தாநாமைஹிகாமுஷ்மிக ஸக்ருதேவ க்ருதா ஹ்யஸௌ - ஆர்த்தாநாமாஶுபலதா ஸக்ருதேவ க்ருதாஹ்யஸௌ" என்னக்கடவதிறே. அல்லது ஸ்வீகாரந்தானே பலத்தைத்தருமென்னில், ஸ்வீகார்யத்தினுடைய நைரபேக்ஷ்யத்துக்கும், ஸ்வீகர்த்தாவினுடைய பாரதந்த்ர்யத்துக்கும், விருத்தமாமிறே. ஸ்வீகாரந்தனக்கொருகாலும் அதிகாரி விஶேஷணத்வமொழிய, பலஸாதநத்வத்தில் அந்வயமில்லையென்னுமிடம்தோற்றவிறே(உ)"ந்யாஸ இதி ஶ்ரேஷ்டமிவா: - ந்யாஸ இதி ப்ரஹ்மா ஹி பர:" என்றும், "ந்யாஸ இத்யாஹுர்மநீஷிணோ ப்ரஹ்மாணம் - என்றும், ஶ்ருதிசொல்லிவைத்தது. ஆகையாலே, விழுக்காடுதானே வீடருளுமென்றது, ஆர்த்த ப்ரபத்தியினுடைய அவிளம்ப பலவ்யாப்தியைச் சொல்லிற்றாமித்தனை. (க)

---

இரண்டாம்பாட்டில், "ஆசைமிகுசிந்தையராய்" என்றவிடத்தில் சொன்ன ப்ராப்யருசிதான், பரபக்த்யாதி ரூபையாயிறேயிருப்பது; அந்த பரபக்தி பிறந்தவர்களிருக்கும்படியை யருளிச்செய்கிறாரிப்பாட்டில்.

வ்யா;—(நரகும் சுவர்க்கமும்) ஸ்வர்க்கநரகஶப்தங்கள் தாம், புண்யபாபபலாநுபவ பூமிகளுக்குவாசகங்களாகப்ரஸித்தங்களாயிருக்கச்செய்தே, ஸுக துக்கங்களுக்குவாசகங்களுமாயிருக்குமிறே. ஆகவிறே (௩)"துன்பமுமின்பமும்" என்கிற பாட்டுகளுக்குவ்யாக்யாநம்செய்கிறபூர்வாசார்யர்கள், "இன்பமில்வெந்நரகாகியினியநல் வான் சுவர்க்கங்களுமாய்" என்கிறவிடத்துக்கு, "உலகங்களுமாய்"

---

(க) பகவச்சாஸ்த்ரே. (உ) தை-நா. (௩) தி-வாய்-௩-க௦.

என்கிறவிடம் ஆர்ஜநபூமியைச்சொல்லிற்றாகில் இவைபோக(ஹோம) பூமிகளாகின்றன. அன்றிக்கே அங்குபோகபூமியைச்சொல்லிற்றாகில் இங்கு ஸுகதுக்கங்களே யாகிறதென்றருளிச்செய்தது.

(நாண்மலராள் கோனைப்பிரிவும் பிரியாமையுமாய்) நாண்மலராள்கோனைப்பிரிவு நரகும், பிரியாமைசுவர்க்கமுமாயென்றந்வயம். அதாவது, செவ்விதாமரைப்பூவை வாஸஸ்தாநமாகவுடையபெரிய பிராட்டியாருக்கு வல்லபனானவனை விஶ்லேஷித்திருக்கை துக்கமும், ஸம்ஶ்லேஷித்திருக்கைஸுகமுமாமென்கை. பரபக்தியாவது தத்ஸம்ஶ்லேஷ விஶ்லேஷைக ஸுக துக்கத்வமிறே. பெருமாள் காட்டுக்கெழுந்தருளுகிறபோது, பிராட்டி நானும் கூடப்போவேனென்ன, புரவாஸத்துக்கும் வநவாஸத்துக்குமுண்டான விசேஷத்தை தர்ஶிப்பித்து, ஆனபின்பு, காட்டிலேபோமது துக்கம், படைவீட்டிலே யிருக்குமது ஸுகமென்றுபெருமாளருளிச்செய்ய, பிராட்டி, அங்ஙனல்ல, ஸுக துக்கங்கள் வ்யக்திதோறும்வ்யவஸ்திதமாய்க்காணுமிருப்பது; (க) "யஸ்த்வயா ஸஹ ஸஸ்வர்க்கோ நிரயோ யஸ்த்வயாவிநா - யஸ்த்வயாஸஹஸஸ்வர்க்கோ நிரயோயஸ்த்வயாவிநா" என்று, யாதொன்று உம்மோடு பொருந்துமது ஸுகமாகிறது, உம்மையொழியப் படைவீட்டிலிருக்குமிருப்பு துக்கமாகிறது, "இதிஜாநந் -இதிஜாநந்" தந்தாமுக்கில்லாதவை பிறர்பக்கலிலே கற்றறியவேணுங்காணும், "பராம்ப்ரீதிம்-பராம்ப்ரீதிம்" உம்மைப்போலேகிறுத்தல்லகாணுமென்னுடைய ப்ரீதியிருப்பதென்ன, நம்மிலுமுனக்குப்ரீதிவிஷயமாகச்சொன்னாய், இதுக்குநம்மைச்செய்யச்சொல்லுகிறதென்னென்ன, "கச்சராம மயாஸஹ" "அக்ரதஸ்தே கமிஷ்யாமி" "கச்சராம மயாஸஹ" "அக்ரதஸ்தேகமிஷ்யாமி" என்றுநாம் புறப்பட்டபடியே, என்னை முன்னேபோகவிட்டு, பின்னேவரப்பாருமென்றாளிறே ஏகாயநையாகையாலே, "த்வயாஸஹ" "த்வயாவிநா" "த்வயாஸஹ" "த்வயாவிநா" என்றாளிறே. அல்லாதாரெல்லாரும் மிதுநாயநராகையாலே, நாண்மலராள்கோனைப்பிரிவும் பிரியாமையுமாயென்றருளிச்செய்கிறாரிவர். (உ) "ந வஸீதா த்வயா ஹீநா ந வாஹமபி ராகவ, நசஸீதா த்வயாஹீநா நசாஹமபிராகவ" என்று பிராட்டியோடு ஸமபரக்ருதியாக இளையபெருமாள் தம்மையருளி

(க) ரா-அயோ-௩௦-௨௮. (உ) ரா-அயோ-௫௩-௩௧.

ச்செய்தது, விஶ்லேஷாஸஹதை இரண்டுதலைக்குமொக்குமென்று தோற்றுகைக்காக. அல்லது அவளைப்போலேஏகாயநராய்ச்சொன்னவரன்றே. (க) "பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே । அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஸ்ஸ்வபதஶ்ச தே-பவாம்ஸ்து ஸஹவைதேஹ்யா கிரிஸாநுஷுரம்ஸ்யதே। அஹம்ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஸ்ஸ்வபதஶ்சதே" என்றிருக்குமவரிறே.

(துரிசற்று) அந்யபரதையாகிற தோஷமற்று. அதாவது-இப்படியிருந்துள்ள ப்ரேமமுண்டானால், அத்தை ப்ராப்தி ஸாதநமாகக்கொள்ள முபாஸகரைப்போலன்றிக்கே, போஜநத்துக்கு க்ஷுத்துப்போலே அத்தை ப்ராப்தி ருசியாக்கி, இதின் பக்கல் உபாயத்வ ப்ரதிபத்தி பண்ணுகையாகிற தோஷமற்றிருக்கை.

(சாதகம்போல் நாதன்றன தருளே பார்த்திருத்தல்) அதாவது, வர்ஷதாரையல்லது தரியாதசாதகம், ‡க்ருஷ்ணார்த்தமாய்நாக்கொட்டு மளவிலும் பூக(ஹேம)தமான ஜலத்தைப்புரிந்துபாராதே, வர்ஷத்தையே பார்த்திருக்குமாபோலே, ப்ராப்தாவும் ப்ராபகனும் ப்ராப்திக்கு கப்பானு மவனேயாம்படி, இவ்வாத்மாவுக்கு வகுத்த ஸ்வாமியாயிருக்கு மவனுடைய பரமக்ருபையே ப்ராப்திஸாதநமென்று நிஷ்கர்ஷித்து, (உ) "துணியேனினிநின்னருளல்லது"(௩) "நினருளேபுரிந்திருந்தேன்" என்று அவனுடைய வருளையேபார்த்திருக்கையென்றபடி. (ச) "வ்ருஷ்டிஜலம் யதா சாதகோ யாசதே த்ருஷார்த்த: । ரக்ஷ்யரக்ஷகயோரேதல் லக்ஷ்யலக்ஷணமேதயோ: - ப்ரபந்நஸ்சாதகோயத்வத்ப்ரபத்தவ்யஃகபோதவத் । ரக்ஷ்யரக்ஷகயோரேதல்லக்ஷ்யம்லக்ஷணமேதயோ:" என்னக்கடவதிறே.

(கோதிலடியார் குணம்) அதாவது-அடியாரென்று பேரிட்டு, ப்ராப்யாந்தரங்களிலேயாதல், ப்ராபகாந்தரங்களிலேயாதல், ஸங்கம்பண்ணி யிருக்கும் குற்றமின்றிக்கே, ஸ்வஶேஷத்வாநுரூபமாக ஸாத்ய ஸாதநங்களிரண்டு மவனே யென்றிருக்கு மவர்களுடைய ஸ்வபாவமென்றபடி. ஆகையாலிப்பாட்டில் பூர்வார்த்த(மு-ம்)த்தாலே ஸாத்யமவனென்னுமிடமும், உத்தரார்த்தத்தாலே ஸாதநமுமவனென்னுமிடமும் தோற்றச்சொல்லி, இப்படி யிருக்கைகோதிலடியார் குணமென்றருளிச் செய்தாராயிற்று.

---

(க) ரா-அயோ-௩௧-உ௫. (உ) தி-மொ-கக-அ அ. (௩) பெரி-தி-௫-௪-௧,
‡ (பா) த்ருஷார்த்தமாய்.

மூ.—ஆனையிடர்கடிந்த வாழியங்கையம்புயத்தாள்
கோனைவிடில் நீரிற்குதித்தெழுந்த—மீனனவே
ஆக்கைமுடியும்படி பிறந்தலன்னவன்றாள்
நீக்கமிலாவன்பர் நிலை. (௩)

மூன்றாம்பாட்டு. இதில் கீழ்ச்சொன்ன பரபக்தியினுடைய முற்றுதலான பரமபக்திபிறந்தவர்களுடைய நிலையை யருளிச்செய்கிறார்.

வ்யா;--(ஆனையிடர்கடிந்த)(க)"ஸரோவக்ஷோ ஸவமேஷு, ஜநவஸா விம்ஸதயஷ்ஷிம்" "ஸதா நாமவாஸுதோ நு நாராயணவாராயணஃ-பரமாபதமாபந்நோ மநஸாசிந்தயத்தரிம்" "ஸதுநாகவரஸ்ஸ்ரீமாந்நாராயணபராயணஃ" என்கிறபடியே, தேவஸம்வத்ஸரத்திலே ஆயிரம்ஸம்வத்ஸரம் முதலை நீருக்கிழுக்க, தான் கரைக்கிழுக்க, அலைச்சல்பட்டு, அதுக்குத்தன்னிலமாகையாலும், அபிமத ஸித்தியாலும்ப(வ)லம்வர்த்தி(யி)க்கையாலும், தனக்குத்தன்னிலமல்லாமையாலும் அபிமதாலாபத்தாலும் பலம் க்ஷயிக்கையாலும், துதிக்கை முழுத்தும்படியான தசைவிளைகையாலே இனியிதுக்கு மேலில்லையென்னும்படியான ஆபத்தையடைந்து இத்தசையில்விரோதிநிரஸந சீலனான ஸர்வேஸ்வரனே நமக்கு ரக்ஷகனென்றநுஸந்தித்து, (உ) "நாராயணாவோ" என்கிறபடியே கூப்பிட்ட கஜேந்த்ராழ்வானுடைய துஃக்கத்தைப்போக்கின. இவனுக்கு துஃக்கமாகிறது—முதலையின் வாயிலே யகப்படுகையாலே சரீரமழிகிறதென்றல்ல; கையில் பூ செவ்வியழியாமே திருவடிகளிலே சாத்தப்பெறுகிறிலோமென்னுமது. (௩) "நாஹம்கஜே ஸ்வஸ்யாஸ்ய த்ராணாய ஜயாஸதேந । க்ரூஹஸ்தஸ்ய த்வாரவியோகவிஹ்வலம் ஹரேஃ நாஹங்களேபரஸ்யாஸ்ய த்ராணார்த்தம்மதுஸூதந । கரஸ்தகமலாந்யேவபாதயோரர்ப்பிதும்ஹரேஃ" என்றாரிறே. அப்படி யிருந்துள்ள துஃக்கத்தை அவன் நோவுபடுகிற தசையிலேசென்று முகங்காட்டிப்போக்கினபடியைச் சொல்லுகிறது.

(ஆழியங்கை) திருவாழியை யழகிய கையிலேயுடைய, கையுந்திருவாழியுமாய்க் கொண்டாயிற்றப்போது சென்றது. (௪)ஃமழு

(க) விஷ்ணுதர்ம. (உ) சிறியதிருமடல். (௩) வி-தர்ம. (௪) தி-வாய்-௩-க.

ங்காதலைநுதியசக்கர நல்வலத்தையாய்த் தொழுங்காதற்களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே" என்றாரிறே யாழ்வார். கையில் திருவாழியை யிருந்ததறிந்திலன், அறிந்தானாகில் இருந்தவிடத்தேயிருந்து அத்தையேவிக் காரியங்கொள்ளலாமிறே. அறிந்தாலுமப்படிச் செய்யப்போகாதாயிற்று; "தொழுங்காதற்களிறு" என்கிறபடியே, கையும் திருவாழியுமான வழகுகாண வாசைப்பட்டிருக்கிறவனாகையாலும், கையில் பூ திருவடிகளில் சாத்தவாசைப்பட்டிருக்கிறவனாகையாலும், சென்று அவனுடைய துக்கத்தைத் தீர்க்கவேண்டுகையாலே. அவ்வளவுமன்றிக்கே சென்றவிடந்தன்னில் இவனுக்கு காற்கட்டான முதலையை நிரஸித்ததும் திருவாழியைக்கொண்டிறே; (௧) "குட்டத்துக்கோள்முதலை துஞ்சக்குறித்தெறிந்த சக்கரத்தான்" என்கிறபடியே.

(அம்புயத்தாள்கோனை). நளிநவாஸிநியான பெரியபிராட்டியார்க்கு நாயகனானவனை. இதுவும் ஸாபிப்ராயம். (௨) "தேவீஹஸ்தாப்ஜஜஸ்ய: - தேவிஹஸ்தாம்புஜேப்ய:" இத்யாதிப்படியே, பாதாப்ஜ ஸம்வாஹிநிகள் திருவடிகள் பிடிக்க, திருவநந்தாழ்வானென்கிற படுக்கையில் பெரிய பிராட்டியாரையும் திருமார்பிலே யணைத்துக்கொண்டு பள்ளிகொண்டருளா நிற்கச் செய்தேயிறே, இவனுடைய வார்த்தநாதம் திருச்செவிபட்டது. அப்போதவர்கள் கையில் நின்றும் திருவடிகளை வாங்கி, திருப்படுக்கையினின்றும் சடக்கென வெழுந்திருந்து, திருக்கண்களை மலரவிழித்து, சுற்றும்பார்த்து, பிராட்டியுடைய திருமுலைத்தடத்தில் குங்குமக்குழம்பிலே பற்றிக்கிடக்கிற திருமார்பையும் அதில் நின்றும் வாங்கி, பின்னையிறே, (௩) "ஸதந்த்ரு தவஸ்வைகி வ்யூஹிதஹஸ்தய-அதந்த்ரிதசமூபதி ப்ரஹிதஹஸ்தம்" இத்யாதிப்படியே, பெரியத்வரையோடே யெழுந்தருளி, ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய துக்கத்தைப்போக்கிற்று. அத்தைப்பற்றவும், ப்ரஜாரக்ஷணம் பண்ணினைதுகண்டுகக்கும் மாதாவைப்போலே, இது கண்டுகளிப்பளென்று செய்தருளுகையாலும், அம்புயத்தாள்கோனென்கிறது. இத்தாலாஸ்ரிதருடைய வாபத்தசைகளிலேசென்றுஉதவி ரக்ஷிக்குமவனாய், அவர்களை ரக்ஷி

(௧) ௩-திருவ-௧௧. (௨) (௩) ரஸ்த,

மூ,—மற்றொன்றை யெண்ணாதே மாதவனுக் காட்செயலே
உற்றதுவென் றுளந்தெளிந்து—பெற்ற
பெரும்பேற்றின் மேலுளவோ பேறென்றிருப்பார்
அரும்பேறு வானத்தவர்க்கு. (ச)

---

த்தாலது தன் பேறாகக்கொண்டுகக்கும் பெரிய பிராட்டியார்க்கு வல்லபனானவனென்கை.

(விடில்) இப்படி யிருக்கிறவனை விஸ்லேஷிக்கில் (நீரில் குதித்தெழுந்த மீனனவே) நீரிலே நின்றும் குதித்துக்கிளர்ந்து, அத்தைப்பிரிந்த மத்ஸ்யம்போலே.

(ஆக்கை முடியும்படி பிறத்தல்) ஶரீரம் நஶிக்குமபடியானவவஸ்த்தை பிறக்கை. ஸம்ஶ்லேஷத்தில் ஸுகமும் விஶ்லேஷத்தில் துஃகமுமாய்ச் செல்லும் பரபக்தியைக் காட்டில் பரமபக்திக்கு விசேஷம், விஶ்லேஷத்தில் ஸத்தாஹாநி பிறக்கையிறே. அத்தை ஸத்ருஷ்டாந்தமாக வருளிச்செய்தாராயிற்று.

(அன்னவன் தாள்நீக்கமிலாவன்பர் நிலை). கீழ் அம்புயத்தாள் கோனென்றவனை அன்னவனென்று பராமர்ஶிக்கிறார். அன்னவனென்றது-அப்படிப்பட்டவனென்றபடி. அங்ஙவா, மத்ஸ்யத்துக்கு ஜலம்போலே, இவ்வாத்மாவுக்கு தா(ர)கனாயிருக்குமவனென்னவுமாம். தாள் நீக்கமிலா வன்பாவது - அவன் திருவடிகளைப் பிரியஸஹியாத படியான ப்ரேமம். இப்படி யிருந்துள்ள ப்ரேமத்தையுடையரானவர்களுடைய ஸ்வபாவம், அவனை விஶ்லேஷிக்கில் ஜலாதுத்(த்ரு)தமானமத்ஸயம்போலே ஸத்தாஹாநிபிறக்கும்படியாகவென்று கீழோடே ஸம்பந்தம். "நவஹீதாஸ்வயா ஹீநா நஆ ஹஂவிராவவ । உஹூஹூதஹஂவிஜீவாவொ ஜவா நூக்ஷூாவிவொஷூதள - நசஸீதாந்வயாஹீநா நசாஹமபிராகவ । முஹூர்த்தமபிஜீவாவொ ஜலாந்மத்ஸ்யாவிவோத்ருதௌ" என்றாரிறே இளையபெருமாள். (டு)

---

நாலாம்பாட்டு. கீழ்ச்சொன்ன மூன்றுபாட்டாலே த்வயத்தில் பூர்வவாக்யத்தால் ப்ரதிபாதிக்கப்படுகிற ப்ரபத்தியினுடைய முக்யவேஷத்தையும், அதுக்குஹேது, ஆர்த்தாதிகாரியாலே பண்ணப்படுகையாலே அதிகாரியுடைய வார்த்திக்கு ஹேதுவானபாபக்தி

தசையின் நிலையிருக்கும்படியையும், பரமபக்தி தசையின் நிலையிருக்கும்படியையும் அருளிச்செய்தார். இனியுத்தரவாக்யத்தால் ப்ரதிபாதிக்கப்படுகிற பரமபுருஷார்த்தமான கைங்கர்யத்தின் சீர்மையையறிந்து, ப்ரயோஜநாந்தர ஸங்கநிவ்ருத்தி பூர்வகமாக, ஸ்வரூபாநுரூபமானவதிலே நிஷ்டரானவர்களுடைய வைபவத்தை அருளிச்செய்கிறார்.

(மற்றொன்றையெண்ணாதே) அதாவது - கைங்கர்யரூப புருஷார்த்தத்துக்கு அந்யமான தொன்றைப் புருஷார்த்தமாக(ம) கணியாதேயென்கை. அந்ய புருஷார்த்தமாவது - இஹலோக போக(ஸௌம)மும் பரலோகபோகமும், ஆத்மாநுபவமுமிறே. அவைற்றின்பேர்சொல்லுகையும் அஸஹ்யமாகையாலே மற்றொன்றையென்கிறது. விரும்பாதே யென்னாதே எண்ணாதே யென்றது - அவைதன்னையொரு புருஷார்த்தமாக நினைத்தாலிறே விரும்புவதென்றது. அவற்றை விரும்புவார், தாஸ்யரஸமறியாதவர்களிறே. தாஸ்யரஸஜ்ஞரானவர்களுக்கு, அவை ஊஷரஜலஸேவைபோலே விரஸமாய், ஹேயமாயிறே யிருப்பது. (க) "भोगा इमे विधिशिवादिपदं च किंच स्वात्मानुभूतिरिति या किल मुक्तिरुक्ता । सर्वं तदूषजलजोषमहं जुषेय हस्त्यद्रिनाथ तव दास्यमहारसज्ञः - போகாஇமே விதிசிவாதிபதஞ்ச கிஞ்ச ஸ்வாத்மாநுபூதிரிதியாகிலமுக்திருக்தா | ஸர்வம்ததூஷஜல ஜோஷமஹம்ஜுஷேய ஹஸ்த்யத்ரிநாததவ தாஸ்யமஹாரஸஜ்ஞ:" என்றாரிறே ஆழ்வான்.

(மாதவனுக்காட்செயலே) ஸ்ரீயःபதிக்கடிமை செய்கையே. இத்தால் கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியொரு மிதுநமென்னுமதுவும், கைங்கர்யமே புருஷார்தமென்னுமதுவும் சொல்லுகிறது. கைங்கர்ய ப்ரதிஸம்பந்தி ஒருமிதுனமென்னுமிடம், உத்தரவாக்யத்தில் ப்ரதமபதத்திலே ஸுஸ்பஷ்டமாகச்சொல்லாநின்றதிறே திருமந்த்ரத்தில் த்ருதீயபதத்திலும், கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியொரு மிதுனமாயிருக்கச்செய்தே, ஆர்த்த(ம-ஷ)மாகையாலே அவிஶதமாயிருக்கும்; அத்தைப்பற்றவிறே, இதிலே திருமந்த்ரத்தில் சொன்ன ப்ராப்யத்தை விஶதமாக வநுஸந்திக்கிறதென்று பிள்ளைலோகா

(க) வர-ஸ்த-

சார்யரருளிச்செய்தது. கைங்கர்யமே புருஷார்த்தமென்னுமது திருமந்த்ரத்திலும், இங்குமொக்கச்சொல்லுகையாலே ஸுஸ்பஷ்டம். (௧) "ஸவிசேஷேஷ்வசேஷேஷு ஸ்வபாவஸ்தாஸு சாச்யுத | கிங்கரோஸ்மி ஹ்ருஷீகேச பூயோபூயோஸ்மி கிங்கர: — ஸர்வேஷு தேசகாலேஷு ஸர்வாவஸ்தாஸு சாச்யுத | கிங்கரோஸ்மி ஹ்ருஷீகேச பூயோபூயோஸ்மி கிங்கர:". என்னக்கடவதிறே. (௨) "ஒழிவில் காலமெல்லா முடனாய்மன்னி, வழுவிலா வடிமை செய்யவேண்டுநாம்" என்றாரிறே யாழ்வார்.

(உற்றதிதுவென்று)சீரியதிதுவென்று.(௩)"உறுவதிதுவென்றுனக்காட்பட்டு" என்றும், (௪) "நீள் குடக்கூத்தனுக்காட்செய்வதேயுறுவதாவது" என்றும், இதுவுமவர் தாமேயருளிச் செய்தாரிறே. இது உற்றதென்கையாலே, அல்லாத புருஷார்த்தங்கள் ஸ்வரூப விருத்த(ஐ)ங்களாகையாலே உறாததென்னுமிடமும் ஸித்தமிறே. ஆகவிரண்டு பதத்தாலும், (௫) "திருமாலே நானு முனக்குப்பழவடியேன்" என்கிறபடியே, மிதுநசேஷ பூதனானவனுக்கு, (௬) "அடிமைசெய்வார் திருமாலுக்கே" என்றும், (௭) "திருமாற்கரவு சென்றால்குடையாம்" என்றும் சொல்லுகிறபடியே, மிதுந கைங்கர்யமே புருஷார்த்த மென்னுமிடமும்இவனுடைய ஸ்வரூபாநுரூபத்வநிபந்தநமான கௌரவமும், சொல்லிற்றாயிற்று.

(உளந்தெளிந்து) இக்கைங்கர்யந்தன்னில் ஸ்வப்ரயோஜந புத்திக்கடியான அஹங்காரமமகாரங்கள்போகையாலே,(௮)"தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே" என்றும்,(௯)"உனக்கே நாமாட்செய்வோம்" என்றும், பரமப்ரயோஜநமென்று செய்யும்படி ஹ்ருதயம் தெளிந்து. இத்தால், உத்தரவாக்யத்தில்,நமஸ்ஸப்த்தார்த்தம் சொல்லப்பட்டது.

(பெற்ற பெரும்பேற்றின் மேலுளதோ பேறென்றிருப்பார்) அதாவது-இக்கைங்கர்யமாகிற புருஷார்த்தம்லப்த(ஐ)மானால், இப்படி லப்தமானவிம்மஹா புருஷார்த்தத்துக்கு மேலுமொரு புருஷார்த்தமுண்டோ வென்றிருக்கு மவர்களென்கை. பரமபதத்தை

(௧ ஜிதந்தே. (௨) தி-வாய் ௩-௩ ௧. (௩) தி-வாய்-௯-௫-௪.
(௪) தி-வாய்-௪-௧௦-௧௦ (௫) திருப்பல்லா. (௬) தி-வாய்-௬.
(௭) ௧-திருவ-௩௩. (௮) தி-வாய்-௨-௯. (௯) திருப்பாவை-௨௯

மூ.—தீர்த்தமுயன்றாடுவதும் செய்தவங்கள் செய்வனவும்
பார்த்தனைமுன்காத்தபிரான் பார்ப்பதன்முன்—சீர்த்துவரை
மன்னனடியோமென்னு வாழ்வுநமக்கீந்ததற்பின்
என்னகுறைவேண்டுமினி. (ரு)

---

விரும்புகிறது, நித்ய விபூதியாகையாலும், ஶுத்தஸத்வமாகை யாலே ஜ்ஞாநாநந்த ஜநகமாகையாலும், இக்கைங்கர்யமாகிற புரு ஷார்த்தத்துக்கு விச்சேதமற்ற தேசமென்னுமத்தைப்பற்றவிறே. ஆகையாலே, மேலுள்ளதோ பேறென்னத்தட்டில்லை, ஆகவிப்படி யிருக்குமவர்கள்.

(அரும்பேறுவானத்தவர்க்கு) அதாவது—அஹ்ருதஸஹஜதா ஸ்யராய், கைங்கர்ய நிரதராய், பகவதேகபோக(ஹோம)ராயிருக் கும் பரமபதவாஸிகளுக்கும், பெறுதற்கரிய புருஷார்த்த பூ(ஹூ)த ராவரென்கை. இத்தால் (க)*ஸதாபஶ்யந்தி-ஸதாபஶ்யந்திப்படியே *அப்பொழுதைக்கப்பொழுதென்னாராவமுத மாகவநுபவிக்கிற விஷயத்திற்காட்டிலும், தங்களை துர்லப புருஷார்த்தமாக நினைத் தநுபவிக்கவாசைப்படும்படி யாவர்களென்றதாயிற்று. (உ) "யே ஸ்ரூஹந் ஸமவஹாஸ்ஹோமைகநிரதா, ஷ்ஸா | கேவிரயாகி யயஃ வைராக்ஷாஸ்ரவைக்ஷணநீவாஸிநாழ - யேப்ரஹ்மந் பக வத்தாஸ்ய போகைகநிரதாஸ்ஸதா | தேப்ரியாதிதயஃ ப்ரோக்தாஶ் ஶ்ரீவைகுண்டநிவாஸிநாம்" என்றிவ்வர்த்தம் ஶ்ரீஶாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டதிறே, (ச)

---

அஞ்சாம்பாட்டு. பூர்வவாக்யத்தால் ப்ரதிபாதிக்கப்படுகிற ஸித்தோ(ஸோ)பாயவரணம், இதரோபாயாய பரித்யாகத்தை யங்க மாக வுடைத்தாயிருக்குமென்னுமத்தை சரமஶ்லோகமுகத்தாலே யறிந்து, உபாயரூப ப்ரவ்ருத்திகளில் அந்வயமற்று, ஸ்வரூபாநு ரூபமாக அவன் பக்கலிலே ந்யஸ்தப(ஹ)ரராய், ஸ்வீகாரகார்த் தார்த்யத்தை யநுஸந்தித்திருக்கு மவர்கள்படியை, ஸ்வநிஷ்டாநு ரூபேண வருளிச்செய்கிறார்.

(தீர்த்தமுயன்றாடுவதும்) கங்கா, யமுநா, ஸரஸ்வதீ ப்ரப்ருதிக ளான தீர்த்தங்களிலே, பாபக்ஷயார்த்தமாகப்பெரிய உத்யோகத்

---

(க) புருஷஸூ- (உ) ஶ்ரீஶாஸ்த்ரே.

தோடே அவகாஹிக்குமதுவும். தீர்த்தங்களானவை - பாவநஜலங்கள். முயற்சியாவது - உத்யோகம். ஆடுகையாவது - அவைற்றிலே பன்றுநனையப்புகுந்து முழுகுகை.

(செய்தவங்கள்செய்வனவும்) (க) "ஊன்வாடவுண்ணாது" (உ) "போருப்பிடையேநின்றும்" (ங) "வீழ்கனியு மூழிலையு மென்னு மிவையேநுகர்ந்து" இத்யாதிகளிலே சொல்லுகிறபடியே, காம்யமோக்ஷார்த்தமாகச்செய்யப்படும் தபஸ்ஸுக்களைச் செய்யுமவையும். இதுதான், தாநயாகாதிகளுக்கு முபலக்ஷணம்.

(பார்த்தனைமுன் காத்தபிரான் பார்ப்பதன்முன்) அதாவது - உபாயாந்தரங்கள் எல்லா முபதேசிக்கக்கேட்டு அவற்றினுடைய துஷ்கரத்வத்தையும் ஸ்வரூப விருத்த(ஐ)த்வத்தையும் அநுஸந்தித்து ஶோகோவிஷ்டனான அர்ஜுநனை (ச) "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" இத்யாதிகளாலே பூர்வோக்தங்களாயிருந்துள்ள ஸாங்கமான ஸகலதர்மங்களையும், ஸவாஸநமாகவிட்டு, ஸௌலப்யாதிகுண விஶிஷ்டனான வென்னையே நிரபேக்ஷோபாயமாகப்பற்று; ஸர்வஜ்ஞத்வாதிகுண விஶிஷ்டனான நான் உன்னுடைய அஜ்ஞத்வாதிகளை அநுஸந்தித்து, என்பக்கலிலே ந்யஸ்தப(ஹ)ரனான உன்னை, மத்ப்ராப்தி ப்ரதிபந்தக ஸகலபாபங்களில் நின்றும் விடுவிக்கக்கடவேன். ஆனபின்பு, ஶோகியாதேகொள்ளென்று உபதேசித்து முன்பு ரக்ஷித்தருளின மஹோபகாரகனானவன் கடாக்ஷித்தருளுவதற்கு முன்பென்கை. இத்தால் சரமஶ்லோகார்த்தம் நெஞ்சில் படுவதற்கு முன்பென்றபடி.

(சீர்த்துவரை மன்னன்) (ரு) "பதினாறாமாயிரவர் தேவிமார் பணிசெய்யத்துவரை யென்னுமதில்நாயகராகி வீற்றிருந்த மணவாளர்" என்கிறபடியே, தனக்கநந்யார்ஹராய், அநந்யோபாயோபேயங்களில் அந்வயமற்றிருந்த திவ்ய மஹிஷிகளுக்கு நாயகனாய்க்கொண்டு ஸ்ரீமத்த்வாரகைக்கு நிர்வாஹகனானவன்.

(அடியோமென்னு வாழ்வு நமக்கீந்ததற்பின்) அவனுக்கு நாம் சேஷபூதரென்றறிந்து, ஸ்வாரஸ்யார்த்தமாக ஸ்வப்ரவ்ருத்தியிலந்வயமற்றிருக்கையாகிற ஸம்பத்தை நமக்குத் தந்தருளினபின்பு.

---

(க) தி-மொ-ங-உ-க. (உ) க-திருவ. (ங) பெரியதிருமடல்.
(ச) கீ-கஅ-கூ-கூ. (ரு) பெரி-தி-ச-கூ-ச,

அடியோமென்கையாலே, ஜ்ஞாநங்களிலுங் காட்டில் ஆத்மாவுக்கு ஶேஷத்வமே அந்தரங்க நிரூபக மென்னுமிடமும்,வாழ்வென்கையாலே, இத்தையறியவே ஸ்வயத்ந நிவ்ருத்தி ஸ்வப்ரயோஜநநிவ்ருத்தி ஸித்திக்கையால், இதுவே ஆத்மாவுக்கு ஸம்பத்தென்னுமிடமும்,நமக்கீந்தத்தம்பின்னென்கையாலே, அநாதிகாலமிஸ்ஸம்பந்த முண்டாயிருக்கச் செய்தே, இத்தை யிழந்துகிடந்த நமக்கு இப்ரபத்தி பிறந்ததும் அவனருளாலே யென்னுமிடமும் சொல்லுகிறது. இப்படி அவனிவ்வாழ்வை நமக்குத்தந் தருளினபின்பு.

(என்னகுறை வேண்டுமினி) அதாவது - இனிமேலுள்ளகாலம், உபாயோபேயங்களிலொன்று நிமித்தமாகக் குறை படவேணுமோவென்கை. இத்தால் அவன் "மா ஶுச:" என்றருளிச்செய்தபடியே, நங்காரியத்தில நாம் கரைச்சலற்று நிர்ப(ர)ராயிருக்குமத்தனையன்றோ வென்றதாயிற்று (க) "தாவத் கர்ஜந்தி தீர்த்தாநி ஸரிதஸ்ஸாகராணிவ | யாவந்ந ஸ்ரூயதே வி ஷ்ணோ ஹரிநாமஜந: - தாவத்கச்சேத்து தீர்த்தாநிஸரிதஸ்ஸாகராம்ஸிச | யாவந்நாபூச்சபூபால விஷ்ணுபக்திபராம்மந:" என்று ஸ்ரீ விஷ்ணுதர்மத்தில்சொல்லப்பட்டவசநமும்,(உ)"கிம் தஸ்ய தாநைர் கிம் தீர்த்தை: கிம் தபோபி: கிமத்வரை: | யோ நித்யம் த்யாயதே தேவம் நாராயணமநந்யதீ: - கிந்தஸ்யதாநை: கிந்தீர்த்தை: கிம் தபோபி:கிமத்வரை:|யோநித்யம் த்யாயதே தேவம் நாராயணமநந்யதீ:" என்று, இதிஹாஸ ஸமுச்சயத்தில் சொல்லப்பட்ட வசநமும், இப்பாட்டில் பூர்வவாக்யத்தில் சொல்லப்பட்ட அர்த்தத்துக்கு ஸம்வாத(ங்)மாக அநுஸந்தேயம். இதற்குப் பொருள்; "நின்றவா நில்லா நெஞ்சு" என்கிறபடியே, ஒன்றிலும் நிலை நில்லாமலோடித்திரியும் மநஸ்ஸானது, யாதோரளவு மிவ்வாத்மாவுக்கு ப்ராப்யமுமாய்,ப்ராபகமுமாயிருக்கும்அவன் பக்கல்,பக்தியிலூற்றமுடைத்தாகாதவ்வளவும், ஸரித்துக்களும், ஸரஸ்ஸுக்களுமாய்க்கொண்டு பாவநமான தீர்த்தங்களைக் குறித்துப் போவானென்றும் - யாவனொருவன், அந்ய விஷயத்தில் மநஸ்ஸற்று, த்யேயதமாநஜ்ஞாநாதிகுணயுக்தனாய், நாராயண ஶப்த வாச்யமான சேதநஸமூஹத்துக்கு உபா

(க) விஷ்ணுதர்மம். (உ) இதிஹாஸஸமுச்சயே-ரு௨.

ரூ,—புண்டரீகைக் கேள்வனடியா ரப்பூமிசையோன்
அண்டமொருபொருளா வாதரியார்—மண்டி
மலங்கவொரு மீன்புரண்ட மாத்திரத்தாலார்த்துக்
கலங்கிடுமோ முந்நீர்க்கடல். (சு)

யோபேயங்க ளிரண்டும் தானுகையாலே, நாராயணஶப்த வாச்ய னவனை, ஸர்வகாலமு மப்படியே யநுஸந்தியா நிற்குமவனுக்கு தாந, தீர்த்த, தபோத்வ(யூ)ரங்களாலென்ன ப்ரயோஜநமுண்டென் றும் சொல்லிற்றிறே. ஆகையாலிவை ஸம்வாத(ச)மாகக்குறை யில்லை. (ரு)

ஆறும்பாட்டு. இப்படி துஷ்கரத்வாதி தோஷ தர்ஶநத்தா லே உபாயாந்தர ஸங்கமறக் கூடிற்றாகிலும், அநாதிகாலம் ஶப்தாதி களிலே வாஸனை பண்ணிப்போந்த ஆத்மாவுக்கு, உபேயாந்தரமா ன வைஶ்வர்யத்தைக் கண்டாலாசை செல்லாதொழியுமோ?; அந் தவைஶ்வர்யோத்ரேகந்தான் இவனெஞ்சைக் கலங்கப் பண்ணுதோவென்ன, பகவத்தாஸ்யரஸஜ்ஞரானவர்கள், ஐஶ்வர்யத் துக்கு மேலெல்லையான ப்ரஹ்மபதத்தையு மொரு புருஷார்த்த மாக விரும்பார்கள்; நெஞ்சைக் கலக்கவுமாட்டாதென்கிறார்.

(புண்டரீகைக்கேள்வ னடியார்) பத்மோத்பவையாய், பத்ம வாஸிநியா யிருக்கையாலே, பத்மிநீயென்று திருநாமத்தையுடைய வளான, பெரியபிராட்டியார்க்கு வல்லபனானவனுடைய திருவடி களில் ஶேஷத்வமே தங்களுக்கு நிரூபகமாக வுடையவர்கள். இத் தால், (க) "பண்டைநாளாலே நின்திருவருளும் பங்கயத்தாள்திரு வருளுங்கொண்டு" என்கிறபடியே, அவர்களிருவருடையவும் விஶேஷகடாக்ஷத்தாலே திருந்தி, தச்சேஷத்வைகநிரூபகராய், தத்தாஸ்யைகரஸரா யிருக்குமவர்களென்கை.

(அப்பூமிசையோனண்ட மொருபொருளாவாதரியார்)ஐஶ்வர் யத்துக்கு மேலெல்லையாக ப்ரஸித்தமாய், திருநாபிகமலோத்பவ னைப்ரஹ்மாவினுடைய வாஸஸ்தாநத்துக்கு ஹேதுவாய், சதுர்தஶ புவநாத்மகமான அண்டத்தை, ஒருசரக்காக வாதரியார்கள். தேஹாத்மாபிமாநிகளுக்கும், ஸ்வதந்த்ரர்க்குமிறே, ஐஶ்வர்யம்

(க). தி-வாய்-கூ-௨-க.

மூ.—தோளார்சுடர்த்திகிரி சங்குடையசுந்தரனுக்கு
ஆளானார் மற்றொன்றிலன்புசெய்யார்—மீளாப்
பொருவரியவிண்ணாட்டில் போகம்நுகர்வார்க்கு
நரகன்றேவிந்திரன்றன் நாடு. (எ)

ரஸாவஹமாய்க்கொண்டு புருஷார்த்தமா யிருப்பது; பகவத்தாஸ்யமறிந்தவர்களுக்கு, விரஸமாய் ஜுகுப்ஸாவிஷயமா யிருக்குமிறே. ஆகையால் அத்தைபாதரிப்பார்களோ? அப்படிச்சொல்லலாமோ?; அந்த ஐஶ்வர்யத்திலுடையகிளர்ப்பம் தன்னையாசைப் படும்படி இவர்கள்நெஞ்சைக்கலங்கப் பண்ணுமோ வென்னுமாகாங்க்ஷயிலே யருளிச்செய்கிறார் மேல்.

(மண்டியித்யாதி) ஒரு மத்ஸ்யமானது, தன்ஶக்தியெல்லாவற்றோடுங் கூடித்தள்ளிக்கொண்டு, நிலைகொலைந்து கலங்கும்படி இடம் வலங்கொண்டு புரண்டமாத்ரத்தால், ஆற்றுநீர் ஊற்றுநீர் வர்ஷஜலமென்கிற ஜலத்ரயயுக்தமான ஸமுத்ரமானது, நிலைகொலைந்து உகளித்துக்ஷுபிதமாமோ அந்தமத்ஸ்யத்தினுடையஸ்புரணத்தால். (க) "ஸமுத்ரஇவகாம்பீர்யே-அப்ரமேயோமஹோததி:" என்கிற ஸமுத்ரம்கலங்கிலன்றோ, ஐஶ்வர்யத்தினுடையகிளர்த்திகண்டால், கம்பீரமான இவர்களுடைய ஹ்ருதயம்கலங்குவதென்று கருத்து. "ப்ரஹ்மாணமிந்த்ரம் ருத்ரம் ச யமம் வருணமேவ ச। நிக்ருஹ்ணீயாதபி ஹரி: கிம் புநஶ்சேதநோ ஜந: - ப்ரஹ்மாண்டமண்டலீமாத்ரம் கிமலோபாயமநஸ்விந: । ஶபரீஸ்புரிதேநாப்தே: க்ஷுப்ததா நைவஜாயதே" என்னக்கடவதிறே. (சா)

ஏழாம்பாட்டு. தாஸ்யச்சுவடறிந்தவர்கள் ஐஶ்வர்யத்துக் கெல்லையான ப்ரஹ்மபதத்தை, விரும்பார்களென்கிறார்கீழ். அவனழகிலே தோற்று அடிமைபுக்கவர்கள் அந்யவிஷயங்களை ஆதரியார்களென்கிறாரிதில்.

(தோளார்சுடர்த்திகிரி சங்குடைய சுந்தரனுக்கு) திருத்தோளோடே சேர்ந்திருந்துள்ள தேஜோரூபமான திருவாழியையும், ஸ்ரீபாஞ்சஜந்யத்தையு முடையனாகையாலே வந்த வழகையுடையவனுக்கு. (உ) "மனைப்பாற்பிறந்தார் பிறந்தெய்தும் பேரின்பமெல்

(க) ரா-யு-கக-நக. (உ) உ-திருவ-சஉ.

லாம் துறந்தார் தொழுதாரத்தோள்'' என்கிறபடியே வெறும்புறத்திலே யாலத்தி வழிக்க வேண்டும்படி யிருக்கிற தன்னழகாலே, ப்ராக்ருத ஸகலவிஷய ஸங்கத்தையு மறுக்கவற்றான திருத்தோள்களோடே (க) ''அணியாராழியும் சங்கமும்'' என்கிறபடியே ஸர்வாபரணங்களும் தாயே யாய்ப்போரும்படியிருக்கிற திருவாழியையும், ஸ்ரீபாஞ்சஜந்யத்தையுமேந்துகையால்வந்த வழகுங்கூடினால், அழகு இரட்டித்திருக்குமிறே.

(சுந்தரனுக்காளானார்) இப்படியிருந்துள்ள வழகையுடையவனுக்கு அவ்வழகுக்குத்தோற்று அடிமையானவர்கள். ''புண்டரீகைக்கேள்வனடியார்'' - என்கிறவிடத்திலே சொன்னதாஸ்யம் ஸ்வரூப ப்ரயுக்தம். இது குணக்ருதம். சுந்தரனுக்கு - என்றும் ஆளானார் - என்றும் சொல்லுகையாலே ஸ்வரூபப்ரயுக்தமான தாஸ்யத்திலே நிற்குமவர்களையும், அப்பேதைக்கப்போ தழகுக்குத் தோற்று எழுதிக்கொடுக்கும்படி பண்ணுமிறே விஷய வைலக்ஷண்யம். ஆகையால் இப்போதழகுக்குத்தோற்று அடிமை புக்கவர்களைச் சொல்லுகிறது.

(மற்றொன்றிலன்புசெய்யார்) அதாவது - அப்படி யடிமையானவர்கள், அவ்விஷயத்துக் கந்யமாயிருக்கும் ப்ராக்ருத விஷயங்களொன்றிலும் ஸ்நேஹம் பண்ணார்களென்கை. அப்ராக்ருதமாய், அதியமநோஹரமாயிருக்கும் விஷயத்தில் வாசியறிந்து, அதிலே தோற்றிருக்குமவர்கள், அத்யாபா(ஹா)ஸமாய், அவிலக்ஷணமானப்ராக்ருத விஷயங்களை விரும்புவார்களோ?; ஐஹிக விஷயங்களிலப்படியிருந்தாலும், இத்தைப்பற்ற அதிவிலக்ஷணமான ஸ்வர்க்காத்யாமுஷ்மிக விஷயங்களைக் கண்டால், அதிலன்பு செல்லாதோவென்னு மாகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார் மேல்.

(மீளாப்பொருவரிய விண்ணாட்டில் போகம் நுகர்வார்க்கு) அதாவது ''ந ச புநராவர்த்ததே ந ச புநராவர்த்ததே - நச புநராவர்த்ததே நசபுநராவர்த்ததே''என்கிறபடியே, புநராவ்ருத்தி ரஹிதமாய், அப்ராக்ருதமாய் ஶுத்தஸத்வமயமாய் நிரவதிகதேஜோரூபமாயிருக்கையாலே உபமாந ரஹிதமாய், (உ)''தத்க்ஷேம

---

(க) திவாய் அ-கூ-கூ (உ) சாந்தோ -

மூ — முற்றப் புவனமெல்லா முண்ட முகில்வண்ணன்
கற்றைத் துழாய் சேர்க்கழலன்றி — பற்றொன்றை
இச்சியாவன்பர் தனக் கெங்ஙனே செய்திடினும்
உச்சியாலேற்று முகந்து. (அ)

---

யோ அஸ்யாத்யக்ஷ: பரமே வ்யோமந்" என்கிறபடியே, பரமாகாஶ ஶப்தவாச்யமான திருநாட்டுள்ளே, போக(ஸாம)த்தை புஜிக்கவேணுமென்னுமாசையுடையவர்களுக்கு.

(நரகன்றோ விந்திரன்றன் நாடு) அதாவது-(க)"க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விஶந்தி-க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விஶந்தி" என்கிறபடியே புண்ய க்ஷயம் பிறந்தவாறே முகங்கீழ்ப்படத் தள்ளி விடும்படி யிருப்பதாய், ப்ராக்ருதமான ஸ்வஸத்ருஶலோகங்கள் பலவற்றையு முடைத்தாய் கர்மவஶ்ய சேதநனை இந்த்ரனுக்கு, போக(ஸாம)ஸ்தாநமான நாடா யிருந்துள்ள ஸ்வர்க்கலோகம் நரகப்ராயமன்றோவென்கை. இத்தால் இந்த விபூதியில் போக(ஸாம)ம், து:காவஹமாயிருக்குமென்றதாயிற்று.(உ)"த்ரைலோக்யாதிகம் ஸர்வம் ப்ரஹ்மாதீநாம் விஷ்ணோ: ஸ்தாநம் ஜகந்நாத:। ஸாமா: ஸாநந்தாநாம் ஶேஷஸ்தாநம் ஸ்தாநம் நித்யாநாம் யோகிநாம் - சத்புதம் ப்ராப்தகாமாயே விஷ்ணோஸ்தேஷாம் மஹாத்மநாம்। போகா:புரந்தராதீநாம்தே ஸர்வே நிரயோபமா:" என்றிவ்வர்த்தம் ப்ரஹ்மாண்ட புராணத்திலே சொல்லப்பட்டதிறே. (எ)

எட்டாம்பாட்டு. அநந்ய ப்ரயோஜநராய்க் கொண்டு தன் பக்கல் ப்ரேமயுக்தரானவர்கள் அடிமை செய்யுமிடத்தில்ஏதேனு மொருபடி செய்தாலும் அவனத்தையுகந்து ஶிரஸா வஹிக்குமென்கிறார்.

(முற்றப் புவனமெல்லா முண்ட முகில்வண்ணன்) ப்ரளயத்திலழியாமே ஸகலலோகங்களையு மொன்றுமொழியாமல் திருவயிற்றிலே வைத்து நோக்குகிறது, தன் பேறென்னுமிடம் வடிவில் புகரிலே தோற்றும்படி யிருந்த காளமேக நிபமான வடிவையுடையவன். இப்போதிதைச் சொல்லுகிறது (ந)"தாயிருக்கும் வண்ணமே உம்மைத்தன் வயிற்றிருத்தி யுய்யக்கொண்டான்" என்கிறபடியே

---

(க) கீ- (உ) ப்ரஹ்மாண்டபுராணம். (ந) தி-மொ-கக-கூ-கூ.

ஆபத்தசையிலே அகில லோகங்களையும் அவை யறியாதிருக்கத் தானறிந்த ஸம்பந்தமே ஹேதுவாக வயிற்றிலேவைத்து ரக்ஷித்தது தன்பேறென்னுமிடம் தன்வடிவிலே தோற்றும்படி யிருந்தவன். இத்தால் அநந்ய ப்ரயோஜநராய்த் தன்பக்கல் ப்ரேமயுக்தரானவர்கள் ஸ்வவிஷயத்தில்பண்ணும் சேஷவ்ருத்திகளை யாதரித்துக்கொள்ளுமென்னுமிடம் தோற்றுகைக்காக.

(கற்றைத்துழாய் சேர்க்கழலன்றி) தன்னிலத்திலுங்காட்டில் திருமேனியோட்டை ஸ்பர்ஶத்தாலே (க) "தழைக்கும் துழாய்" என்கிறபடியே தழைத்திருந்துள்ள திருத்துழாயோடே சேர்ந்திருந்துள்ள திருவடிகளையொழிய. இதுதான் திருவடிகளினொப்பனைக்கெல்லா முபலக்ஷணம்.

( மற்றொன்றை யிச்சியாவன்பர் ) இப்படிபரமபோக்யமான இத்திருவடிகளையொழிய, வேறொரு ப்ரயோஜநத்தை யிச்சியாதபடியான ப்ரேமமுண்டானவர்கள். ப்ரயோஜநாந்தரபரராய் கிஞ்சித்கரிப்பார் (உ) ".தேஹிமே ததாமிதே-தேஹிமேததாமிதே" என்கிறபடியே, கொடுத்துக்கொள்ளுகைக்கிறே கிஞ்சித்கரிப்பது. அங்ஙனன்றிக்கே (ந) "இன்றுவந்தித்தனையும்" இத்யாதிப்படியேகொண்டதுக்குக்கைக் கூலிக்கொடுக்கும்படியான அநந்யப்ரயோஜந(ஹ)பக்திகரானவர்கள்.

(தனக்கெங்ஙனே செய்திடினும்) வகுத்தசேஷியான தனக்கு அடிமை செய்யுமிடத்தில் ப்ரேமபரவஶராய்க்கொண்டு அக்ரமமாகவாதல், ஸக்ரமமாகவாதல், எப்படி செய்யிலும்.

(உச்சியாலேற்கு முகந்து) ப்ரீதனாய்க்கொண்டு ஶிரஸாவஹிக்கும், எங்ஙனே செய்திடினுமுச்சியாலேற்கையாவது - இவன் காலாலே பொகட்டவற்றை அவன் தலையாலே யேற்கை. ஹாரதே மோக்ஷதர்மே "யாஃக்ரியாஸம் ப்ரயுக்தாஸ் ஸ்யு ரேகாந்தகதபுத்திபிஃ। தாஸ்ஸர்வாஶ்ஶிரஸா தேவஃ ப்ரதிக்ருஹ்ணாதிவைஸ்வயம்" பாரதே - மோக்ஷதர்மே யாக்ரியாஸ்ஸம் ப்ரயுக்தாஸ்ஸ்யுரேகாந்தகதபுத்திபிஃ। தாஸ்ஸர்வாஶ்ஶிரஸாதேவஃ ப்ரதிக்ருஹ்ணாதிவைஸ்வயம்" என்னக்கடவதிறே. (அ)

---

(க) பெரி-திரு ௬௩-௬. (உ) யஜு-க-அ. (௩) பார-மோக்ஷ

மூ.— ஆசிலருளா லனைத்துலகுங்காத்தளிக்கும்
வாசமலராள் மணவாளன்-தேசுபொலி
விண்ணாட்டிற்சால விரும்புமே வேறொன்றை
எண்ணாதார் நெஞ்சத்திருப்பு. (௬)

---

அவ;— ஒன்பதாம்பாட்டு; அநந்ய ப்ரயோஜநராய் அடிமைசெய்யுமவர்கள் விஷயத்தில், அவனுக்குண்டான வாதரத்தை யருளிச்செய்தார் கீழ். அவ்வளவன்றிக்கே, அநந்ய ப்ரயோஜநரானவர்களுடைய ஹ்ருதயத்திலிருப்பில் அவனுக்குண்டானவிருப்பமிருக்கும்படியையருளிச்செய்கிறாரிதில்.

வ்யா;—(ஆசிலருளால்) நிர்ஹேதுக க்ருபையாலே. ஆசு-குற்றம், இல்-அதில்லாமை. அருளுக்குக்குற்றமாவது - ஸஹேதுகமான போதொழிய கார்யகரமாகாமலிருக்கை.

(அனைத்துலகும்) ஸமஸ்தலோகத்தையும். ஸஹேதுக க்ருபையாலே செய்யும்போதிறே, குணாகுண நிரூபணம் பண்ணிவரைந்து ரக்ஷிப்பது. இவ்விடத்தில் லோகசப்தம்-ஜநவாசி. (க)"லோகஸ்து புவநே ஜநே - லோகஸ்துபுவநேஜநே" என்னக்கடவதிறே. (காத்தளிக்கும்) அநிஷ்டங்களைப் போக்கிரக்ஷித்து அபி(ஹி)மதங்களைக்கொடுக்கும்.

(வாசமலராள் மணவாளன்)(உ)"வேரிமாறாதபூமேலிருப்பாள்" என்கிறபடியே, எப்போதும் மொக்கச் செவ்விமாறாமையாலே பரிமளம் அலையெறிகிற புஷ்பத்தை யிருப்பிடமாகவுடைய பெரிய பிராட்டியார்க்கு வல்லபனானவன். கீழ்ச்சொன்னபடியே, ரக்ஷிப்பதுதான் அவளோடேகூடியிருந்தாயிற்று. (௩)"லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேசோ தேவ்யா காருண்யரூபயா ரக்ஷகஸ் ஸர்வஸித்தாந்தே வேதாந்தேஷு ச கீயதே - லக்ஷ்ம்யாஸஹ ஹ்ருஷீகேசோ தேவ்யா காருண்ய ரூபயா । ரக்ஷகஸ் ஸர்வஸித்தாந்தே வேதாந்தேஷு ச கீயதே" என்னக்கடவதிறே. ரக்ஷணத்துக்கடியான க்ருபையைக் கிளப்புகையும், ரக்ஷித்தாலதுகண்டு உகக்குகையும், அவளுடைய கூறாயிறே யிருப்பது. இப்படி யிருக்கிற ஸ்ரியப்பதியானவன், தான் பண்ணின க்ருஷிபலித்து, அநந்ய ப்ரயோஜநரானவர்களுடைய

---

(க) நிகண்டு. (உ) தி-வாய்-௪-௫-௧. (௩)

மூ.—நாளுமுலகை நலிகின்றவாளரக்கன்
தோளுமுடியும் துணித்தவன்றன்—தாளில்
பொருந்தாதா ருள்ளத்தில் பூமடந்தை கேள்வன்
இருந்தாலு முள்மேலிருப்பு. (௧௦)

ஹ்ருதயத்திலிருப்பில் பண்ணுமாதரவிசேஷத்தை யருளிச்செய்கிறார் மேல்.

(தேசுபொலிவிண்ணாட்டில்) (க)"[illegible] அத்யர்க்காநலதீப்தம் தத்ஸ்தாநம்" என்கிறபடியே, தேஜ:ப்ரசுரமாய், (உ) "[illegible] வைகுண்டே துபரே லோகே ஸ்ரியாஸார்த்தம் ஜகத்பதி: । ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா பக்தைர்ப்பாகவதைஸ்ஸஹ" என்கிறபடியே பெரியபிராட்டியாரோடும், நித்யஸூரிகளோடுங்கூட, ரஸோத்தரமாக வெழுந்தருளியிருக்கிற பரமபதத்திற்காட்டில். (சாலவிரும்புமே) மிகவுமாதரியா நிற்குமே.

(வேறொன்றை யெண்ணாதார்நெஞ்சத்திருப்பு) (௩)"[illegible] வாஸுதேவஸ்ஸர்வம்" (௪) "எல்லாம்கண்ணன்" என்றும் சொல்லுகிறபடியே, ஸகல ப்ரயோஜநமும் தானேயாக நினைத்து, வேறொரு ப்ரயோஜநத்தை(ம)கணியாதேயிருக்குமவர்களுடைய ஹ்ருதயத்திலிருப்பை. இத்தால், அப்ராக்ருதமான தேஸவிசேஷத்திலுங்காட்டில், இவர்கள் ஹ்ருதயத்திலிருப்பு, தனக்கத்யந்த ரஸாவஹமாயிருக்கையாலே, இதிலே அத்யாதரத்தைப்பண்ணுமென்றதாயிற்று. "[illegible] யேநந்யமநஸ: [illegible] யேதாஸ்யைகமநோரதா: । தேஷாம்மே ஹ்ருதயம்விஷ்ணோர்வைகுண்டாத்பரமம்பதம்" என்று தானே யருளிச்செய்தானிறே. (௧௦)

அவ;—பத்தாம்பாட்டு. ஸ்ரிய:பதியானவன்ப்ரயோஜநாந்தரபருடைய ஹ்ருதயத்திலிருந்தாலும், அவ்விருப்பு அவனுக்குது:காவஹமாகையாலே, அஸஹ்யமாயிருக்கும்படியை யருளிச்செய்கிறார்.

(க) பார·ஆர ௧௮-௩-௧௧. (உ) ஸைவே·
(௩) கீ-௭-௧௯. (௪) தி-வாய்-௨-௭-௧.

வ்யா;—(நாளுமுலகைநலிகின்ற) காதாசித்கமாகவன்றிக்கே நாள்தோறுமொருவரை இருவரையன்றிக்கே, லோகத்தையடைய ஒருகாலிடைவிடுகையன்றிக்கே, நலியா நிற்கிற.

(வாளரக்கன்) முன்பே ருத்ரனையுபாஸித்து, அவன் பக்கலிலே பெற்றதொரு வாளைத்தனக்கு(வ)பலமாகப் பிடித்துக்கொண்டிருக்கும்ராக்ஷஸனுடைய.

(தோளுமுடியும் துணித்தவன்)[redacted]ள்களையும் தலைகளையு மறுத்தவன். (க)"தோள்கள்தலை துணிசெய்தான்" என்றாரிறேயாழ்வார். அதாவது - அவனைக்கொல்லுகிறவளவில், அகப்படாதவனகப்பட்டான், தப்பாமல் கொன்றுவிடுவோமென்று பாராதே, தோள்களைக்கழித்து, தலைகளைச்சேதித்து, போதுபோக்காக நின்றுகொன்றபடி.

(பூமடைந்தைகேள்வன்) புஷ்பநிவாஸிநியாய், (உ) "யுவதிஶ்ச குமாரிணீ - யுவதிஸ்சகுமாரிணீ" என்கிறபடியே, நித்யயௌவநஸ்வபாவையான பெரிய பிராட்டியார்க்கு, நாயகனானவன்; கீழ்ச்சொன்னராவணவதந்தனக்கு நாட்டை நலிந்த வளவன்றிக்கே, இவளைப்பிரித்ததிறே ப்ரதாநஹேது. (௩)"சுரிகுழற்கனிவாய்த் திருவினைப்பிரித்த கொடுமையிற்கடுவிசை யரக்கன்எறிவிழித்திலங்கு மணிமுடி பொடிசெய் திலங்கை" என்றாரிறே, திருமங்கையாழ்வார். இப்படி திவ்யமஹிஷியான பிராட்டியுந்தானுமாய், ரஸோத்தரமாக வெழுந்தருளி யிருக்குமவன்.

(தந்தாளில் பொருந்தாதாருள்ளத்தில்) திருவடிகளை யாஸ்ரயித்திருக்கச் செய்தே, ப்ரயோஜநாந்தரங்களில் விருப்பத்தைப்பண்ணி, தன் திருவடிகளிலே பொருத்தமற்றிருக்கு மவர்களுடைய ஹ்ருதயத்தில்.

(இருந்தாலும்) முதலிலே யிருக்கத்தான் கூடாது, உபாஸகரானவர்களுடைய நிர்ப்பந்தத்துக்காக விருந்தாலும்.

---

(க) தி-வாய்-௯-௭-௬, (உ) (௩) தி-மொ-டு-௭-௭,

மூ.—தன் பொன்னடியன்றி மற்றொன்றில் தாழ்வுசெய்யா
அன்பருகந்திட்ட தனுவெனிலும்—பொன்பிறழும்
மேருவாய்க்கொள்ளும் விரையார் துழாயலங்கல்
மாரிமாக்கொண்டல் நிகர்மால். (கக)

---

(முண்மேலிருப்பு)கண்டகாக்ரத்தி லிருப்புப்போலே, துஃக்காவஹமாயிருக்குமென்றபடி. (க) "భగవచ్చరణద్వంద్వభక్తిర్యేషాం న విద్యతే । తేషాం హృదిస్థితో దేవః కణ్టకాగ్ర ఇవస్థితః - பகவச்சரணத்வந்த்வே பக்திர்யேஷாம்ந வித்யதே । தேஷாம்ஹ்ருதிஸ்திதோ தேவஃகண்டகாக்ரஇவஸ்திதஃ" என்கிற ப்ரஹ்மாண்டபுராணவசநத்தை இவ்வர்த்தத்துக்கு ப்ரமாணமாக வநுஸந்திப்பது. (கO)

அவ;--பதிநோராம்பாட்டு, கீழிரண்டுபாட்டாலே, ஶ்ரியஃபதியான ஸர்வேஶ்வரனுக்கு, அநந்ய ப்ரயோஜநருடைய ஹ்ருதயத்திலிருப்பிலுள்ள விருப்பத்தையும், ப்ரயோஜநாந்தர பரருடையஹ்ருதயத்தி லிருப்பிலுள்ள துஃக்கத்தையும், அருளிச்செய்தார். இப்பாட்டில், தன் திருவடிகளில் அநந்ய ப்ரயோஜந பக்திமானவர்கள், ஸாதரமாக ஸமர்ப்பித்த த்ரவ்யம் அத்யல்பமாகிலும், அவன் அத்தை அதிமஹத்தாக நினைத்து அங்கீகரிக்கும்படியை யருளிச்செய்கிறார்.

வ்யா;—(தன் பொன்னடியன்றி) நிருபாதிகஶேஷியான தன்னுடையஸ்ப்ருஹணீயமான திருவடிகளையொழிய. தன்னடி யென்கையாகையாலே, திருவடிகளினுடைய ஸ்வரூபப்ராப்ததையும்; பொன்னடி யென்கையாலே, அதினுடையஶ்லாக்யதையும் போக்யதையும் சொல்லுகிறது. (மற்றொன்றில் தாழ்வுசெய்யாவன்பர்)இப்படி ப்ராப்தமுமாய், போக்யமுமான திருவடிகளையொழிய, வேறொரு ப்ரயோஜநத்தில் ப்ராவண்யம் பண்ணாத ப்ரேமத்தையுடையவர்கள். மற்றொன்றென்று, ஐஶ்வர்யாதிகளைச் சொல்லுகிறது. தாழ்வாவது - தாழ்ச்சி; இத்தால், ப்ராவண்யத்தைச் சொல்லுகிறது; (உ) "சதிரிளமடவார் தாழ்ச்சியை" என்கிற விடத்தில் போலே. ஆகவிப்படி, அநந்ய ப்ரயோஜநபக்திமான்களானவர்கள்.

---

(க) ப்ரஹ்மாண்டபுராணம். (உ) தி-வாய்-உ-கO-உ.

(உகந்திட்டது)(க)"అకిఞ్చిత్కరస్య శేషత్వానుపపత్తిః-அகிஞ்சித்கரஸ்ய ஶேஷத்வாநுபபத்தி:" என்கிறபடியே, ஶேஷிவிஷயத்தில் கிஞ்சித்காரமல்லாதபோது, ஶேஷத்வஸித்தியில்லாமையாலே நமக்கிது அவஶ்யம் செய்யவேணுமென்று வைத(⁴)மாகச் செய்கையன்றிக்கே, (உ) "உகந்துபணிசெய்து" என்கிறபடியே, ராகப்ராப்தமாக வடிமை செய்யுமவர்களாகையாலே, ப்ரீதிப்ரேரிதராய்க்கொண்டு ஸமர்ப்பித்த த்ரவ்யம், (அணுவெனினும்) அத்யல்பமாயிருந்ததேயாகிலும்.

(பொன்பிறழு மேருவாய்க்கொள்ளும்) அதாவது, ஸ்வர்ண ரூபமாய்க்கொண்டு விளங்காநின்றுள்ள மஹாமேருவைப்போலே அதிமஹத்தாக நினைத்து, அங்கீகரியாநிற்குமென்கை. இவனிட்டதுகொண்டு த்ருப்தனாகவேண்டும் குறைவாளனாகிலிறே, ஸமர்ப்பித்த த்ரவ்யத்தினுடைய லாகவம் பார்த்தாதரிப்பது; அங்ஙனன்றிக்கே, ஸமர்ப்பிக்குமவனுடைய ப்ரேமத்தைத்தையே பார்க்குமவனாகையாலே. இவன்ப்ரேமத்தோடே ஸமர்ப்பித்த த்ரவ்யத்தை, இப்படி யங்கீகரிக்குமவன் தானாரென்னில்.

(விரையார் துழாயலங்கல் மாரிமாக்கொண்டல் நிகர்மால்) அதாவது, பரிமள ப்ரசுரமான திருத்துழாய் மாலையாலே அலங்க்ருதனாய் வார்ஷிகமான மஹாமேகம்போலே யிருக்கிற வடிவழகையுடையனான ஸர்வேஶ்வரன். விரை-பரிமளம், அலங்கல்-மாலை, மாரி-வர்ஷம், மா-மஹத்து. இத்தால், அநந்ய ப்ரயோஜநபக்திமான்களாய், தன் பக்கல் மநஸ்ஸை வைத்தவர்களுக்கு, அநவரதாநு பாவ்யமாய், பக்திவர்த்த(⁴)கமானவொப்பனை யழகையும், வடிவழகையு முடையவனென்றதாயிற்று. [விரையார் துழாயலங்கல் மாரிமாக்கொண்டல்நிகர்மால் - தன்பொன்னடியென்று துடங்கி மேருவாய்க்கொள்ளு மென்றந்வயம்] "భక్త్యా త్వయాప్యుపానీతం ప్రేమ్ణా భూర్యేవమే భవేత్ । భూర్యప్యభక్తోపహృతం న మే తోషాయ కల్పతే - பக்த்யாத்வயாப்யுபாநீதம் ப்ரேம்ணாபூர்யேவமே பவேத். பூர்யப்யபக்தோபஹ்ருதம் நமேதோஷாயகல்பதே" என்று பௌஷ்கர ஸம்ஹிதையில், தானே யருளிச்செய்தானிறே. (கக)

---

(க)

(உ) தி-வாய்-கO-அ-கO.

மூ.—மாறுபிணைந்த மருதமிறத்தவழ்ந்த
சேறாரவிந்தச் சேவடியைப்—¶ பேறாக
உள்ளாதாரொண்ணிதியை யீந்திடினும் தானுகந்து
கொள்ளான் மலர்மடந்தைகோன். (கஉ)

அவ;—பன்னிரண்டாம்பாட்டு. ப்ரயோஜநாந்தர பரரானவர்கள், சீரியதநத்தை ஸமர்ப்பிக்கினும், ஸ்ரியஃபதியானவன் அத்தைவிரும்பி அங்கீகரியானென்கிறார்.

வ்யா;—(மாறுபிணைந்த மருதமிறத்தவழ்ந்த) தன் பக்கல் ஸாத்ரவயுக்தமாய், நிர்விவரமாம்படிச் சேர்ந்துநின்ற யமளார்ஜுநமானது, முறிந்துவிழும்படி தவழ்ந்துபோன. (க) "ఛిక్షేపచ రణావూర్ధ్వం స్తన్యార్థీ ప్రరురోదహ - சிக்ஷேபசரணாவூர்த்வம்ஸ்தந்யார்த்தீப்ரருரோதஹ" என்கிறபடியே, முலைவரவு தாழத்தவாறே சீறியழுது, திருவடிகளை நிமிர்க்க, அதுபட்டுச்சகடம் முறிந்து விழுந்தாப்போலேயாயிற்று, வெண்ணெயைக்களவிலே யமுது செய்தானென்று பெற்றதாயானவள் உரலோடேகட்ட, அதையுமிழுத்துக்கொண்டு, மௌக்த்யத்தாலே, இதின்நடுவே நுழைந்துதவழ்ந்து போகாநிற்க, திருத்தொடைகளினுடைய ஸ்பர்ஸத்தாலே மருதம் முறிந்துவிழுந்தபடி. இவன் அந்யார்த்தமாகச்செய்தாலும், ப்ரதிகூலித்துக்கிட்டினால், முடியும்படியாயிறே வஸ்துஸ்வபாவமிருப்பது.

(சேறாரவிந்தச் சேவடியை) தன்னிலத்திலே யலர்ந்த செவ்வித்தாமரைபோலே சிவந்திருக்கிற திருவடிகளை. சிவப்பைச்சொன்னவிது, திருவடிகளில், விகாஸம் செவ்வி குளிர்ச்சி பரிமளம், இவைற்றுக்கெல்லா முபலக்ஷணம். (க) "యమళార్జున యోర్మధ్యే జగామ కమలేక్షణః-யமளார்ஜுநயோர்மத்யேஜகாமகமலேக்ஷண:" என்றுமருதுகளின்நடுவே தவழ்ந்துபோனபோது அவைமுறிந்துவிழுகிற வோசையைக்கேட்டுப் புரிந்துபார்த்து, அபூர்வதர்ஸநத்தாலே சிவந்து மலர்ந்த திருக்கண்களிலழகை வர்ணித்தார் ருஷி; தவழ்ந்துபோகிறபோது, முறித்திட்டுப்போந்த திருவடிகளிலழகை வர்ணிக்கிறாரிவர். (உ) "பொருந்தியமா

(க) வி-பு-ரு-கூ-க. (உ) தி-வாய்-ஙு-அ-கO. ¶ (பா) வேறாக.

மருதினிடை போயவெம்பெருந்தகா யுன்கழல்காணியபேதற்று” என்று ஆழ்வாருமநுபவிக்க வாசைப்பட்டது திருவடிகளையிறே.

(பேறுகவுள்ளாதார்) வ்யாவ்ருத்தமாக வநுஸந்தியாதவர்கள்; அதாவது, ப்ரயோஜநாந்தர ஸங்கமற்று, இத்திருவடிகளே நமக்கு பரமப்ராப்யமென்று அநுஸந்தியாதவர்களென்கை. அவன், மருதுகளின் கையிலகப்படாமல், தன்னைநோக்கித்தந்தால் அவன் திருவடிகளே பரமப்ராப்யமென்று அநுபவித்துக் கொண்டு கிடக்கவிறே யடுப்பது. அதில் மநஸ்ஸின்றிக்கே, ப்ரயோஜநாந்தரபரரா யிருக்குமவர்கள்.

(ஒண்ணிதியை யீந்திடினும்) ஒண்மை - அழகு, சீரியநிதியைஸமர்ப்பிக்கிலும், (தானுகந்து கொள்ளான் மலர்மடந்தைகோன்) ஶ்ரியஃபதியாகையாலே அவாப்தஸமஸ்தகாமனானவன் அத்தைவிரும்பி அங்கீகரியானென்கை. அபூர்ணனாகிலிறே, த்ரவ்ய கௌரவம் பார்த்தங்கீகரிப்பது. அங்ஙனன்றிக்கே, அதிகாரியினுடைய பாவஶுத்தியைப் பார்த்தங்கீகரிக்குமவனிறே. ஆகையாலே, தன்பக்கல் பக்தியில்லாத ப்ரயோஜநாந்தரபரரிட்டதை ஸர்வஸமாஶ்ரயணீயனாகையாலே நமக்கிதுகைக்கொள்ளவேணுமேயென்று, தேவையாகச்செய்யுமதொழிய, உகந்து கொள்ளானாயிற்று. “పృథివీం రత్నసంపూర్ణాం యఃకృష్ణాయ ప్రయచ్ఛతి। తస్యాప్యన్యమనస్కస్య సులభో నజనార్దనః - ப்ருதிவீம் ரத்நஸம்பூர்ணாம் யஃக்ருஷ்ணாய ப்ரயச்சதி। தஸ்யாப்யந்யமநஸ்கஸ்ய ஸுலபோநஜநார்தநஃ” என்னக்கடவதிறே. கீழ்ப்பாட்டில்சொன்ன ஸம்வாதஶ்லோகத்தில், உத்தரார்த்தத்தாலே இவ்வர்த்தத்தைத் தானே யருளிச்செய்தானிறே. (கஉ)

அவ;-பதின்மூன்றும்பாட்டு, ஶேஷிவிஷயத்தில் அநந்யப்ரயோஜநராய்க்கிஞ்சித்கரிக்குமாகாரமுண்டானாலும்தேஹாத்மாபிமாநிகளான லௌகிகரோட்டை ஸங்கம் கிடைக்கில், அந்த அதிகாரத்துக்கு அவத்யமன்றோவென்ன, ஆத்மஸ்வரூபத்தை யதாதர்ஶநம் பண்ணினவர்களுக்கு அவர்களோடுறவுண்டோவென்கிறார்:

மூ.—பண்டேயுயிரனைத்தும் பங்கயத்தாள் நாயகற்கே
தொண்டாமெனத்தெளிந்த தூமனத்தர்க்--குண்டோ
பலகற்றும் தம்முடம்பைப் பார்த்தபிமானிக்கும்
உலகத்தவரோடுறவு. (கரு)

---

வ்யா;—(பண்டே) இத்தால், ஶேஷத்வத்தினுடைய அநா தித்வத்தைச் சொல்லுகிறது. (உயிரனைத்தும்) இத்தால், ஶேஷத்வந்தான் சிலர்க்குண்டாய் சிலருக்கன்றிக்கேயிருக்கை யன்றிக்கே, ஸகலாத்ம ஸாதாரணமென்கிறது.

(பங்கயத்தாள் நாயகற்கே) இத்தால், ஶேஷத்வப்ரதிஸம்பந்தி யொருமிதுநமென்னுமிடமும், அவதாரணத்தாலே இதினுடைய அநந்யார்ஹத்வமும், சொல்லுகிறது.

(தொண்டாமெனத்தெளிந்த தூமனத்தர்க்கு) தொண்டென்று, ப்ரதமாக்ஷரத்தில், சதுர்த்தியால் ப்ரதிபாதிக்கப்படுகிற ஶேஷத்வத்தைச் சொல்லுகிறது. அநாதிகாலமே தொடங்கி அகிலாத்மாக்களும், அப்ஜாஸஹாயனை அகாரவாச்யனுக்கே சேஷமாயிருக்குமென்று, ஸகலவேத ஸங்க்ரஹமான திருமந்த்ரத்தினுடைய ஸங்க்ரஹமான ப்ரணவத்தில் சொல்லுகிறபடியே, ஸம்ஶய விபர்யயமற தர்ஶித்துத்தெளிந்த பரிஶுத்தாந்தஃகரணர்க்கென்றபடி.

(உண்டோ) இதுக்குமேலே அந்வயம்.

(பலகற்றும் தம்முடம்பைப் பார்த்தபிமாநிக்கும்) அதாவது, ஶ்ருதிஸ்ம்ருத்யாதி ஶாஸ்த்ரங்கள் பலவற்றையும் அதிகரித்து, ஜாதி வர்ணாஶ்ரமங்களுக்கெல்லாம் ஆஶ்ரயமாயிருக்கும் தங்கள் தேஹத்தைப்பார்த்து, நாமின்னஜாதியன்றோ, இன்ன வர்ணமன்றோ, இன்ன ஆஶ்ரமிகளன்றோ, என்றிவற்றையிட்டுத் தங்களைப் போரப்பொலிய வபிமாநித்திருக்குமென்கை.

(உலகத்தவ ரோடுறவு) இப்படி, அபிமாநித்திருக்கும் லௌகிகரோடு ஸம்பந்தமுண்டோவென்று க்ரியை. இத்தால் அகாரவாச்யனுக்கே சேஷமென்று சொல்லிக்கொண்டுவந்த ஶேஷத்வாஶ்ரயமான வாத்மாவை மகாரவாச்யனைச் சொல்லுகையாலே, ப்ரக்ருதேஃபரனாய், ஜ்ஞாநாநந்தலக்ஷணனாய், ஜ்ஞாந

மூ.—பூதங்களைந்தும் பொருந்துடலினூற்பிறந்த
சாதங்கள் நான்கினொடும் சங்கதமாம்—பேதங் [கோன்
கொண்டென்னபயன் பெறுவீரெவ்வுயிர்க்குமிந்திரை
தன்னடியேகாணும் சரண். (௧௪)

---

குணகனாய், நித்யனாயிருக்குமென்று, தெளிந்திருக்கும் பரிசுத்தாந்தஃகரணர்க்கு, ஆத்மஸ்வரூபத்தைப் பாராதே, தேஹத்தையே பார்த்து, அதில் ஸம்பந்தமடியாக வருகிற ஜாத்யாதிகளையிட்டுத் தங்களைப்பெருக்க நினைத்தபிமானித்திருக்கும் லௌகிகரோடுறவு வுண்டோ! அவர்களைக்கண்டாலுறவற வார்த்தை சொல்லிப்போமித்தனையன்றோ உள்ளதென்கை.

திருவஹீந்த்ரபுரத்திலே, வில்லிபுத்தூர் பகவரென்று ப்ரஸித்தராயிருப்பாரொரு உத்தமாஶ்ரமிகள், ப்ராஹ்மணரெல்லாரும் அநுஷ்டாநம் பண்ணுகிற துறையொழிய, தாம்வேறொரு துறையில் அநுஷ்டாநம் பண்ணிப்போருவராய், அவர்களொருநாள் எங்கள் துறையில் உமக்கு அநுஷ்டாநம் பண்ணவொண்ணாதோ வேன்று கேட்க. "విష్ణుదాసావయం యూయం బ్రాహ్మణా వర్ణధర్మిణః । అస్మాకం దాసవృత్తీనాం యుష్మాకం నాస్తిసఙ్గతిః । నాస్తిసఙ్గతిరస్మాకం యుష్మాకఞ్చ పరస్పరమ్ । వయస్తు కిఙ్కరా విష్ణోర్యూయమిన్ద్రియకిఙ్కరాః-விஷ்ணுதாஸாவயம் யூயம்ப்ராஹ்மணா வர்ணதர்மிணஃ। அஸ்மாகம் தாஸவ்ருத்தீநாம் யுஷ்மாகம் நாஸ்தி ஸங்கதிஃ। நாஸ்திஸங்கதிரஸ்மாகம் யுஷ்மாகஞ்சபரஸ்பரம்। வயந்து கிங்கராவிஷ்ணோர் யூயமிந்த்ரிய கிங்கராஃ', என்று, உறவற வார்த்தைசொல்லிப் போனாரிறே. "అవైద్యః ప్రాకృతః ప్రోక్తో వైద్యో వైష్ణవ ఉచ్యతే । అవైద్యేననకేనాపి వైద్యః కిఞ్చిత్సమాచరేత్ - ஆவித்யஃ ப்ராக்ருதஃ ப்ரோக்தோவைத்யோ வைஷ்ணவஉச்யதே। ஆவித்யேநநகேநாபிவைத்யஃ கிஞ்சித்ஸமாசரேத்" என்னக்கடவதிறே. (௧௫)

அவ;—பதினாலாம்பாட்டு. தேஹமிருக்குந்தனையும், ஜாத்யாதிபேத ப்ரதிபத்தி அநுவர்த்தியாதோவென்ன, அத்தா

லென்ன ப்ரயோஜநம், ஸகலாத்மாக்களுக்கும், ஶ்ரிய:பதி திருவடிகளே காணுங்கோள் புகலென்கிறார்.

(பூதங்களைந்தும் பொருந்துடலினாற்பிறந்த) (௧) "𑌪𑌞𑍍𑌚𑌭𑍂𑌤𑌾𑌤𑍍𑌮𑌕𑍇 𑌦𑍇𑌹𑍇-பஞ்சபூதாத்மகே தேஹே" என்றும், (௨) "மஞ்சு சேர்வானெரிநீர் நிலங்காலிவைமயங்கி நின்றவஞ்சுசேராக்கை" என்றும் சொல்லுகிறபடியே, ப்ருதிவ்யாதி பூதங்களைந்தினுடையவும் ஸமுதாயரூபமான தேஹமடியாக வுண்டான. இத்தால், ஆத்மாவோடார்வயமன்றிக்கே, உபசயாத்மகமாய், அநித்யமாய், ஹேயமாயிருக்கிற தேஹமடியாக வுண்டானதாகையாலே, வந்தேறியென்னுமிடம் சொல்லுகிறது.

(சாதங்கள் நான்கினோடும்) சாதமென்று, ஜாதியைச்சொல்லுகிறது. "𑌜𑌾𑌤𑌿𑌰𑍍𑌜𑌾𑌤𑌞𑍍𑌚 𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌮𑍍 - ஜாதிர் ஜாதஞ்ச ஸாமாந்யம்" என்னக்கடவதிறே, சாதங்கள் நான்கென்று-ப்ராஹ்மண ஜாதி முதலான நாலுஜாதியையும் சொல்லுகிறது.

(நான்கினோடும் சங்கதமாம் பேதங்கொண்டு)பேதமாவது இந்நாலினோடும் சேர்ந்திருக்கிற உத்கர்ஷாபகர்ஷப்ரதிபத்தி ஹேதுவான விசேஷம். இந்தப்ராஹ்மணஜாதியைப் பற்றியிறே ஆஶ்ரமாதி பேதங்கள் வருவது. ஆகையாலே, சாதங்கள் நான்கினோடும் சங்கதமாம் பேதமென்றவிதிலே யெல்லாம் சொல்லலாம்.

(என்னபயன்பெறுவீர்) இந்தபேதங்கொண்டு என்னப்ரயோஜநம். பெறுவதிகோள். இத்தால் உங்களுக்கேதேனும் ஸித்திப்பதுண்டோ! அஹங்காரஹேதுவாகையாலே அநர்த்தகரமாமித்தனையன்றோ வுள்ளதென்று கருத்து. "என்னபயன் கெடுவீர்" என்று பாடமாகில் இந்தபேதங்கொண்டென்ன ப்ரயோஜநமுண்டு, கெடுவீர்கோளென்று உகப்பாலேயருளிச்செய்தாராகக்கடவது.

(எவ்வுயிர்க்குமிந்திரைகோன் தன்னடியேகாணும் சரண்) இன்னாரினியாரென்னாதே, எல்லாவாத்மாக்களுக்கும் ஶ்ரிய:பதியானவன் திருவடிகளேகாணுங்கோள் புகல். ஆகையால்

(௧) வி-பு. (௨) தி-மொ-௯-௭-௮.

மூ.—குடியுங்குலமு மெல்லாம் கோகனகைக்கேள்வன்
அடியார்க்கவனடியே யாகும்—படியின்மேல்
நீர்கொழுவுமாறுகளின் பேரும்நிறமுமெல்லாம்
ஆர்கலியைச்சேர்ந்திடு மாய்ந்தற்று.

---

இந்தத்திருவடிகள் ஸம்பந்தத்தையிட்டு நிரூபிக்கும்போது, இந்தபேதங்களொன்று மில்லாமையாலே யெல்லாமௌபாதிகம். அதுவே நிலைநின்ற வேஷமென்றுகருத்து. "దేహాత్మ జ్ఞానకార్యేణ వర్ణభేదేన కింఫలమ్। గతిస్సర్వాత్మనాం శ్రీమన్నారాయణపదద్వయమ్ - தேஹாத்மஜ்ஞாநகார்யேண வர்ணபேதேநகிம்பலம்। கதிஸ்ஸர்வாத்மநாம் ஸ்ரீமந்நாராயணபதத்வயம்" என்றிவ்வர்த்தந்தான், பரமைகாந்தி தர்மத்தில் சொல்லப்பட்டதிறே.(க௪)

அவ;—பதினஞ்சாம்பாட்டு. எவ்வுயிர்க்குமிந்திரைகோன் தன்னடியேகாணும்சரணென்றத்தை,ஸ்தாபிக்கைக்காக, ஸ்ரிய:பதிவிஷய ஸேஷத்வைக நிரூபகரானவர்களுக்கு, முன்பு நிரூபகமாய்ப்போரும் க்ராமகுலாதிகளெல்லாம் அவன் திருவடிகளேயாமென்னுமத்தை ஸத்ருஷ்டாந்தமாக வருளிச்செய்கிறார்.

(குடியுங்குலமுமெல்லாம்) குடி-கிராமம், குலம்-கோத்திரம், எல்லாமென்றது, மற்றும் நிரூபகமாய்ப்போருமவை பலவுமுண்டாகையாலே, அவையாவன-சரணஸ-ஒத்ராதிகள்.

(கோகனகைக்கேள்வனடியார்க்கு) ஸ்ரிய:பதியினுடைய, அடியாரானவர்களுக்கு. கோகனகமாவது-தாமரை, கோகனகையென்றது-தாமரையளென்றபடி;கேள்வனென்றது-நாயகனென்றபடி. ஏவம்பூதனானவன் திருவடிகளில் ஸேஷத்வமே நிரூபகமாக வுடையவர்களுக்கு.

(அவனடியேயாகும்) அதாவது, முன்பு ஔபாதிகநிரூபகமாய்ப்போந்த குடியும், குலமுமெல்லாம்போய், சேஷியானவன் திருவடிகளில் ஸம்பந்தமே நிரூபகமாய், அத்தையிட்டு, வ்யபதேசிக்கும்படி யாய்விடுமென்கை. இதுக்கு, த்ருஷ்டாந்தமருளிச்செய்கிறார் மேல்.

மூ.—தேவர் மனிசர் திரியக்குத்தாவரமாம்
யாவையுமல்ல னிலகுமுயிர்—பூவின்மிசை
யாரணங்கின்கேள்வ னமலனறிவேவடிவாம்
நாரணன்தாட்கே யடிமைநான். (௧௬)

---

(படியின்மேலென்று தொடங்கி) அதாவது, பூமியின்மே லுண்டான ஜலஸம்ருத்தியையுடைய நதிகளின் நாமமும், வர்ணமுமெல்லாம், ஸமுத்ரத்தைப்ரவேசிக்கவே, பின்பு காணவொண்ணாதபடி போமாபோலென்கை. படி-பூமி, கொழுவுதல்-மிகுவுதல். ஆர்கலி-ஸமுத்ரம். "ఏకాన్తీవ్యపదేష్టవ్యో నైవగ్రామకులాదిభిః । విష్ణునా వ్యపదేష్టవ్యస్తస్య సర్వంసఏవహి ॥ నద్యానశ్యతి నామాది ప్రవిష్టాయాయథార్ణవమ్। సర్వాత్మనాప్రపన్నస్య విష్ణుమేకాన్తినస్తథా- ஏகாந்தீவ்யபதேஷ்டவ்யோ நைவக்ராமகுலாதிபிः । விஷ்ணுநா வ்யபதேஷ்டவ்யஸ்தஸ்ய ஸர்வம்ஸஏவஹி ॥ நத்யாநஶ்யதிநாமாதி ப்ரவிஷ்டாயாயதார்ணவம் । ஸர்வாத்மநாப்ரபந்நஸ்ய விஷ்ணுமேகாந்திநஸ்ததா" என்னக்கடவதிறே. (௧௫)

அவ ;—பதினாறும்பாட்டு. ஸ்வரூபயாதாத்ம்யஜ்ஞாநம் பிறந்தவர்கள் தந்தாமையநுஸந்தித்திருக்கும்படியை ஸ்வநிஷ்டாகதநமுகேந வருளிச்செய்கிறார்.

வ்யா;—(தேவர்மனிசர் திரியக்குத்தாவரமாம்) தேவர்கள் மநுஷ்யர்கள், திர்யக்கு, ஸ்தாவரமாகிற.

(யாவையுமல்லன்) ஸகலமுமல்லன். ஓராத்மா, தான் அநேக கர்மபேதத்தாலே, தேவாதி சதுர்விதயோநிகளிலும் ஜநிக்குமிறே. அவ்வோ யோநிகளிலே ஜநித்தால், தேவோஹம், மநுஷ்யோஹமென்று, அவ்வோ தேஹங்களிலே, அஹம் புத்தியைப்பண்ணிப் போரக்கடவதாயிறே யிருப்பது. அது, ஆத்மஸ்வரூபஜ்ஞாநம் பிறப்பதற்கு முன்பிறே. இது, ஸ்வரூபஜ்ஞாநம் பிறந்ததற்பின் வார்த்தையிறே.

(இலகுமுயிர்) ஜ்ஞாநாநந்தலக்ஷணமாய், உஜ்வலமானவாத்மா, நான்—ஏவம்பூதனான நான்.

(பூவின்மிசை யாரணங்கின் கேள்வ னமலனறிவேவடிவாம்

மூ.—ஒன்றிடுகவிண்ணவர்கோன் செல்வமொழிந்திடுக
என்றுமிறவா திருந்திடுக—இன்றே
இறக்கக் களிப்புங் கவர்வுமிவற்ருல்
பிறக்குமோ தற்றெளிந்தபின். (௧௭)

நாரணன்ருட்கேயடிமை): அதாவது,(௧) ‘‘மலர்மேலுறைவாள்’’ என்கிறபடியே, பூவின்மேலே வர்த்திப்பாளாய், திவ்யாகாரை யான பெரியபிராட்டியாருக்கு வல்லபனாய், ஹேயப்ரத்யநீக னாய், ஜ்ஞாநாநந்தைக ஸ்வரூபனான நாராயணனுடைய திரு வடிகளுக்கே சேஷமானவனென்கை, அணங்கென்றது-தைவப் பெண்ணென்றபடி. அமலனென்றது-மலப்ரதிபடனென்றபடி. நாரணனென்றது-ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்தவஸ்துக்களும் தனக்கு ப்ரகாரமாய், தான் ப்ரகாரியாயிருக்குமவனென்றபடி. “నా హం దేవో న మర్త్యో వా న తిర్యక్స్థావరోపి వా। జ్ఞానానందమయస్త్వాత్మా శేషో హి పరమాత్మనః ॥ నాహం విప్రో న చ నరపతిర్నాపి వైశ్యో న శూద్రో నో వా వర్ణీ న చ గృహపతిర్నో వనస్థో యతిర్వా । కిన్తు శ్రీమద్భువనభవనస్థిత్యపాయైక హేతోర్లక్ష్మీభర్తుర్నరహరితనోర్దాసదాసస్య దాసః - நாஹம்தேவோந மர்த்யோவா நதிர்யக்ஸ்தாவரோபிவா।ஜ்ஞாநாநந்தமயஸ்த்வா த்மா ஶேஷோஹிபரமாத்மந:॥நாஹம்விப்ரோநச நரபதிர்நாபி வைஶ்யோ நஶூத்ரோநோவாவர்ணீ நச க்ருஹபதிர்நோவந ஸ்தோயதிர்வா। கிந்து ஶ்ரீமத்புவநபவநஸ்தித்யபாயைக ஹே தோர்லக்ஷ்மீ பர்த்துர்நரஹரிதநோர்தாஸதாஸஸ்யதாஸ:” என் னக்கடவதிறே. (௧௬)

அவ:—பதினேழாம்பாட்டு.ஸ்வரூபஜ்ஞாநம் பிறந்தவன் தன்னையநுஸந்தித் திருக்கும்படியை ஸ்வவிஷ்டாகதந முகேந வருளிச்செய்தார் கீழ்ப்பாட்டில். ஐஶ்வர்யத்தினுடைய ஆகமா பாயங்களும், ஆயுஸ்ஸினுடைய ஸ்தைர்யாஸ்தைர்யங் களுமடி யாக, அஜ்ஞானவர்களுக்குண்டான கர்வக்லேஶங்கள், ஆத்ம ஸ்வரூபத்தை யறிந்தவனுக்கு உண்டாகாதென்னுமத்தை யரு ளிச்செய்கிருரிப்பாட்டில்.

(௧) தி-வாய்-௪-௫-௨.

மூ.—ஈனமிலாவன்பரென்றாலுமெய்திலா
மானிடரையெல்லாவணத்தாலும்—தானறிய
விட்டார்க்கெளியன் விடாதார்க்கறிவரியன்
மட்டார் துழாயலங்கல் மால். (கஅ)

---

வ்யா;—(ஒன்றிடுகவிண்ணவர்கோன் செல்வம்) தேவர்களுக்குநிர்வாஹகனான இந்த்ரனுடைய ஐஶ்வர்யமானது, அபேக்ஷியாதிருக்கச்செய்தே, தானேவந்து சேர்ந்திடுக.

(ஒழிந்திடுக) அப்படியிருந்துள்ள வைஶ்வர்யமானது, இனிக்கூடாதென்னும்படி, தன்னோடேங்வயமற்றுப்போயிடுக.

(என்றுமிறவாதிருந்திடுக) எக்காலத்திலும் மரணரஹிதனாயிருந்திடுக.

(இன்றேயிறக்க) அப்படி தீர்க்கமாகவிராமல் இன்றுதானே மரணமாக.

(களிப்புங்கவர்வுமிவற்றால் பிறக்குமோ தற்றெளிந்த பின்) அதாவது, ஐஶ்வர்யாகமமும், ஆயுஸ்ஸ்தைர்யமும். ஐஶ்வர்யவிநாசமும், ஆயுःக்ஷயமுமாகப்பிறித்து இரண்டுவகையாகச் சொன்னவிவற்றால், நாட்டார்க்குப்பிறக்கும் கர்வக்லேஶங்கள், தன் ஸ்வரூபத்தைத்தான் தெளியக்கண்டபின்பு, பிறக்குமோவென்கை. தற்றெளிகையாவது, தன்னைத்தெளிகை. அதாவது- ஸ்வஸ்வரூபஜ்ஞாநம். “ఆగచ్ఛతుసురేంద్రత్వం నిత్యత్వంవాద్య వామృతిః। తోషంవాత్రవిషాదంవా నైవగచ్ఛంతిపండితాః- ஆகச்சது ஸுரேந்த்ரத்வம் நித்யத்வம்வாத்யவாம்ருதிः। தோஷம்வாத்ரவிஷாதம்வா நைவகச்சந்திபண்டிதாः” என்னக்கடவதிறே. (கஎ)

அவ;—பதினெட்டாம்பாட்டு. ஸர்வேஶ்வரனானவன், தன் பக்கல்பக்திமான்களானாலும், பௌகிசிந்தாவிமுகரானஸம்ஸாரிகளோட்டை ஸம்ஸர்க்கமற்றவர்களுக்கு ஸுலபனாய், அல்லாதவர்களுக்குஅத்யந்ததுர்லபனாயிருக்கும்படியை, அனைவருமறியவருளிச்செய்கிறார்.

வ்யா ;—(ஈனமிலாவன்பரென்றாலும்) ஈனமாவது-பொல்லாங்கு, அதில்லாமையாலே, தன் திருவடிகளில்பழுதற்றப்ரேம

முடையவர்களானுலும். (௧) "భక్త్యాలభ్యస్త్వనన్యయా - பக்த்யா லப்யஸ்த்வ நந்யயா" என்றாரிறே ஸ்ரீ கீதாசார்யர்.

(எய்திலாமானிடரை) (௨) "ஆன்விடையேழன்றடர்த்தாற் காளானாரல்லாதார் மானிடவரல்லரென்றென் மனத்து வைத்தேன்" என்றும் (௩) "செங்கண்மால் நாமம் மறந்தாரை மானிடமாவையேன்" என்றும் ஜ்ஞாநிநாமக்ரேஸரரானவர்கள் இகழும்படி பகவத் விஷயத்தோடு ஒட்டற்றுத்திரியும் பாபிஷ்டரான க்ஷுத்ர மநுஷ்யரை. எய்திலாவென்றது - எய்துதலில்லாதபடியாய், பகவத்விஷயத்தினருகு கிட்டாமையைச் சொல்லுகிறது. எய்திலராமென்று பாடமானபோது பகவத் விஷயத்தில் ப்ரதிகூலரானவென்று பொருளாகக்கடவது.

(எல்லாவண்ணத்தாலும்) அதாவது-ஸஹவாஸஸத்காரஸம்பாஷணாதியான ஸர்வப்ரகாரத்தாலுமென்கை. (தானறியவிட்டார்க்கு) தாங்களும் பிறரு மறிந்தவளவன்றிக்கே அந்தர்யாமியாய், * உள்ளுவாருள்ளத்தெல்லா மறியும்ஸர்வஜ்ஞனை தான் அறியவிட்டவர்களுக்கு. "தானறிந்தவைஷ்ணவத்வமும் வைஷ்ணவத்வமல்ல; நாடறிந்த வைஷ்ணவத்வமும் வைஷ்ணவத்வமல்ல; நாராயணனறிந்தவைஷ்ணவத்வமே வைஷ்ணவத்வம" என்று ஆச்சான்பிள்ளை அருளிச்செய்தாரிறே.

(எளியன்) அவர்களுக்குக்கிட்டலாம்படி ஸுலபனாயிருக்கும். (விடாதார்க்கரிவரியன்) அப்படிவிடாதவர்களுக்குக்கிட்டவொண்ணாதபடி மிகவும் துர்லபனாயிருக்கும். (மட்டார்துழாயலங்கல்மால்) தன்நிலத்திலுங் காட்டில் திருமேனியின்ஸ்பர்சத்தாலே செவ்விபெற்று மதுவெள்ளமிடுகிற திருத்துழாய் மாலையுடைய ஸர்வேச்வரன் திருத்துழாய்மாலை ஸர்வேச்வரத்வசிந்ஹமிறே. (௪) "వక్షస్స్థల్యాం తులసికమలాకౌస్తుభై ర్వైజయన్తీ సర్వేశత్వం కథయతితరామ్ - வக்ஷஸ்தல்யாம் துளஸிகமலா கௌஸ்துபைர்வைஜயந்தீ ஸர்வேசத்வம் கதயதிதராம்" என்றருளிச்செய்தாரிறே பட்டர். [மட்டார்துழாயலங்கல்மால்-ஈனமிலாவன்பரென்று தொடங்கிவிடாதார்க்கரிவரியன்] என்றந்வயம்

(௧) கீதை-௮-௨௨. (௨) தி-மொ-௧௧-௭-௯. (௩) ௨-திரு-௪௪.
(௪) ர-ஸ்த.

மூ.—நல்லபுதல்வர் மனையாள் நவையில்கிளை
இல்லநிலமாடிவை யனைத்தும்—அல்லலெனத்
தோற்றி யெரிதீயிற் சுடுமேலவர்க்கெளிதாம்
ஏற்றரும் வைகுந்தத்திருப்பு. (௧௯)

---

"భక్తోపివాసుదేవస్యశార్ఙ్గిణః పరమాత్మనః । లోకేషణాదినిర్ముక్తోముక్తో భవతినాన్యథా - பக்தோபிவாஸுதேவஸ்யஶார்ங்கிண: பரமாத்மந: । லோகேஷணாதி நிர்முக்தோமுக்தோபவதி நாந்யதா" என்னக்கடவதிறே. (௧௮)

அவ;—பத்தொன்பதாம் பாட்டு;-புத்ரதாராபந்து ஜநக்ருஹக்ஷேத்ராதிகளெல்லாம் அக்நி கல்பமாய்க் கொண்டு தாபகரமாம் படியான அவஸ்தை பிறந்தவர்களுக்குப்பரமபதப்ராப்தி எளிதாமென்கிறார்.

வ்யா;—(நல்லபுதல்வர்) ஸத்புத்ரர்கள். அதாவது-குணஹீநராய் து:க்காவஹராயிருக்கை யன்றிக்கே தங்கள் வியோகம் அஸஹ்யமாம்படி குணவான்களான புத்ரரானவர்களென்கை, (மனையாள்) நல்லவென்கிறவிதை இங்கும் கூட்டிக்கொள்ளக் கடவது. அதாவது குணஹீனையாக விருக்கையன்றிக்கேகுணவதியாய் ச(ஞ்)ந்தாநுவர்த்தியான பார்யை யென்கை.

(நவையில்கிளை) பந்துக்களென்று பேராய் ப்ரதிகூலராயிருக்கையன்றிக்கே, தங்களோட்டைஸஹவாஸம் அமையுமென்னும்படி நிர்தோஷரான பந்துக்கள். (நவை)குற்றம். இல்லென்பது—இல்லாமை.

(இல்லம்) கீழ்நல்லவென்றுசொன்னதை இதுமுதலாக மேற்சொல்லுகிறவற்றிலும் கூட்டிக்கொள்வது. நல்லவில்லமாவது-கண்டவிடமெங்கும் ஶிதிலமாய் ஹேயமாயிருக்கையன்றிக்கே,மாடகூடப்ராஸாதாதியுக்தமாய்விலக்ஷணமானக்ருஹம், நல்லநிலமாவது-ஊஷரமாய் ஒருமுதல் பற்றுதபடி யிருக்கையன்றிக்கே கட்டு கலம் போரவிளையும்படியானஸஸ்யக்ஷேத்ரம். நல்லமாடாவது-கொடுவையாயக் கட்டப்பிடிக்கவொட்டாமல்,

மூ.—விருப்புறினும் தொண்டர்க்கு வேண்டுமிதமல்லால்
திருப்பொலிந்த மார்பனருள்செய்யான்--நெருப்பை
விடாதே குழவிவிழ வருந்தினுலும்
தடாதே யொழியுமோ தாய். (உ௦)

---

கொண்டியிலே மேய்ந்துதிரிகையன்றிக்கே விதேயமாய் பஹு க்ஷீரப்ரதங்களான பசுக்கள் முதலானவை.

(இவையனைத்தும்) இப்படி ஒரோன்றே விலக்ஷணமாய் நாட்டார்க்கு ஸுகாவஹமாயிருக்கு மிவையெல்லாம். (அல்ல லெனத்தோற்றி) துஃக்காவஹமென்றேமநஸ்ஸுக்குத்தோற்றி. அல்லலென்றஶப்தம் துஃக்கவாசியேயாகிலும் கீழ்ச் சொன்ன வற்றைச் சொல்லுகிறதாகையாலேதுஃக்காவஹமென்றுசொல் லவேணும், (எரிதீயிற்சுடுமேல்) ஜ்வலிக்கிற அக்நிபோலே தாபகரமாகில்.

(அவர்க்கெளிதாம்ஏற்றரும்வைகுந்தத்திருப்பு) அவ்வவஸ் தைபிறந்த அதிகாரிகளுக்கு ஸ்வயத்நத்தால் துஷ்ப்ராபமான பரமபதத்திலேபோய் அடியார்கள் குழாங்களோடேகூடியிருக் குமிருப்பு ஸுலபமாம். அதாவது-இப்படியானவதிகார பாகம் பிறந்தவர்களுக்கு ஈஶ்வரன் ஶீக்ரமாகப் பரமபதத்தைக் கொ டுக்குமென்றபடி.

“ క్షేత్రాణిమిత్రాణి ధనానినాథపుత్రాశ్చదారాః పశవోగృహాశ్చ ।
త్వత్పాదపద్మప్రవణాత్మవృత్తేర్భవన్తి సర్వేప్రతికూలరూపాః-க்ஷேத்ராணி மித்ராணி தநாநிநாதபுத்ராஶ்சதாராஃபஶவோக்ருஹாஶ்ச।த்வத் பாதபத்மப்ரவணாத்மவ்ருத்தேர் பவந்திஸர்வே ப்ரதிகூலரூ பாஃ” என்று ப்ரஹ்மாண்டபுராணத்தில் ஶ்ரீஹஸ்திகிரிமாஹா த்ம்யத்தில் சொல்லப் பட்டவசநம் இப்பாட்டில்சொன்ன வர்த் தத்துக்குஸம்வாதமாகவநு ஸந்தேயம். (௧௯)

அவ;—இருபதாம்பாட்டு—தன் பக்கல் பக்தரானவர்கள் தங்களுக்கு அஹிதமென்றறியாதே சாபல்யத்தாலேக்ஷுத்ரங் களானவற்றில் சிலவற்றைவிரும்பி இத்தைத்தரவேணு மென்ற பேக்ஷித்தாலும் ஹிதபரனான ஈஶ்வரன் அத்தைக்கொடாதே மறுத்துவிடு மென்னுமத்தைஸத்ருஷ்டாந்தமாக வருளிச்செய் கிறார்.

வ்யா ;—(விருப்புறினும்) விருப்பத்தைப் பண்ணிலும். அதாவது-இதுகொடாதபோது இவர்கள்க்லேஶப் படுவர்களெ ன்னும்படி ஸாதரமாக வபேக்ஷிக்கினு மென்கை. (தொண்டர்க்கு)தன் பக்தரானவர்களுக்கு. தொண்டென்கிறஶப்தம்-ஶேஷத்வத்துக்கும் வாசகமாய்,சாபலத்துக்கும் வாசகமாய்ப் போருவதாகையாலே இவ்விடத்தில் சாபலவாசகமாய்க்கொண்டு பக்தியை சொல்லுகிறது.

(வேண்டுமிதமல்லால்) அதாவது - அவர்களுக்கு வேண்டுவதான ஹிதத்தையொழிய. வேண்டுமிதமென்றது - அவர்களுடைய உஜ்ஜீவநத்துக்கு அபேக்ஷிதமான ஹிதமென்றபடி.

(திருப்பொலிந்தமார்பன்) பெரியபிராட்டியாரெழுந்தருளியிருக்கையாலே உஜ்ஜ்வலமான திருமார்பையுடையவன். திருப்பொலிந்தமார்பனென்றது - திருவால்வந்த பொலிவையுடைத்தான மார்பனென்றபடி. திருமார்படங்கலும் இவள் திருமேனியின் தேஜஸ்ஸாலே வ்யாப்தமாயிருக்குமாயிற்று. ஆகவிறே (௧) "கருமாணிக்கக் குன்றத்துத்தாமரைபோல்" என்றும் (௨) "கருமாணிக்கமலைமேல் மணித்தடந்தாமரைக்காடுகள்போல்" என்றும் தொடங்கி திவ்யாவயங்களைச் சொல்லுமிடத்தில் அல்லாத அவயவங்களோபாதி சிவந்திருக்குமதாகத் திருமார்பை முந்துறச் சொல்லிற்று. ஆக இப்படியிருக்கிற திருமார்பையுடையவன்.

(அருள்செய்யான்) அதாவது - இவர்களாசைப்பட்டபேக்ஷித்தாலும் ஹிதபரனாகையாலே மறுத்துவிடுமத்தனையொழிய அபேக்ஷித்ததைக் கொடானென்கை. அருளுதல்-கொடுத்தல்; அவர்கள் அபேக்ஷியாநிற்கச்செய்தே அதுகொடாதே மறுத்துவிடுமென்றதுக்கு த்ருஷ்டாந்த மருளிச்செய்கிறார் மேல்.

(நெருப்பையித்யாதி) அதாவது - விளைவதறியாத சிறுப்ரஜை, அக்நி தாஹகமென்றறியாமல் அதினுடைய ஔஜ்வல்யமாத்ரத்தைக்கண்டு அத்தைவிடாதே அதிலே விழுகைக்கு யத்நித்தாலும் அது ப்ரஜைக்கு நாஶகமென்றறியும் மாதாவான

(௧) தி-வாய்-௮-௭-௬. (௨) தி-வாய்-௮-௯-௧.

மூ.—ஆரப்பெருந்துயரே செய்திடினுமன்பர்கள்பால்
வேரிச்சரோருகைகோன் மெய்ந்நலமாம்—தேரில்
பொறுத்தற்கரிதெனிலும் மைந்தனுடற் புண்ணை
அறுத்தற்சிசைதாதையற்று. (உக)

---

வள் அதில் விழாதபடித்தகையாதொழியுமோவெங்கை. இத்தால் அப்படியே. அவனும், அவர்களபேக்ஷித்தாலும் அது கொடாதே மறுத்துவிடுமென்றதாயிற்று.

“యాచితోపి సదాభర్త్రా నాహితం కారయేద్బుధః। బాలమగ్నౌ పతన్తం తు మాతా కింన నివారయేత్ - யாசிதோபிஸதாபக்தைர்நாஹிதம் காரயேத்தரிঃ। பால்மக்நௌபதந்தந்து மாதாகிம்நநிவாரயேத்” என்னக்கடவதிறே. (உ௦)

அவ;—இருபத்தோராம்பாட்டு. ஶ்ரிய:பதியானவன் தன் பக்கல்பக்தரானவர்களுக்கு அதிமாத்ரங்களான து:க்கங்களைச் செய்யினும் அது அவர்கள்பக்கல்ஸ்நேஹகார்யமென்னுமத்தை ஸத்ருஷ்டாந்தமாக வருளிச்செய்கிறார்.

வ்யா;—(ஆரப்பெருந்துயரே செய்திடினும்) துயர் - து:க்கம்; பெருந்துயர் - மஹாது:க்கம். ஆரப்பெருந்துயரென்கையாலே - மிகவும் பெருந்து:க்கமென்றபடி. “துயரே” என்கிற அவதாரணத்தாலே நடுவொருஸுகவ்யவதாந மில்லாமையைச் சொல்லுகிறது. செய்திடினுமென்றது-இவர்கள் ப்ராரப்தகர்ம பலமாய் வந்ததாகிலும் பலப்ரதன் அவனுகையாலே பூர்வாகோத்தராக (ஞ) ப்ராரப்த (ஜ) கண்டங்களெல்லாம் கழிக்கிறவனுக்கு இத்தையும் கழிக்கவரிதன்றிறே. ஹிதரூபமாக அவன் அவற்றை அநுபவிப்பிக்கையிறே இவனுக்கு இது அநுபவிக்க வேண்டுகிறது. இதுதான் இவனுக்குண்டான ப்ரக்ருதி ப்ராக்ருதங்களில் வைராக்யத்தைப் பிறப்பிக்கைக்காகச் செய்கிறதிறே.

(வேரிச்சரோருகைகோன்) பரிமளப்ரசுரமான தாமரையை வாஸஸ்தாநமாகவுடைய பெரியபிராட்டியாருக்கு வல்லபனானவன், இப்படி இவர்களுக்கு து:க்கத்தை விளைக்கிறதுக்கு. அவ

மூ.—உடைமைநானென்று முடையானுயிரை
வடமதுரை வந்துதித்தா னென்றும்—திடமாக
அறிந்தவன்றன் தாளிலடைந்தவர்க்கு முண்டோ
பிறந்துபடு நீடுயரம் பின். (உஉ)

---

ளும் கூட்டுப்போலேகாணும். ஹிதரூபமாகையாலே அவளும் கூடுமிறே. நிக்ரஹத்தாலே செய்யிலிறே நிஷேதிப்பது. அநுக்ரஹத்தாலே செய்கையாகையாலே அநுமதிபண்ணி யிருக்குமாயிற்று.

(மெய்ந்நலமாம்) பாரமார்த்திக ஸ்நேஹகார்யமாம். மெய்ந்நலமென்றது - மெய்யான ஸ்நேஹமென்றபடி. (தேரில்) ஆராயில். தேருதல் - ஆராய்தல். [வேரிச்சரோருகைகோன் அன்பர்கள்பால் ஆரப்பெருந்துயரே செய்திடினும் தேரில் மெயந்நலமாம்] என்றந்வயம். இதுக்கு த்ருஷ்டாந்த மருளிச்செய்கிறார் மேல்.

(பொறுத்தற்கித்யாதி) அதாவது-அவனுக்கு இது பொறுக்கப்போகாதென்று தோற்றியிருந்தாலும் புத்ரனுடைய ஶரீரத்தில் க்ரந்தியை ஹிதபுத்தியாலே சேதி (ఛేది)க்கைக்கு அநுமதிபண்ணும் பிதாவைப்போலே யென்கை.

"హరిర్దుఃఖాని భక్తేభ్యో హితబుద్ధ్యా కరోతివై। శస్త్రక్షారాగ్ని కర్మాణి స్వపుత్రాయ యథా పితా -ஹரிர் துஃக்காநிபக்தேப்யோ ஹிதபுத்த்யா கரோதிவை ।। ஶஸ்த்ரக்ஷாராக்நிகர்மாணி ஸ்வபுத்ராயயதா பிதா" என்னக்கடவதிறே. (உக)

அவ.—இருபத்திரண்டாம்பாட்டு. ப்ராரப்த கர்மாநுபவம் பண்ணவேணுமாகில் இஜ்ஜந்மத்தளவன்றிக்கே ஜந்மாந்தரத்திலும் போயநுபவிக்க வேண்டிவருமோவென்ன; ஸம்பந்தஜ்ஞாநபூர்வகமாக அவன் திருவடிகளிலே ஶரணம் புகுந்தார்க்குப் பின்பொரு ஜந்மம்பிறந்து அநுபவிக்கத்தக்க கர்மமுண்டோ வென்கிறார்.

வ்யா:—(உடைமை நானென்றும்) நான் உடைமையென்றும், தன்னுடைய ஸ்வத்வத்தையும். (உடையானுயிரை வடமதுரை வந்துதித்தானென்றும்) இவ்வாத்மாவை யுடையவன்

இத்தைஸம்ஸாரத்தில் நின்று மெடுக்கைக்காக ஶ்ரீமதுரையில் வந்து ஆவிர்ப்பவித்து நின்றவனுடைய ஸ்வாமித்வத்தையும்.

(திடமாக வறிந்து) த்ருடமாகவறிந்து. தத்வஸ்திதியை யாராய்ந்தால், இத்தலைக்குஸ்வத்வமும் அத்தலைக்கு ஸ்வாமித்வமும் வ்யவஸ்திதமாயிறே யிருப்பது. ஆகையாலே உடைமையானவிவனிருந்த விடத்திலே வருவானும், இவனைத்தன்னுடனே சேர்த்துக்கொள்ளுவானும், சேர்ந்தால் தன்பேறாக உகப்பானும் அவனாயிற்று. ஆகவிறே "ப்ராப்தாவும், ப்ராபகனும், ப்ராப்திக்கு உகப்பானும் அவனே" என்று பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்தது. திடமாகவறிகையாவது-இப்படியிருக்கிற ஸம்பந்தத்தை ஸம்ஶயவிபர்யயமறவறிகை. இப்படி இஸ்ஸம்பந்தத்தையறிந்து(அவன் தன் தாளிலடைந்தவர்க்கும்)ஸ்வாமியானவன்திருவடிகளிலே பூர்வவாக்யப்ரக்ரியையாலே ஶரணம்புகுந்தவர்களுக்கும்.

(உண்டோபிறந்து படுநீடுயரம் பின்) அதாவது - பின்பொருஜந்மம் பிறந்தநுபவிக்கத்தக்க தீர்க்கமான கர்மமுண்டோவென்கை, ஶரணாகதரானால் ஆர்த்தராகில் அப்போதே முக்தராகையும் த்ரு (దృ) ப்தராகில் ஆரப்தஶரீராவஸாநத்திலே முக்தராகையுமொழிய ஜந்மாந்தராந்வயமில்லையிறே.

"ఆర్తానామాశుఫలదా సకృదేవకృతాహ్యసౌ। దృప్తానామపిజన్తూనాం దేహాన్తరనివారిణీ - ஆர்த்தாநாமாஶுபலதாஸக்ருதேவ க்ருதாஹ்யஸௌ । த்ருப்தாநாமபிஜந்தூநாம் தேஹாந்தரநிவாரிணீ" என்று ப்ரபத்திஸ்வபாவம் சொல்லுகிறஶாஸ்த்ரமேஇவ்வர்த்தத்தைச் சொல்லாநின்றதிறே. ஆகையாலேயாயிற்று இவரும், உண்டோவென்றருளிச்செய்தது. "స్వత్వమాత్మనిసఞ్జాతంస్వామిత్వం బ్రహ్మణిస్థితమ్। ఉభయోరేషసమ్బన్ధోనపరోభిమతోమమ - ஸ்வத்வமாத்மநிஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரஹ்மணிஸ்திதம் ।உபயோரேஷஸம்பந்தோநபரோபிமதோமம" என்கிற ஶ்ரீவிஷ்ணுதர்மவசநம் இப்பாட்டில்சொன்ன ஸ்வஸ்வாமிஸம்பந்தத்துக்கு ப்ரமாணமாக வநுஸந்தேயம். (உஉ)

மூ.—ஊழிவினைக்குறும்ப ரோட்டருவரென்றஞ்சி
ஏழைமனமே யினித்தளரேல்—ஆழிவண்ணன்
தன்னடிக்கீழ்வீழ்ந்து சரணென்றிரந்தொருகால்
சொன்னதற்பி னுண்டோதுயர். (உ௩)

அவ ;—இருபத்துமூன்றாம்பாட்டு. பூர்வாகப(ஃப)லத்தை யநுஸந்தித்து அது நம்மைவந்து நலியுமென்று தளருகிற திருவுள்ளத்தைத்தேற்றுகிற பாசுரத்தாலே ப்ரபந்நனுக்கு ப்ரபத்திக்குப்பின்பு பூர்வாகபலமான துஃகாநுபவமில்லை யென்னுமத்தை ஸகலரு மறியும்படி யருளிச்செய்கிறார்.

வ்யா;—(ஊழிவினைக்குறும்பர்) பழையதாக ஆர்ஜிக்கப் பட்டகர்மமாகிற குறும்பர். ஊழென்றது - பழைமை. ஊழ் வினையென்றது - பழையவினையென்றபடி. இத்தால் பூர்வாக(ஃ)த்தைசொல்லுகிறது;கர்மங்களைக்குறும்பரென்கிறது-சேதநஸமாதியாலே. குறும்பரானவர்கள் பலத்தாலே நாட்டைத் தம்வசமாக்கி மூலையடி நடத்துமாபோலே கர்மங்களும் இவ் வாத்மாவைத் தம்வழியேயிழுத்து மூலையடியேநடத்துமவை யிறே.

(ஓட்டருவரென்றஞ்சி)ஓடிவருவரென்றுபயப்பட்டு. குறும் பராகையாலே ஓட்டருவரென்கிறது. கீழ்ச்சொன்னகர்மங் கள் ஶீக்ரகதியாய்வந்து நலியுமென்று பயப்பட்டு. (ஏழை மனமே) அறிவிலியான நெஞ்சே! அதாவது- ப்ராப்யவைபவ மும் ப்ரபத்திவைபவமும் ப்ரபந்நன்பெறும்பேறும் அறி கைக்குத்தக்கவளவில்லாத நெஞ்சேயென்கை.

(இனித்தளரேல்)இதுக்குமுன்பு தளர்ந்தாயாகிலும் இனித் தளராதேகொள். இத்தால் திருவுள்ளத்தை. "மாஶுச:-மாஶுச:" என்கிறார். இனியென்றதின் கருத்தைவ்யக்தமாக வரு ளிச்செய்கிறார் மேல் (ஆழிவண்ணன்) கம்பீரஸ்வபாவன். அன் றிக்கே கடல்போலே ஶ்ரமஹரமான வடிவையுடையவ னென் னவுமாம். (தன்னடிக்கீழ்வீழ்ந்து) (க) "ஆழிவண்ணநின்னடியி

(க) தி-மொ-டு-அ-க.

மூ.—வண்டுப்படிதுளபமார்பனிடைச் செய்தபிழை
உண்டு பலவென்றுளந்தளரேல்—தொண்டர்செய்யும்
பல்லாயிரம் பிழைகள் பார்த்திருந்தும் காணுங்கண்
இல்லாதவன்காணிறை. (உச)

ணையடைந்தேன்" என்கிறபடியே அவன்திருவடிகளின் கீழே விழுந்து.

(சரணென்றிரந்து) (க) "త్వమేవోపాయభూతో మేభవ-த்வமேவோபாய பூதோமேபவ" என்கிறபடியே நீயேஎனக்குச் சரணமாக வேணுமென்றர்த்தித்து. (ஒருகால் சொன்னதற்பின்) ப்ரபத்தி ஸக்ருத்கரணீயையாகையாலே இப்படி ஸக்ருதுச்சாரணம் பண்ணினபின்பு.

(உண்டோதுயர்) அதாவது-இப்படிச் சரணாகதனானபின்பு பூர்வாக (ஞ) பலமாய்வருகிற துஃக்கமுண்டோ; ஶரணாகதனான போதேபூர்வாகோத்தராகப்ராரப்தகண்டங்களெல்லாம்கழியுண்டுபோமென்கிற ப்ரமாணபலத்தை நினைத்து உண்டோவென்கிறார்.

"మాభీర్మందమనోవిచిన్త్యబహుధాయామీశ్చిరం యాతనా నామీనః ప్రభవన్తి పాపరిపవస్స్వామీననుశ్రీధరః। ఆలస్యం వ్యపనీయభక్తిసులభంధ్యాయస్వ నారాయణంలోకస్య వ్యసనాపనోదనకరో దాసస్యకింనక్షమః-மாபீர் மந்தமநோ விசிந்த்யபஹுதாயாமீஶ் சிரம்யாதநாநாமீநஃ ப்ரபவந்திபாபரிபவஸ் ஸ்வாமீநநுஶ்ரீதரஃ। ஆலஸ்யம் வ்யபநீயபக்திஸுலபம் த்யாயஸ்வநாராயணம் லோகஸ்யவ்யஸநாபநோதநகரோதாஸஸ்யகிம்நக்ஷமஃ" என்கிற ஶ்ரீமுகுந்தமாலையில் ஶ்லோகத்தை "ஏழைமனமே இனித்தளரேல்" என்றவிதுக்கு ஸம்வாதமாகச் சொல்லுவர்கள். (உரு)

அவ;—இருபத்துநாலாம்பாட்டு. உத்தராகபாஹுள்யத்தை நினைத்துத் தளருகிற திருவுள்ளத்தைத் தேற்றுகிற பாசுரத்தாலே ஸர்வேஶ்வரன் உத்தராக(ஞ)த்தில் கண்வையானென்னுமத்தை ஸகலருமறிய வருளிச்செய்கிறார்.

(க) அஹி-ஸம்-ருசு-ருஅ.

வ்யா:—(வண்டுபடிதுளப மார்பனிடைச்செய்தபிழை) மதுபாநார்த்தமாக வண்டுகள் ஸர்வகாலமும் படிந்துகிடக்கிற திருத்துழாயாலே அலங்க்ருதமான திருமார்பையுடையவன் விஷயத்தில் செய்தகுற்றங்களானவை. இப்போது இந்த விசேஷணம் சொல்லிற்று ஶரணாகதரானவர்களை அநுபவிப்பிக்கைக்காக ஸர்வகாலமும் தன்னை அலங்கரித்துக்கொண்டிருக்குமவன் அவர்கள் ப்ராமாதிகமாகப்பண்ணும் குற்றங்களில் கண்வையானென்றுதோற்றுகைக்காக.

(உண்டுபலவென்று) ப்ரக்ருதியோடிருக்கையாலே மநோவாக்காயங்களால் செய்தவை பலவுமுண்டென்று ஒன்றும் செய்யக்கடவோமல்லோமென்றிருந்தாலும் ப்ராமாதிகமாக வந்துபுகுகிறவை பலவுமுண்டிறே; அத்தைநினைத்து.

(உளந்தளரேல்) நெஞ்சே! தளராதேகொள். உளமென்றது-உள்ளமென்றபடியாய் ஸம்புத்தியாயிருக்கிறது; உள்ளமேயென்றபடி. தளராமலிருக்கத்தக்க தருளிச்செய்கிறார் மேல். (தொண்டர்செய்யும்) தன்பக்கல் பக்தரானவர்கள்செய்யும். தொண்டரென்றது-சபலரென்றபடியாய்,பக்தரானவர்களென்றபடி. அன்றிக்கே தனக்கு ஶேஷபூதரானவர்களென்னவுமாம்.

(பல்லாயிரம்பிழைகள்) குணத்ரயாஶ்ரயமான தேஹத்தோடே யிருக்கையாலே ரஜஸ்தமஸ்ஸுக்களாலேகலங்கி கரணத்ரயத்தாலும் ப்ராமாதிகமாக நாள்தோறும் செய்யுமவை அநேகமாகையாலே அநேகமாயிரம் பிழைகளென்கிறார். பிழை - குற்றம். இத்தால் (௧) "అకృత్యకరణకృత్యాకరణ భగవదపచార భాగవతాపచారా సహ్యాపచారరూప నానావిధానన్తాపచారాన్–அக்ருத்யகரணக்ருத்யாகரண பகவதபசார பாகவதாபசாராஉஸஹ்யாபசாரரூப நாநாவிதாநந்தாபசாராந்" என்றவற்றைச் சொல்லுகிறது. (பார்த்திருந்தும்) ஸர்வஜ்ஞதையாலும், அந்தர்யாமியாகையாலும் ஸர்வகாலமும் ஸர்வருடைய வ்யாபாரமும் பார்த்துக்கொண்டிருக்கச் செய்தேயும்.

(காணுங்கணில்லாதவன் காணிறை) அதாவது - அவர்கள் செய்யும்பிழைகளை தர்ஶிக்கும் கண்ணில்லாதவன்காண் ஶேஷி

---

(௧) ஶரணாகதி கத்யம்.

மூ.—அற்றமுரைக்கி லடைந்தவர்பா லம்புயைகோன்
குற்றமுணர்ந்திகழும் கொள்கையனே—எற்றேதன்
கன்றினுடம்பின் வழுவன்றோ காதலிப்பது
அன்றதனை யீன்றுகந்தவா. (உரு)

யானவனென்கை. இப்போது கண்ணென்கிறது - ஜ்ஞாநத்தையிறே; அதில்லாதவனென்கையாலே-ஆய்ரிதர்செய்யும் குற்றங்களில் அவிஜ்ஞாதாவாயிருக்குமென்றதாயிற்று. இறையென்று ஈய்வரனென்னவுமாம்.

"అవిజ్ఞాతా హి భక్తానామాగస్సు కమలేక్షణః। సదాజగత్సమస్తఞ్చ పశ్యన్నపి హృదిస్థితః - அவிஜ்ஞாதாஹிபக்தாநாமாகஸ்ஸுகமலேக்ஷணஃ। ஸதாஜகத்ஸமஸ்தஞ்ச பய்யந்நபி ஹ்ருதிஸ்திதஃ" என்னக்கடவதிறே. (உச)

அவ;—இருபத்தஞ்சாம்பாட்டு. காணுங்கணில்லாதவன் காணென்று உத்தராக(ஷ)த்தில் அஜ்ஞனாயிருக்குமென்றார்கீழ்; பூர்வாகம் தன்னிலேதேனுமொன்றை தர்யித்தாலும் வத்ஸலனாகையாலே அத்தை போக்யமாகக் கொள்ளுமதொழிய அத்தையிட்டு இவர்களை இகழானென்னுமத்தைஸத்ருஷ்டாந்தமாக வருளிச்செய்கிறார்.

வ்யா;—(அற்றமுரைக்கில்) அறுதியானதுசொல்லில். அதாவது - பரமார்த்தமானது சொல்லிலென்கை. (அடைந்தவர்பால்) ஆய்ரிதரானவர்கள்பக்கல்.

(அம்புயைகோன்) ய்ரியஃபதியானவன். அவள்புருஷகாரமாகவிறே அடியிலங்கீகரித்தது. அப்படி யங்கீகரித்தால் பின்னையென்றுமொக்க அவர்கள்பக்கல் வத்ஸலனாயிருக்குமாயிற்று. தான் காட்டிக்கொடுத்தவர்களை அவன் கைக்கொண்டவதினுரப்பை யறிகைக்காக, அவள்தானே அவர்கள்குற்றங்களைக் காட்டினாலும்(க)"என்னடியாரதுசெய்யார்,செய்தாரேல்நன்று செய்தார்" என்னுமவனிறே.

(குற்றமுணர்ந்திகழும் கொள்கையனே) அதாவது - அவர்கள் குற்றங்களை தர்யித்து அதடியாக அவர்களை இகழ்ந்து

(க) பெரி-தி-மொ-ச கூ-உ.

மூ.—தப்பில் குருவருளால் தாமரையாள் நாயகன்றன்
ஒப்பிலடிகள் நமக்குள்ளது—வைப்பென்று
தேறியிருப்பார்கள் தேசுபொலிவைகுந்தத்
தேறியிருப்பார் பணிகட்கேய்ந்து. (உசு)

---

விடும் ஸ்வபாவத்தையுடையவனேயென்கை. கொள்கை-ஸ்வபாவம். இத்தால், அவள் புருஷகார புரஸ்ஸரமாகத்தன்னாலே அங்கீகரிக்கப்பட்டவர்களுடைய குற்றந்தான் முதலிலே உணரக்கூடாது. உணர்ந்தாலும் வாத்ஸல்யத்தாலே அத்தை போக்யமாகக் கொள்ளுமதொழிய, அத்தையிட்டு அவர்களை இகழக் கூடாதென்னுமிடம் சொல்லுகிறது. இகழும் கொள்கையனே வென்கிறவிதிறே, குற்றத்தை யுணர்ந்தானாகில் அதை போக்ய மாகக் கொள்ளுமித்தனை யென்கிறவர்த்தத்தைக் காட்டுகிறது.

(எற்றே) என்னே! அவனுடைய வாத்ஸல்ய ப்ரகாரமறியாதாரிறே இகழுமென்று நினைக்கிறவர்களென்று என்னேயென்கிறார். அவன் வாத்ஸல்யத்துக்கு ஒருத்ருஷ்டாந்த மருளிச் செய்கிறார் மேல்,

(தன்கன்றினுடம்பின் வழுவன்றே காதலிப்பதன்றதனையீன்றுகந்தவா) என்று. அதாவது - சுவடுபட்டதரையில் புல் கவ்வாததாயிருக்கச்செய்தே தன்கடையில் நின்றும் விழுந்த கன்றினுடைய உடம்பில் வழும்பையன்றே ஸ்நேஹித்து புஜிப்பது, அன்று அத்தைப்பெற்றவத்தாலே அதின்பக்கலுகப்பையுடைத்தான பசுவானதென்கை. இதுதான் ஸர்வேஶ்வரனுடைய வாத்ஸல்யத்துக்கு த்ருஷ்டாந்தமாக ஸகலருமருளிச் செய்யுமதிறே.

“ప్రపన్నాన్మాధవస్సర్వాన్ దోషేణపరిగృహ్యతే। అద్యజాతంయథా వత్సం దోషేణసహవత్సలా -ப்ரபந்நாந்மாதவஸ்ஸர்வாந் தோஷேண பரிக்ருஹ்யதே ।அத்யஜாதம் யதாவத்ஸம் தோஷேணஸஹவத்ஸலா” என்னக்கடவதிறே. இந்தஶ்லோகத்தில் “பரிக்ருஹ்யதே” என்கிறவிது ஆர்ஷம். பரிக்ருஹ்ணாதி யென்றபடி. (உ௫)

அவ;—இருபத்தாறும்பாட்டு. ஆசார்யப்ரஸாதத்தாலே அவனருளிச்செய்த ஶரணாகதியினுடைய அர்த்தத்தை யநுஸந்

தித்து விஸ்வஸித்திருக்குமவர்கள், பரமபதத்திலே போய் பகவத் கைங்கர்யபரராயிருப்பரென்கிறார்.

வ்யா;—(தப்பில் குருவருளால்) தப்பில்லாத குருவினுடைய வருளாலே. அதாவது-ஜ்ஞாநாநுஷ்டாநங்களிலொருதவிர்தலில்லாத ஆசார்யனுடைய் ப்ரஸாதத்தாலே யென்கை.

(தாமரையாள் நாயகன்றன்) ஸ்ரிய:பதியானவன்தன்னுடைய, இத்தால் ஸ்ரீமத்பத நாராயணபதங்களிலர்த்தத்தைச் சொல்லுகிறது. எங்ஙனேயென்னில், தாமரையாள் நாயகனென்கையாலே புருஷகாரபூதையான பிராட்டியோடுண்டான நித்யயோகத்தையும், "நாயகன்றன்" என்கிறவுறைப்பாலே ஆஸ்ரயண ஸௌகர்யாபாதகமாயும் ஆஸ்ரிதகார்யாபாதகமாயுமுள்ள வாத்ஸல்யாதியும் ஜ்ஞாநாதியுமான குணங்களுக்கு ஆஸ்ரயமாயிருக்கு மாகாரத்தையும் சொல்லுகையாலே.

(ஒப்பிலடிகள்) ஒப்பில்லாத திருவடிகள். இத்தால் "சரணௌ" என்கிறபதத்திலர்த்தத்தைச் சொல்லுகிறது. திருவடிகளுக்கொப்பில்லாமையாவது - ஸஹாயாந்தர நிரபேக்ஷமாயிருக்கை.

(நமக்குள்ளத்துவைப்பென்று) அகிஞ்சநராய் அநந்யகதிகளான நமக்கு ஹ்ருதயத்திலிருக்கிற சேமநிதியென்று. இத்தால் சரணபதத்திலும் க்ரியாபதத்திலுமுண்டான வர்த்தங்களைச் சொல்லுகிறது. எங்ஙனேயென்னில்; வைப்பென்று தன்னைக் கொண்டு ஸகலமுமுண்டாக்கிக் கொள்ளலாம், சேமநிதியாகச் சொல்லுகையாலே; உபாயத்வத்தையும், உள்ளத்துவைப்பென்று - ஹ்ருதய ஸம்பந்தத்தையும் தத்விஷயமான மாநஸஸ்வீகாரத்தையும் சொல்லுகையாலே.

இப்படி யநுஸந்தித்து, (தேறியிருப்பார்கள்) இவ்வநுஸந்தாந முண்டானாலும் மஹாவிஸ்வாஸம் வேணுமிறே. ஆகையாலே அப்படி விஸ்வஸித்திருக்குமவர்கள், (தேசுபொலிவைகுந்தத்தேறி) அதாவது-பகவதநுபவகைங்கர்யங்களுக்கு அநுரூபமான தேசமென்னும் தேஜஸ்ஸு மிக்கிருக்கிற ஸ்ரீவைகுண்டத்திலே போய்.

மூ.—நெறியறியாதாரு மறிந்தவர்பால் சென்று
செறிதல்செய்யாத் தீமனத்தர்தாமும் — இறையுரை
தேறாதவரும் திருமடந்தை கோனுலகத் [யைத்
தேறாரிடரழுந்துவார். (உஎ)

(இருப்பார்பணிகட்கேய்ந்து)பணிகளுக்கேய்ந்திருப்பார்-பணிகளென்று - பகவத்கைங்கர்யங்களைச் சொல்லுகிறது. அதுக்கு ஏய்ந்திருக்கையாவது - அநுரூபமான வதிகாரிகளாயிருக்கை. இருப்பாரென்றது - இருப்பரென்றபடி. அன்றிக்கே, பணியென்று - திருவநந்தாழ்வானைய், பஹுவசநம் பூஜ்யவர்சியாய், தத்துல்யராயிருப்பரென்னவுமாம். அதாவது - திருவநந்தாழ்வான், (க)“சென்றால் குடையாம்” என்கிறபடியே அகிலசேஷவ்ருத்திகளிலும் அதிக்ருதனாயிருக்குமாபோலே, அசேஷசேஷவ்ருத்திகளிலும் அந்விதராயிருப்பாரென்கை. “ఆచార్యస్యప్రసాదేన మమసర్వమభీప్సితమ్। ప్రాప్నుయామీతివిశ్వాసో యస్యాస్తి ససుఖీభవేత్ - ஆசார்யஸ்யப்ரஸாதேந மமஸர்வமபீப்ஸிதம் । ப்ராப்நுயாமீதிவிஶ்வாஸோ யஸ்யாஸ்தி ஸஸுகீபவேத்” என்னக்கடவதிறே. (உச)

அவ;—இருபத்தேழாம்பாட்டு. உஜ்ஜீவநோபாயமறியாதாரும், அத்தையுபதேஶிக்குமவர்கள்பக்கல் சேர்ந்தறியாதாரும், சரமஶ்லோகார்த்தத்தை விஶ்வஸியாதவர்களும் பரமபதத்திலேறப்பெறாதே ப (ஞ) வதுஃக்கமக்நராய்ப் போருவர்களென்கிறார்.

வ்யா;—(நெறியறியாதாரும்) ஸம்ஸாரத்தைத் தப்புவிக்குமுபாயமறியாதாரும். நெறி-வழியாய், உபாயத்தைச்சொல்லுகிறது. (அறிந்தவர்பால்சென்று செறிதல் செய்யாத்தீயமனத்தர்தாமும்)உஜ்ஜீவநோபாயமறிந்தவர்கள்பக்கல்சென்று, அவர்கள் இத்தைத்தங்களுக்கு உபதேசிக்கைக்குறுப்பாக, ப்ரணிபாதாபி(த)வாதந பரிப்ரஶ்நஸேவாரூபமான செறிதலைச்செய்யாதே ஸஜாதீயபுத்தியாலே அவர்கள்பக்கல் தோஷதர்ஶநம் பண்ணியிருக்கும் துஷ்டஹ்ருதயரானவர்கள்தாங்களும்.

(க) க-திருவ-ஙிக.

மூ.—சரணாகதிமற்றோர் சாதனத்தைப்பற்றில்
அரணாகாதஞ்சனை தன்சேயை—முரணழியக்
கட்டியதுவேறோர் கயிறுகொண்டார்ப்பதன்முன்
விட்டபடைபோல் விடும். (உஅ)

---

(இம்மறையுரையைத் தேறுதவரும்) ஸர்வேஶ்வரன் கீதோபநிஷதாசார்யனாய் நின்று ஸகலாத்மாக்களும் உஜ்ஜீவிக்கைக் குறுப்பாக அர்ஜுநவ்யாஜத்தாலே அருளிச்செய்த சரமஶ்லோகத்திலர்த்தத்தை விஶ்வஸியாதவர்களும், (திருமடந்தை கோனுலகத்தேறார்)(க)“திருமால்வைகுந்தம்” என்கிறபடியே ஶ்ரிய:பதியினுடைய லோகமான ஶ்ரீவைகுண்டத்திலேறப்பெறார்கள். (இடரழுந்துவார்) ஸம்ஸாரது:க்கமக்நராய்ப் போருவர்களென்கை.

“అజ్ఞశ్చాశ్రద్దధానశ్చ సంశయాత్మా వినశ్యతి । నాయం లోకోऽస్తి న పరో న సుఖం సంశయాత్మనః – அஜ்ஞஶ்சாஶ்ரத்ததாநஶ்ச ஸம்ஶயாத்மாவிநஶ்யதி । நாயம்லோகோஸ்தி நபரோ நஸுகம் ஸம்ஶயாத்மந:” என்று ஶ்ரீகீதையில் அவனருளிச்செய்தவசநம் இப்பாட்டில்சொன்னவர்த்தத்துக்கு ஸம்வாதமாக வநுஸந்தேயம். (உஎ)

அவ;—இருபத்தெட்டாம்பாட்டு. கீழிரண்டுபாட்டாலே பரமபதத்தில் போமவர்கள்படியையும் போகாதவர்கள்படியையுமருளிச்செய்தார். இனி, இப்பாட்டில் பரமபதத்தில் போமவர்களுக்கு இப்பேற்றுக்கடியாகச்சொன்ன ஶரணாகதியானது, தன்னை யவலம்பித்து நிற்குமவன் உபாயாந்தரத்திலே கைவைக்கில் தான் ரக்ஷகமாகாதே தன்னைக்கொண்டு நழுவும்படியை ஸத்ருஷ்டாந்தமாக வருளிச்செய்கிறார்.

வ்யா;—(சரணாகதி)(உ)“అనన్యసాధ్యే స్వాభీష్టే మహావిశ్వాసపూర్వకమ్ । తదేకోపాయతా యాచ్ఞా ప్రపత్తిః శరణాగతిః – அநந்யஸாத்யே ஸ்வாபீஷ்டே மஹாவிஶ்வாஸபூர்வகம் । ததேகோபாயதாயாச்ஞாப்ரபத்திஶ்ஶரணாகதி:” என்றும், (ங) “అహమస్మ్యపరాధానామాలయోऽకించనోऽగతిః । త్వమేవోపాయభూతో మే భవేతి ప్రార్థనామతిః – அஹமஸ்ம்

---

(க) தி-வாய்-கo-எ-அ (உ) விஷ்வக்ஸேநஸம்.
(ங) அஹி-ஸம்-ஙசு-ஙஅ.

யபராதாநா மாலயோகிஞ்சநோகதிः । த்வமேவோபாய பூதோமேபவேதி ப்ரார்த்தநாமதிः ’’ என்னும் சொல்லுகிறபடியே மஹாவிஶ்வாஸ பூர்வகமாக அகிஞ்சநனாய் அநந்யகதியான வதிகாரியாலே அநுஷ்டிக்கப்படுமதாய், (௧) “ఆర్తానామాశుఫలదా-ஆர்த்தாநாமாஶுபலதா” இத்யாதிப்படியே அமோகை (ஆ)யாய்க்கார்யம்செய்யும் சரணாகதியானது,

(மற்றோர் சாதனத்தைப்பற்றில்) தன்னுடைவிதனை சேதநன் தன் வைபவத்தையறிந்து இதுவே நமக்கு ரக்ஷகமென்று விஶ்வஸித்து நிற்கையன்றிக்கே, இதுக்குத்துணையாக நாமும் சிலசெய்வோமென்று ஸ்வயத்நரூபோபாயங்களிலொன்றையவலம்பிக்கில், (அரணாகாது) தான் இவனுக்கு ரக்ஷகமாகாதே இவனைவிட்டுப்போம்.

இதுதன்னை த்ருஷ்டாந்த பூர்வகமாக உபபாதிக்கிறார்மேல் (அஞ்சனைதன்சேயை) அஞ்ஜனையினுடைய புத்ரனை திருவடியை. சேய் - புத்ரன். (முரணழியக்கட்டியது) பலமழியும்படியாகக்கட்டினது. முரண் - மிடுக்கு. (வேறோர்கயிறுகொண்டார்ப்பதன்முன்) தன்பக்கல் அவிஶ்வாஸம்பண்ணி வேறேயொரு சணற்கயிற்றைக்கொண்டு கட்டுவதற்குமுன்னே, முன்னேயென்றது - கட்டுகையிலே ப்ரவ்ருத்தமான போதேயென்றபடி.

(விட்டபடைபோல் விடும்) முன்பவனைக்கட்டினதாய் வேறேயொருகயிற்றைக்கொண்டு கட்டுகிறவளவிலே தான்விட்டுப்போன ப்ரஹ்மாஸ்த்ரம் போலே தன்னைப்பற்றி நின்றவிவன் உபாயந்தரத்திலே அந்வயித்தபோது தான் இவனைவிட்டுப்போமென்கை. “ప్రపత్తేః క్వచిదప్యేవం పరాపేక్షా న విద్యతే । సా హి సర్వత్ర సర్వేషాం సర్వకామఫలప్రదా । సకృదుచ్చారితా యేన తస్య సంసారనాశినీ । రాక్షసానామ విస్రమ్భాదాఞ్జనేయస్య బన్ధనే । యథా విగలితా సద్యస్స్వమోఘాప్యస్త్రబన్ధనా । తథా పుంసామవిస్రమ్భాత్ప్రపత్తిః ప్రచ్యుతా భవేత్ । తస్మాద్విస్రమ్భయుక్తానాం ముక్తిం దాస్యతి సాచిరాత్-ப்ரபத்தேः க்வசிதப்யேவம் பராபேக்ஷாநவித்யதே। ஸாஹிஸர்வத்ரஸர்வேஷாம் ஸர்வ

(௧) பகவச்சாஸ்த்ரே.

மூ;—மந்திரமும்மீந்த குருவு மம்மந்திரத்தால்
சிந்தனைசெய்கின்ற திருமாலும்—நந்தலிலா
தென்றுமருள்புரிவர் யாவரவரிடரை
வென்று கடிதடைவர் வீடு. (உகூ)

---

காமபலப்ரதா । ஸ்க்ருதுச்சாரிதாயேந தஸ்யஸம்ஸாரநாஶிநீ।
ராக்ஷஸா ந்நாமவிஸ்ரம்பா தாஞ்ஜநேயஸ்யபந்தநே।யதாவிகளிதா
ஸத்யஸ்த்வமோகாபீ யஸ்த்ரபந்தநா। ததாபும்ஸாமவிஸ்ரம்பாத்
ப்ரபத்திః ப்ரச்யுதாபவேத்। தஸ்மாத்விஸ்ரம்பயுக்தாநாம் முக்
திம் தாஸ்யதிஸாசிராத்" என்று இவ்வர்த்தந்தான்ஸநத்குமார
ஸம்ஹிதையிலே சொல்லப்பட்டதிறே. (உஅ)

அவ்;—இருபத்தொன்பதாம் பாட்டு. ‹மந்த்ரகுருதேவதை
கள் மூன்றினுடையவும் ப்ரஸாதத்துக்கு ஸர்வகாலமும் விஷய
மாய்ப் போருமவர்கள் ஸம்ஸார துஃக்கத்தைவென்று சடக்கெ
னமோக்ஷத்தைப் பெறுவரென்கிறார்.

வ்யா;—(மந்திரமும்) "మన్త్రారం త్రాయత ఇతి మన్త్రః-மந்தாரம்
த்ராயத இதிமந்த்ரঃ" என்கிறபடியே அநுஸந்தாதாவுக்குரக்ஷ
கமான திருமந்த்ரமும். (ஈந்தகுருவும்) மந்த்ரப்ரதனானவாசார்
யனும், (அம்மந்திரத்தால் சிந்தனைசெய்கின்ற திருமாலும்) அந்
தமந்தர ப்ரதிபாத்யனாய் அத்தாலே அநுஸந்திக்கப்படுகிற ஶ்ரி
யঃபதியும்.

(நந்தலிலாது) நந்துதலின்றிக்கே. அதாவது-நந்துதல்-கே
டாய், அதில்லையென்கையாலே விச்சேதமன்றிக்கே யென்கை.
(என்றுமருள் புரிவர்யாவர்) ஸர்வகாலமும்ப்ரஸாதத்தைப்பண்
ணுகைக்கு விஷயபூதராயிருக்குமவர்கள் யாவர் சிலர், (அவரிட
ரைவென்று கடிதடைவர்வீடு) அதாவது-அவர்கள் ஸாம்ஸாரிக
மான துஃக்கங்களையும் ஜயித்து ஶீக்ரமாகப்பரமபுருஷார்த்த
லக்ஷணமோக்ஷத்தை ப்ராபிப்பர்களென்கை.

"దేవతాయాగురో శ్చైవమన్త్రస్యైవప్రసాదతః।ఐహికాముష్మికాసిద్ధి
ర్ద్విజస్యాస్య న సంశయః - தேவதாயா குரோஶ்சைவ மந்த்ரஸ்யை
வப்ரஸாததঃ । ஐஹிகாமுஷ்மிகா ஸித்திர்த்விஜஸ்யாஸ்யநஸம்

மூ;—மாடுமனையும் கிளையுமறை முனிவர்
தேடுமுயர்வீடும் செந்நெறியும்—பீடுடைய
எட்டெழுத்தும் தந்தவனே யென்றிரார் தாருறவை
விட்டிடுகை கண்டீர் விதி. (௩௰)

ஸ்யஃ" என்று புராணஸாரஸமுச்சயத்தில் மூலமந்த்ரமாஹாத்ம்யத்தில் சொன்ன வசநம் இதுக்கு ப்ரமாணமாக அநுஸந்தேயம். "మన్త్రే తద్దేవతాయాఞ్చ తథా మన్త్రప్రదే గురౌ । త్రిషు భక్తిస్సదా కార్యా సా హి ప్రథమసాధనమ్ - மந்த்ரே தத்தேவதாயாஞ்ச ததா மந்த்ரப்ரதே குரௌ । த்ரிஷு பக்திஸ்ஸதா கார்யா ஸா ஹி ப்ரதமஸாதநம்" என்னக்கடவதிறே. (உ௯)

அவ;—முப்பதாம்பாட்டு;—தனக்கபேக்ஷிதமான ஐஹிகாமுஷ்மிக ஸகலவஸ்துக்களும் திருவஷ்டாக்ஷரப்ரதனான வாசார்யனேயென்றிராதவர்களோடுள்ள ஸம்பந்தத்தை விடுகை ஶாஸ்த்ரவிஹிதமென்கிறார்.

வ்யா;—(மாடும்) தனக்குபோக்யமான க்ஷீராதிகளையுண்டாக்குமவை யென்று தரிக்கப்படும பசுக்களும் (மனையும்) போக (భోగ) ஸ்தாநமானக்ருஹமும். (கிளையும்) தங்களோட்டைகலவிதானே போக (భోగ) மாம்படியிருக்கும்பந்துக்களும்; இவை-மற்றும் ஐஹிகமான போக்யவஸ்துக்களுக் கெல்லாமுபலக்ஷணம்.

(மறைமுனிவர் தேடுமுயர்வீடும்) வைதிகராய் பகவந்மநநஶீலராயிருக்குமவர்கள் ப்ராப்யமென்று விரும்பித்தேடப்படுமதாய் கைவல்யமோக்ஷம்போலன்றிக்கே உத்க்ருஷ்டமான மோக்ஷமும். (செந்நெறியும்) அந்தமோக்ஷத்தை ப்ராபிக்கைக்குடலாகப்போருமர்ச்சிராதிமார்க்கமும். அன்றிக்கே, செந்நெறியென்று அந்தமோக்ஷத்தை ப்ராபிக்கைக்குறுப்பான உபாயத்தைச் சொல்லவுமாம்.

(பீடுடையவெட்டெழுத்தும் தந்தவனேயென்றிராதாருறவை) கீழுக்தமானவையெல்லாம்ஸம்ஸாரவர்த்த(క)கங்களுமாய், க்ஷுத்ரங்களுமான மந்த்ராந்தரங்கள்போலன்றிக்கே ஸம்ஸார

மூ.—வேதமொருநான்கினுட்பொதிந்தமெய்ப்பொருளும்
கோதில் மனுமுதல்நூல் கூறுவதும்—தீதில்
சரணாகதிதந்த தன்னிறைவன்தாளே
அரணாகுமென்னுமது. (௩௧)

நிவர்த்தகமாகையாலே வந்தபெருமையையுடைய திருவஷ்டாக்ஷரத்தைத் தந்தருளின வாசார்யனே யென்றிராதவர்களோடுண்டான ஸம்பந்தத்தை.

(விட்டிடுகைகண்டீர்விதி) விடுகையாவது - ஶாஸ்த்ரவிஹிதம் காணுங்கோளென்கை. இத்தால் அவர்களோட்டை ஸம்பந்தம் அவஶ்யம்விடவேணுமென்றதாயிற்று.

"ఐహికాముష్మికం సర్వంగురురష్టాక్షరప్రదః । ఇత్యేవంయేనమన్యన్తే త్యక్తవ్యాస్తేమనీషిభిః - ஐஹிகாமுஷ்மிகம ஸர்வம்குருரஷ்டாக்ஷரப்ரதஃ । இத்யேவம்யேநமந்யந்தே த்யக்தவ்யாஸ்தே மநீஷிபிஃ" என்னக்கடவதிறே, (௩௦)

அவ;—முப்பத்தோராம்பாட்டு. ஸகலவேதாந்தார்த்தமான பரமார்த்தமும், தது பப்ருஂஹணங்களான ஶாஸ்த்ரங்கள்சொல்லுமதுவும்ஶரணாகதிப்ரதனானஸ்வாசார்யன்திருவடிகளே ரக்ஷகமென்னுமது வென்கிறார்.

வ்யா;—(வேதமொருநான்கினுட்பொதிந்த மெய்ப்பொருளும்) அபௌருஷேயமாய் நித்யநிர்த்தோஷமாய் ஆப்ததமமாயிருக்கையாலே அத்விதீயமாய், ரிகாதிபேதத்தாலே சதுர்விதமான வேதத்தினுள்ளே எட்டுப்புரியுமிட்டுக் கட்டிவைக்குமாபோலே சேமித்துவைத்த பரமார்த்தமும், இத்தால், வேதமென்கையாலே இவ்வர்த்தப்ரதிபாதகமான ப்ரமாணத்தினுடைய கௌரவமும், நான்கினென்கையாலே, அதுதன்னில் எங்கேனுமொரு ப்ரதேஶத்தில் ப்ரதிபாதிக்கப்படுவதன்றிக்கே, அநேகஶாகாரூபமான வதுக்கெல்லாம் தாத்பர்யம் இதுவென்னுமிடமும், உட்பொதிந்தவென்கையாலே - அதுதான்மேலெழச் சொல்லிப்போருமதின்றிக்கே உள்ளேசேமித்துவைக்கப்பட்டதென்னுமிடமும், மெய்ப்பொருளென்கையாலே—அது

தான் அர்த்தவாதரூபமானதன்றிக்கே தத்வரூபமான வர்த்த மென்னுமிடமும் சொல்லிற்றாயிற்று.

(கோதில்மனுமுதல்நூல்கூறுவதும்) கோதில்லாத மந்வாதிஶாஸ்த்ரங்கள் சொல்லுவதும். கோதில்லாமையாவது - குற்றமில்லாமை. அதாவது - அயதார்த்த ப்ரதிபாதகமாகிற தோஷமில்லாமை. இது மனுவுக்கு விஶேஷணமாதல், எல்லாத்துக்கும் விசேஷணமாதல்; மனுவுக்கு விஶேஷணமான போது(க)"యద్వైకిఞ్చ మనురవదత్తద్భేషజమ్-யத்வைகிஞ்சமநுரவதத் தத்பேஷஜம்" என்றும்,(உ)" మన్వర్థవిపరీతాతుయాస్మృతిస్సానశస్యతే-மந்வர்த்தவிபரீதாது யாஸ்ம்ருதிஸ்ஸாநஶஸ்யதே" என்றும் சொல்லும்படியான அதினுடைய ப்ராமாண்ய கௌரவம் சொல்லுகிறது. எல்லாத்துக்கும் விஶேஷணமானபோது அவற்றினுடைய ஆப்ததமத்வம்சொல்லுகிறது. மனுமுதல் நூல்களாவன - மற்றுமுண்டான ஸாத்விகஸ்ம்ருதிகளும், இதிஹாஸ புராணங்களும், பாஞ்சராத்ராதிகளுமாகிற ஶாஸ்த்ரங்கள். கூறுகையாவது - இவையெல்லாம் ஏககண்டமாக வேதஹ்ருதயமான வந்தவர்த்தத்தைச் சொல்லுகை. வேதார்த்தத்தை விஶதீகரிக்கையிறே இவற்றுக்குக் க்ருத்யம்.

(தீதில் சரணாகதிதந்த) தீதில்லாத சரணாகதியையுபகரித்த. அதாவது - அதிக்ருதாதிகாரத்வமும், அபாயபஹுளத்வமும், அப்ராப்தத்வமுமாகிறதோஷமின்றிக்கேயிருக்கிறசரணாகதியை. தரித்ரனுக்குச் சீரியநிதியைக்கொடுக்குமாபோலே உபகரித்த வென்கை.

"பீடுடையவெழுத்தும்தந்தவனே" என்றார்கீழ்; இங்கே சரணாகதிதந்தவனென்றார்; கீழதுபோலுமன்றிறே இது. நம்மாசார்யர்கள் மற்றரஹஸ்யங்களிரண்டிலுமர்த்தத்தைமறைத்து ஶப்தத்தை வெளியிட்டுக்கொண்டு போருவர்கள். இதிலர்த்தம்போலே ஶப்தத்தையுமறைப்பார்களென்னும்படி யிருப்பதொன்றாகையாலே, திவ்யமங்களவிக்ரஹமும் விக்ரஹகுணங்களும் திவ்யாத்மஸ்வரூபமும் ஸ்வரூபகுணங்களும் நித்யமுக்த

(க) யஜு-௩-காண்ட்-உ-ப்ர-க௦-அ-ப.    (உ)

ருக்கு ப்ராப்யமாயிருக்குமாபோலே முமுக்ஷுவாய் ப்ரபந்ந னானவதிகாரிக்கு த்வயமூரீரமே ப்ராப்யமாயிருக்குமென்றிறே நஞ்சியரருளிச்செய்தது. இப்படியிருக்கிற வற்றையிறே இவ னுக்கு உபகரித்தது.

(தன்னிறைவன்) தன்னுடையவாசார்யன். இறைவனென் றது - ஶேஷியென்றபடி. தன்னிறைவனென்கையாலே - ஸர்வஸாதாரணஶேஷியான ஈஶ்வரனைப்போலன்றிக்கே தனக்கஸாதாரண ஶேஷியானவனென்கை. (தாளே) அவனுடைய திருவடிகளே. ப்ரதமபர்வத்தோபாதி சரமபர்வத்திலும் திருவடிகளேயிறே உத்தேஶ்யம். அவதாரணத்தாலே அதினுடைய ஸஹாயாந்தரநைரபேக்ஷ்யம்சொல்லுகிறது.

(அரணாகுமென்னுமது) ரக்ஷகமாமென்கிற வர்த்தமென்கை. அரணாவது - ரக்ஷகம். தன்னிறைவனென்றும், தாளேயரணாகுமென்றும் ஶேஷித்வஶரண்யத்வங்களைச் சொல்லுகையாலே ப்ராப்யத்வம் அர்த்தாத்ஸித்தமிறே.

"గురురేవపరంబ్రహ్మ గురురేవపరాగతిః। గురురేవపరావిద్యాగురు
రేవపరంధనమ్। గురురేవపరఃకామోగురురేవపరాయణమ్। యస్మాత్తదుపదే
ష్టాసౌతస్మాద్గురుతరోగురుః। అర్చనీయశ్చవన్ద్యశ్చ కీర్తనీయశ్చసర్వదా।
ధ్యాయేజ్జపేన్నమేద్భక్త్యాభజేదభ్యర్చయేన్ముదా। ఉపాయోపేయభావేన
తమేవశరణంవ్రజేత్। ఇతిసర్వేషు వేదేషుసర్వశాస్త్రేషుసమ్మతమ్। ఏవంద్వ
యోపదేష్టారంభావయేద్బుద్ధిమాన్ధియా - குருரேவபரம் ப்ரஹ்மகுருரேவபராகதி:। குருரேவபராவித்யா குருரேவபரம்தநம்। குருரேவபர:காமோ குருரேவபராயணம்। யஸ்மாத்ததுபதேஷ்டாஸௌ தஸ்மாத்குருதரோ குரு:। அர்ச்சநீயஶ்சவந்த்யஶ்ச கீர்த்தநீயஶ்ச ஸர்வதா। த்யாயேஜ்ஜபேந் நமேத்பக்த்யா பஜேதப்யர்ச்சயேந்முதா। உபாயோபேயபாவேந தமேவ ஶரணம்வ்ரஜேத்।இதிஸர்வேஷுவேதேஷு ஸர்வஶாஸ்த்ரேஷு ஸம்மதம்। ஏவம்த்வயோபதேஷ்டாரம்பாவயேத்புத்திமாந்தியா" என்றும் ஸ்ரீஸாத்விகதந்த்ரத்திலே த்வய ப்ரஸங்கத்திலே தது பதேஷ்டாவான ஆசார்யனுடைய வைபவம் பகவானாலே அருளிச்செய்யப் பட்டதிறே. (௩௧)

மூ;—மானிடவனென்றும் குருவை மலர்மகள் கோன்
தானுகந்தகோல முலோகமென்றும்—ஈனமதா
வெண்ணுகின்ற நீசரிருவருமே யெக்காலும்
நண்ணிடுவர் கீழாம்நரகு. (௩௨)

அவ;—முப்பத்திரண்டாம் பாட்டு. திருவஷ்டாக்ஷரப்ரதஞன வாசார்யன்திருவடிகளே ஸகலப்ராப்யமென்றறியாதாருறவைவிடுகை ஶாஸ்த்ரவிஹிதமென்றும், ஸகலஶாஸ்த்ரமும் ப்ரதிபாதிப்பது ஶரணாகதி ப்ரதஞன ஆசார்யன்திருவடிகளே ரக்ஷகமாமென்னுமது வென்றுமருளிச் செய்கையாலே ஆசார்யவைபவத்தை ப்ரகாஶிப்பித்தார் கீழிரண்டு பாட்டாலே. இப் பாட்டில் இப்படியிருந்துள்ள வாசார்யனை அவதார விசேஷமென்று ப்ரதிபத்திபண்ணுதே மாநுஷப்ரதிபத்தி பண்ணுமவனுக்கு வருமநர்த்தத்தை அர்ச்சாவதாரத்திலுபாதாநநிரூபணம் பண்ணுமவனேடு சேர்த்தருளிச் செய்கிறார்.

வ்யா;—(மானிடவனென்றும் குருவை) ஆசார்யனை மநுஷ்யனென்றும்; அதாவது “ సాక్షాన్నారాయణోదేవః కృత్వామర్త్యమయీం తనుమ్- ஸாக்ஷாந்நர்ராயணோதேவः க்ருத்வாமர்த்யமயீம் தநும்” இத்யாதிப்படியே தன்னைஸம்ஸாரத்தில் நின்று மெடுக்கைக்காக ஈஶ்வரன் மநுஷ்யரூபங்கொண்டு வந்திருக்கிறனென்றறியாதே மேலெழுந்த வாகாரத்தைப்பார்த்து ஆசார்யனை மநுஷ்யனென்று ப்ரதிபத்திபண்ணுகை. (க) “యస్యసాక్షాద్భగవతి జ్ఞానదీప ప్రదేగురౌ। మర్త్యబుద్ధిశ్శ్రుతంతస్యసర్వంకుఞ్జరశౌచవత్ - யஸ்யஸாக்ஷாத் பகவதிஜ்ஞாநதீபப்ரதேகுரௌ। மர்த்யபுத்திஶ்ஶ்ருதம் தஸ்யஸர்வம் குஞ்ஜரஶௌசவத்” என்று ஆசார்யனை மநுஷ்யனென்று நினைக்கிறவன்புத்தி அஸத்புத்தியென்றும், அவன்கற்ற கல்வியெல்லாம் நிஷ்ப்ரயோஜநமென்றும் ஶ்ரீபாகவதத்திலே சொல்லிற்றிறே.

(மலர்மகள்கோன் தானுகந்தகோலமுலோகமென்றும்) ஶ்ரியःபதியானவன் தானுகந்தருளின விக்ரஹத்தை லோஹமென்றும்; அதாவது—(உ) “உமருகந்துகந்த வுருவம்நின்னுருவ

(க) பாகவதம்- (உ) தி-வாய்-அ-௧.௪.

ம்'' என்கிறபடியே ஆஶ்ரிதரானவர்களுகந்ததடியாக அவனுகந்து பரிக்ரஹித்துநிற்கிற அர்ச்சாரூபத்தை அப்ராக்ருத விக்ரஹத் தோபாதியாக ப்ரதிபத்திபண்ண வேண்டியிருக்க, மேலெழுந்த வாகாரத்தையேபார்த்து அதினுடைய உபாதாந நிரூபணம் பண்ணுகை. "అర్చావతారోపాదానం వైష్ణవోత్పత్తి చింతనమ్। మాతృయోని పరీక్షాయాస్తుల్యమాహుర్మనీషిణః - அர்ச்சாவதாரோபாதாநம் வைஷ்ணவோத்பத்திசிந்தநம் । மாத்ருயோநி பரீக்ஷாயாஸ் துல்ய மாஹுர்மநீஷிணஃ'' என்று அர்ச்சாவதாரோபாதாந நிரூபணத்தை மாத்ருயோநி பரீக்ஷாஸமமாக ஶாஸ்த்ரம் சொல்லிற் றிறே.

(ஈனமதா) ஹீநமாக. இப்படித்தண்ணியதாக வென்றபடி. (எண்ணுகின்றநீசர்) சிந்தியாநிற்கிறநீசர். இவர்களிற்காட்டில் தண்ணியரில்லையென்கை. அதாவது - ஆசார்யவிஷயத்தையும் அர்ச்சாவதாரவிக்ரஹத்தையும் கீழ்ச்சொன்னபடியே தண்ணியதாக ப்ரபத்தி பண்ணுமவர்கள் கர்மசண்டாளரென்கை.

(இருவருமே) இவ்விருவரோடு துல்யபாபிகளில்லாமையாலே மேற்சொல்லுகிறவநர்த்தம் இவர்களிருவர்க்குமே யுள்ள தென்கை. (எக்காலும்) எல்லாக்காலத்திலும். காலதத்வமுள்ளதனையுமென்றபடி. (நண்ணிடுவர்கீழாநரகு) இதுக்கு மேல் பொல்லாததில்லையென்னும்படித் தண்ணியதான நரகத்தை ப்ராபிப்பர்களென்கை. எக்காலும் நண்ணிடுவரென்கையாலே நரகத்திலே ஸ்ருஷ்டியும், நரகத்திலே ஸம்ஹாரமுமாய்ச் செல்லுமாயிற்று. அன்றிக்கே, எக்காலும் கீழாநரகென்று * விடியாவெந்நரகான ஸம்ஸாரத்தைச் சேர்ன்னபோது நித்ய ஸம்ஸாரிகளாய்ப் போவர்களென்றபடி.

"విష్ణోరర్చావతారేషు లోహభావం కరోతియః। యోగురౌమానుషం భావముభౌ నరకపాతినౌ - விஷ்ணோரர்ச்சாவதாரேஷு லோஹ பாவம் கரோதியஃ। யோகுரௌமாநுஷம்பாவ முபௌநரகபாதிநௌ'' என்கிற ப்ரஹ்மாண்டபுராணவசநம் இவ்வர்த்தத்துக்கு ஸம்வாதமாக அநுஸந்தேயம். (௨௨)

மூ.—எட்டவிருந்தகுருவை யிறையன்றென்று
விட்டோர்பரனை விருப்புறுதல்—பொட்டெனத்தன்
கண்செம்பளித்திருந்துக் கைத்துருத்திநீர் தூவி
அம்புதத்தைப் பார்த்திருப்பானற்று. (௩௩.)

---

அவ ;— முப்பத்துமூன்ரும்பாட்டு. ஆஸந்நனாயிருக்கிற வாசார்யனை அவமதிபண்ணிக்கைவிட்டு அதிதூரஸ்தனான ஈஸ்வரனை அபேக்ஷித்ததசையில் உதவுமென்று நினைத்து ஆசைப்படுவமன் அறிவுகேடனென்னுமத்தை த்ருஷ்டாந்தமுகேந வருளிச்செய்கிருர்.

வ்யா;—(எட்டவிருந்தகுருவை) ஆஸந்நமாக விருந்தவாசார்யனை. அதாவது-சக்ஷுர்க(?)ம்யனாய்த் தனக்குவேண்டிய போது ரக்ஷகனாகவும் போக்யனாகவும் உஜ்ஜீவிக்கலாம்படி ஸந்நிஹிதனாயிருக்கிற வாசார்யனையென்கை.

(இறையன்றென்றுவிட்டு) ஶேஷியன்றென்றுவிட்டு. அதாவது-"சரணகதிதந்த தன்னிறைவன்தாளே" என்கிறபடியே தனக்கிறைவனாயிருக்க ஸஜாதியபுத்தியாலே அவனிறையன்றென்றுவிட்டென்கை.

(ஓர்பரனை விருப்புறுதல்) பரனாயிருப்பானொருவனை விரும்புகை. அதாவது - ஶாஸ்த்ரகம்யனாய், அதிதூரஸ்தனாய், தனக்கனுகவரியனாயிருக்கும் ஈஶ்வரனை, ரக்ஷகனாகவும் போக்யனாகவும் அநுஸந்தித்து அவனைலபிக்கவேணுமென்று ஆசைப்படுகையென்கை.

(பொட்டென) சடக்கெண. (தன்கண்செம்பளித்திருந்து) தூங்குவாரைப்போலே தன்கண்ணை மூடிக்கொண்டிருந்து. மேல்வினைவது விசாரியாமலிருந்தென்றபடி. (கைத்துருத்தி நீர் தூவி) விடாய்பிறந்தபோது உபஜீவிக்கலாம்படி துருத்தியிலே சேர்த்துத் தன்கரஸ்த்தமாயிருக்கிற ஜலத்தை நிலத்திலே உகுத்து.

(அம்புதத்தைப் பார்த்திருப்பானற்று) மேககதமானஜலம் விடாய்க்கு உதவுமென்று நினைத்து ஆகாஶவர்த்தியாய் அதிதூ

மூ;—பற்றுகுருவைப் பரனன்றென விகழ்ந்து
மற்றோர்பரனை வழிப்படுதல்—எற்றேதன்
கைப்பொருள்விட்டாரேனும்காசினியில்தாம்புதைத்த
அப்பொருள் தேடித்திரி வானற்று, (௩௪)

ரஸ்த்தமாயிருக்கிற அம்புதத்தைப் பார்த்திருக்குமவனைப் போலே. அவனைப்போலேயென்றது-அவன் செயலைப்போலேயென்றபடி; அல்லது விருப்புறுதலென்றதோடு சேராதிறே.

"చక్షుర్గమ్యంగురుంత్యక్త్వా శాస్త్రగమ్యస్తు యస్స్మరేత్। కరస్థముదకంత్యక్త్వా ఘనస్థమభివాఞ్ఛతి - சக்ஷுர்க்கம்யம் குரும்த்யக்த்வா ஶாஸ்த்ரகம்யந்துயஸ்ஸ்மரேத் । கரஸ்தமுதகம்த்யக்த்வாகநஸ்தமபிவாஞ்சதி" என்றிவ்வர்த்தந்தான் பகவத் போதாயநக்ருதமானபுராணஸமுச்சயத்தில் ஆசார்யமாஹாத்ம்யப்ர கரணத்தில்சொல்லப்பட்டதிறே. (௩௩)

அவ;—முப்பத்து நாலாம் பாட்டு. அதிஸுலபனாய்த்தனக்குக்கைப்புகுந்திருக்கிற வாசார்யனை அபரத்வபுத்தியாலே உபேக்ஷித்து, அதிதுர்லபனாய் அநேகயத்நப்பட்டுக்காணவேண்டும்படியிருக்கும் ஈஶ்வரனை அபேக்ஷித்த ஸமயத்தில் நமக்கு உதவுமென்று நினைத்து அநுவர்த்திக்கை அஜ்ஞாநகார்யமென்னுமதை இன்னமொருத்ருஷ்டாந்தத்தாலே தர்ஶிப்பிக்கிறார்.

வ்யா ;—(பற்றுகுருவை) தன்னாலே பற்றப்பட்டிருக்கிற வாசார்யனை. அதாவது-அதிஸுலபனாய்த் தனக்கபேக்ஷிதமான தசையில் ரக்ஷகனாகவும் போக்யனாகவும் ஆஶ்ரயிக்கப்பட்டிருக்கிற வாசார்யனையென்கை (பரனன்றென விகழ்ந்து)"యస్య సాక్షాద్భగవతి జ్ఞానదీప ప్రదే గురౌ - யஸ்யஸாக்ஷாத் பகவதி ஜ்ஞாநதீபப்ரதேகுரௌ" என்று பகவதவதாரமாக ஶாஸ்த்ரம்சொல்லுகையாலே பரனாயிருக்கிறவனை, ஸஜாதீயபுத்தியாலே இவன் பரனன்றென்று அவமதிபண்ணிக் கைவிட்டு.

(மற்றோர்பரனை வழிப்படுதல்) வேறேயொரு பரனைவழிப்படுகை; அதாவது-அதிதுர்லபனாய்த் தன்கண்ணுக்குவிஷயமன்றிக்கே அநேகம் வருத்தப்பட்டுக் காணவேண்டும்படியிருப்பா

மூ;—என்றுமனைத்துயிர்க்கு மீரஞ்செய்நாரணனும்
அன்றும் தன்னூரியன்பாலன்பொழிபில்—நின்ற
புனல்பிரிந்தபங்கயத்தைப் பொங்குசுடர் வெய்யோன்
அனலுமிழ்ந்து தானுலர்த்தியற்று. (௩௫)

ஞனவீஶ்வரனைத் தனக்கு ரக்ஷகனும் போக்யனுமாக நினைத்துத் தல்லாபார்த்தமாகவநுவர்த்திக்கை யென்கை. (எற்றே) இவன் விட்ட விஷயத்துக்கும் பற்றின விஷயத்துக்குமுள்ள நெடுவாசியைத் திருவுள்ளம்பற்றி விஷண்ணராய் என்னேயென்கிறார்.

(தன்கைப் பொருள்விட்டு) வேண்டினபோது விநியோகம் கொள்ளலாம்படி மடிச்சீலையிலே கட்டித்தன்கையிலிருக்கிற தநத்தை அல்பமென்ற நினைவாலேவிட்டு.

(ஆரேனும் காசினியில் தாம்புதைத்த) வெளிநிலத்திலன்றிக்கே பூமிக்குள்ளே மற்றாரேனும் தாங்கள்புதைத்துவைத்த; (அப்பொருள் தேடித்திரிவானற்று) அந்த தநத்தைத்தான் லபிக்கைக்குத்தேடித் திரியுமவன்போலே. இங்குமவன்செயல்போலேயென்றபடி. வழிப்படுதலென்றத்தோடு சேரவேணுமிறே.

"సులభంస్వగురుంత్యక్త్వా దుర్లభంయఉపాసతే । లబ్ధంత్యక్త్వా ధనం మూఢో గుప్తమన్వేషతిక్షితౌ - ஸுலபம் ஸ்வகுரும்த்யக்த்வா துர்லபம்ய உபாஸதே।லப்தம்த்யக்த்வா தநம் மூடோகுப்தமந்வேஷதிக்ஷிதௌ" என்னக்கடவதிறே, இந்தஶ்லோகத்திலே "ఉపాసతే உபாஸதே" என்றது-ஆர்ஷம். உபாஸ்தேயென்றபடி. (௩௪)

அவ ;—முப்பத்தஞ்சாம் பாட்டு. ஆஸந்நமாய் ஸுலபமான ஆசார்ய விஷயத்தைவிட்டு தூரஸ்தமாய் துர்லபமான ஈஶ்வர விஷயத்தை யாசைப்படுவார் அறிவிலிகளென்னு மத்தைத்ருஷ்டாந்தத்வயத்தாலே தர்ஶிப்பித்தார்கீழ். ஆசார்யவிஷயத்தில் ப்ரேமமற்றவனுக்கு ஈஶ்வரன் ஒருகாலமும் அநுக்ரஹம் பண்ணான்; நிக்ரஹமே பண்ணுமென்னுமத்தை ஸத்ருஷ்டாந்தமாக வருளிச்செய்கிறாரிதில்.

வ்யா ;—(என்றும்) எல்லாக்காலத்திலும். (அனைத்துயிர்க்கும்) எல்லாவாத்மாக்களுக்கும். (ஈரஞ்செய்நாரணனும்) தண்ணளி பண்ணாநிற்கும் ஸர்வேஶ்வரனும். நாரணனுமென்றது - (க) "உறவேல் நமக்கிங்கொழிக்க வொழியாது" என்கிறபடியே ஸகலாத்மாக்களோடும் அவர்ஜநீயமான ஸம்பந்தமுடையவனாகையாலே ஸர்வவத்ஸலனென்று தோற்றுகைக்காக. (அன்றும்) நிக்ரஹத்தைப் பண்ணாநிற்கும். அன்றுதல் - சீறுதல்.

(தன்னாரியன்பாலன்பொழியில்) தன்னாசார்யன்பக்கல் ப்ரேமமற்றால். அதாவது - கீழ்ச்சொன்னபடியே இறையன்றென்றும் பரனன்றென்றும் நினைத்துத் தானவனைவிடும்படி தத்விஷயப்ரேமம் குலையிலென்கை.

(நின்ற புனல்பிரிந்த பங்கயத்தை) உத்பத்தியேதுடங்கித் தனக்குதா(ர)ரகமாகப் பற்றிநின்ற ஜலத்தைவிட்டகன்ற தாமரையை. (பொங்குசுடர் வெய்யோன்) கிளர்ந்த தேஜஸ்ஸையுடையனாய், உஷ்ணகிரணனானவாதித்யன். அதாவது-(உ) "செங்கமலமந்தரஞ்சேர் வெங்கதிரோர்க் கல்லாலலராவால்" என்கிறபடியே நீரைப்பிரியாமல் நிற்குங்காலத்தில் என்றுமொக்கத் தன்னுடைய கிரணங்களாலே அதுக்குவிகாஸத்தைச் செய்து கொண்டு போருமவனென்கை.

(அனலுமிழ்ந்து தானுலர்த்தியற்று) நெருப்பையுமிழ்ந்து தான் அத்தை யுலர்த்திவிடுமாபோலேயென்கை. இத்தால் நீரைப்பிரியாமல் நிற்குங்காலத்தில் தாமரையை அலர்த்தக் கடவ வாதித்யன்றானே நீரைப் பிரிந்தகாலத்தில் நெருப்பையுமிழ்ந்து அத்தையுலர்த்திவிடுமாபோலே. ஆசார்யஸம்பந்தம் குலையாமல் நின்றகாலத்திலே என்றுமொக்க அநுக்ரஹஶீலனாய் இவன்ஸ்வரூபத்தை விகஸிப்பிக்கும் ஈஶ்வரன்றானே ஆசார்யஸம்பந்தம் குலைந்தால் நிக்ரஹஶீலனாய் இவன் ஸ்வரூபத்தை ஸங்கோசிப்பித்து விடுமென்றதாயிற்று.

"నారాయణో౽పి వికృతింయాతిగురోః ప్రచ్యుతస్యదుర్బుద్ధేః । కమలం జలాదపేతం శోషయతిరవిర్నతోషయతి- நாராயணோபி விக்ருதிம்யாதி

(க) திருப்பாவை-உக. (உ) பெரு-தி-மொ-ஙு-சு.

மூ.—வில்லார்மணிகொழிக்கும் வேங்கடப்பொற்குன்றமுதல்
செல்லார்பொழில் சூழ்த்திருப்பதிக—ளெல்லாம்
மருளாமிருளோட மத்தகத்துத்தன்தாள்
அருளாலே வைத்தவவர். (௩௬)

குரோஃ ப்ரச்யுதஸ்யதுர்ப்புத்தேஃ। கமலம்ஜலாதபேதம் ஶோஷயதிரவிர்நதோஷயதி" என்னக்கடவதிறே (௩௫)

அவ;—முப்பத்தாறும்பாட்டு. ஸச்சிஷ்யனுய் ஸதாசார்ய ப்ரேமமுடையவனு யிருக்குமவனுக்கு ஸகலதிவ்யதேஶங்களும் தன்னுசார்யனே யென்கிறுர்.

வ்யா;—(வில்லார்மணிகொழிக்கும்) தேஜஸ்ஸு மிக்கிருந்துள்ள ரத்நங்களைத் திருவருவிகளானவை கொழித்தெறடாநிற்கும். வில்லாவது - தேஜஸ்ஸு. ஆர்தல் - மிகுதி. * பன்மணி நீரோடுபொருதுருளும் கானமுடைய வேங்கடமிறே.

(வேங்கடப்பொற் குன்றமுதல்) திருவேங்கடமென்கிற திருநாமத்தையுடைத்தாய் ஸர்வைஸ்ஸ்ப்ருஹணீயமான திருமலை தொடக்கமாயுள்ள. (செல்லார்பொழில்சூழ்) உயரத்தினதிஶயத்தாலே மேகங்கள்வந்து படியும்படியிருக்கும் பொழில்களாலே சூழப்பட்டிருக்கிற. செல் - மேகம். ஆர்தல் - படிதல். (திருப்பதிகளெல்லாம்) உகந்தருளின நிலங்களான திவ்யதேசங்களெல்லாம்.

(மருளாமிருளோட) அஜ்ஞாநாந்தகாரமானது அதிஶீக்ரமாகப் போம்படியாக. (மத்தகத்துத் தன்தாளருளாலே வைத்தவவர்) ஶிஷ்யன் ஶிரஸ்ஸிலே தம்முடையதிருவடிகளை ஹேத்வந்தரங்களாலன்றிக்கே க்ருபையாலேவைத்தருளின ஆசார்யரானவவரென்கை. அர்ச்சாஸ்தலங்களைச் சொன்னவிது -பரவ்யூஹாதிஸ்தலங்களுக் கெல்லாமுபலக்ஷணம். பரவ்யூஹாதிபஞ்சஸ்தலமும் ஆசார்யனே யென்றிருக்கக் கடவனென்னுமத்தை (க) "பாட்டுக்கேட்குமிடம்" என்றுதொடங்கிப் பிள்ளைலோகாசார்யரருளிச்செய்தாரிறே.

(க) ஶ்ரீவசநபூஷணம்.

மூ;—பொருளுமுயிரு முடம்பும் புகலும்
தெருளும் குணமும் செயலும்—அருள்புரிந்த
தன்னாரியன் பொருட்டாச்சங்கற்பம்செய்பவர்நெஞ்சு
எந்நாளும் மாலுக்கிடம். (௩௭)

---

"యేనైవగురుణాయస్య న్యాసవిద్యా ప్రదీయతే। తస్యవైకుణ్ఠదుగ్ధాబ్ధిద్వారకాస్సర్వ ఏవసః - யேநைவகுருணாயஸ்ய ந்யாஸவித்யாப்ரதீயதே । தஸ்யவைகுண்டதுக்தாப்தித்வாரகாஸ் ஸர்வ ஏவஸஃ" என்கிறவசநம் இதுக்கு ஸம்வாதமாக வநுஸந்தேயம். (௩௬)

அவ;—முப்பத்தேழாம்பாட்டு. அர்த்தப்ராணஶரீராதிகளெல்லாம் ஆசார்யஶேஷமாக வநுஸந்தித்திருக்குமவர்கள் நெஞ்சு, ஸர்வேஶ்வரனுக்கு ஸர்வகாலமும் வாஸஸ்தாநமென்கிறார்.

வ்யா ;—(பொருளும்) தனக்குண்டானவர்த்தமும். (உயிரும்) தன்னுடைய ப்ராணனும். (உடம்பும்) தன்னுடையஶரீரமும். (புகலும்) தன்னுடையக்ருஹமும். (தெருளும்) தன்னுடைய ஜ்ஞாநமும் (குணமும்) தன்னுடையஶமாதிகுணங்களும் (செயலும்) தன்னுடைய ப்ரவ்ருத்திகளும். இவையெல்லாவற்றையும்.

(அருள்புரிந்ததன்னாரியன் பொருட்டா) ஒருஹேதுவின்றிக்கே யிருக்கச்செய்தே க்ருபையைப்பண்ணித் தன்னையங்கீகரித்த தன்னுடைய வாசார்யன் பொருட்டாக. தச்சேஷமாகவென்றபடி. (சங்கற்பம் செய்பவர் நெஞ்சு) ஸங்கல்பம் பண்ணுமவர்கள் நெஞ்சு. அப்படி ஸங்கல்பித்திருக்குமவர்களுடைய ஹ்ருதயமென்றபடி.

(எந்நாளுமாலுக்கிடம்) எல்லாக்காலமும்ஸர்வேஶ்வரனுக்குவாஸஸ்தாநம். இவன்ஸகலமும் தன்னாசார்யனுக்குச் சேஷமென்றுஸங்கல்பித்து (௧)"தேவுமற்றறியேன்" என்றிருக்க, அவன் இவனுடையஹ்ருதயத்தைத் தானாதரித்துக் கொண்டிருக்குமாயிற்று.

---

(௧) கண்ணி-௨.

மூ.—தேனார்கமலத் திருமாமகள் கொழுநன்
தானேகுருவாகித் தன்னருளால்— மானிடர்க்காய்
இந்நிலத்தே தோன்றுதலால் யார்க்குமவன் தாளிணையை
உன்னுவதே சாலவுறும். (௩அ)

---

"శరీరంవసువిజ్ఞానం వాసఃకర్మగుణానసూన్ ।గుర్వర్థంధారయేద్యస్తు సశిష్యోనేతరస్స్మృతః ॥ గుర్వర్థంస్వాత్మనః పుంసఃకృతజ్ఞస్యమహాత్మనః। సుప్రసన్నస్సదావిష్ణుర్హృదితస్యవిరాజతే- ஶரீரம்வஸுவிஜ்ஞாநம்வாஸஃ கர்மகுணாநஸூந்। குர்வர்த்தம்தாரயேத்யஸ்துஸஶிஷ்யோநேதரஸ்ஸ்ம்ருதஃ" "குர்வர்த்தம்ஸ்வாத்மநஃ பும்ஸஃக்ருதஜ்ஞஸ்யமஹாத்மநஃ। ஸுப்ரஸந்நஸ் ஸதாவிஷ்ணுர் ஹ்ருதிதஸ்ய விராஜதே'' என்று ஜயஸம்ஹிதையில் ஶ்ரீவராஹநாயனாருளிச்செய்த வசநம் இதுக்கு ஸம்வாதமாக வநுஸந்தேயம். (௩எ)

அவ;—முப்பத்தெட்டாம்பாட்டு. ஆசார்யவைபவத்தை பஹுவிதமாக வருளிச்செய்தார் கீழ். அதெல்லாம் தகுமென்கைக்காக ஆசார்யன் பகவதவதாரமென்னுமத்தை ப்ரகாஶிப்பித்து,இப்படியிருக்கையாலே எல்லார்க்குமவன் திருவடிகளை அநுஸந்திக்குமதே மிக்வுமநுரூபமென்று இவ்வர்த்தத்தை நிகமிக்கிறார்.

வ்யா;—(தேனார்கமலத் திருமாமகள் கொழுநன்) தன்னோட்டைஸ்பர்ஶத்தாலே எப்போதுமொக்க செவ்விபெற்றிருக்கையாலே மதுஸம்ருத்தி மாறுததாமரைப்பூவை வாஸஸ்தாநமாகவுடையளாய் ஶ்ரீயென்று திருநாமமாயிருக்கும் பெரிய பிராட்டியார்க்கு வல்லபனானவன். (தானே) ஶ்ரியஃபதியாகையாலே ஸர்வாதிகனான தானே, (குருவாகி) திவ்யரூபத்தை மறைத்து மநுஷ்யரூபங்கொண்டு ஆசார்யனாய்.

இதுக்கடியென்னென்னில், (தன்னருளால்) தன்னுடைய க்ருபையாலே, ஹேத்வந்தரமில்லையென்கை. இப்படி அவதரிக்கிறது தானாருக்காகவென்னில்; (மானிடர்க்காய்) ஶாஸ்த்ரவஶ்யமான மநுஷ்யஜந்மத்திலேபிறந்து உபதேசாதிகளாலே திருத்தினால் திருந்தி உஜ்ஜீவிக்கைக்கு யோக்யரான வாத்மாக்களுக்காக,

மூ;—அலகைமுலை சுவைத்தார்களன்ப்ரடிக்கன்பர்
திலதமெனத் திரிவார்தம்மை—உலகர்பழி
தூற்றில் துதியாகும் தூற்றாதவரிவரைப்
போற்றிலது புன்மையேயாம். (௩௯)

---

(இங்கிலத்தேதோன்றுதலால்) ப்ரஜை விழுந்தகிணற்றிலே யொக்கக்குதிக்கும் த்தாயைப்போலே இவர்கள் ஸம்ஸாரார்ணவமக்நராய்க்கிடக்கிற இந்தப்பூமியிலே அவதரிக்கையால். (யார்க்கும்) வர்ணபேதத்தாலும், ஆஶ்ரமபேதத்தாலும் ஸ்த்ரீபுருஷபேதத்தாலும் பலவகைப்பட்டிருக்கிற ஆத்மாக்களெல்லார்க்கும்.

(அவன் தாளிணையை யுன்னுவதே) ஶேஷியாய் ஶரண்யனாய், ப்ராப்யனாயிருக்கிறவனுடைய திருவடிகளிரண்டையுமுத்தேஶ்யமாகவும்ப்ராப்யமாகவும்ப்ராபகமாகவும்அநுஸந்தித்திருக்குமதே. அவதா(தா)ரணத்தாலேஇதொழியமற்றொன்றும்வேண்டாவென்கை. (சாலவுறும்) மிகவுமுறும். உறுகை-சேருகை. இத்தால் மிகவும்ஸ்வரூபத்துக்கு அநுரூபமென்கை.

"సాక్షాన్నారాయణో దేవః కృత్వామర్త్యమయీం తనుమ్ । మగ్నానుద్ధరతే లోకాన్ కారుణ్యాచ్ఛాస్త్రపాణినా । తస్మాద్భక్తిర్గురౌ కార్యా సంసారభయభీరుణా - ஸாக்ஷாந்நாராயணோ தேவ: க்ருத்வாமர்த்யமயீம்தநும் । மக்நாநுத்தரதே லோகாங்காருண்யாச் சாஸ்த்ரபாணிநா தஸ்மாத் பக்திர்குரௌகார்யாஸம்ஸாரபயபீருணா" என்றுஜயாக்யஸம் ஹிதையிலே ஶாண்டில்யன்சொன்னவசநம் இப்பாட்டிற் சொன்னவர்த்தத்துக்கு ஸம்வாதமாகவநுஸந்தேயம். (௩௮)

அவ;-முப்பத்தொன்பதாம் பாட்டு;—இவ்வாசார்யவைபவமறிந்துஇவ்விஷயத்திலற்றுத்தீர்ந்து நிற்பாரேற்றமறிவார்விஶேஷஜ்ஞரன்றோ? அதறியாதலௌகிகர் "பகவத்விஷயத்திலுங்காட்டில்இவ்விஷயமேஉத்தேஶ்யமென்றுபற்றித்திரியாநின்றார்" என்றுபழிதூற்றுவர்களாகிலோவென்ன;இதுபகவத்விஷயத்திலூன்றிநிற்பாரெல்லார்க்கு மொக்குமிறேயென்று பார்த்து தத்வி

ஷயத்திலுங்காட்டில்ததீயவிஷயத்திலான்றி நிற்பாரேற்றத்தைச் சொல்லி, இப்படி நிற்குமதிகாரிகளுக்கு லௌகிகர்பண்ணும் நிந்தையும் ஸ்துதிநிந்தையுமாய் விடுமென்கிறார்.

வ்யா;—(அலகைமுலை சுவைத்தாற்கு) அலகையென்று- பேய்க்குப்பேர்.(க)“பெற்றதாய்போல்வந்த பேய்ச்சி” என்கிறபடியே தன்வடிவைமறைத்துத் தாய்வடிவைக்கொண்டு வந்த பேய்ச்சியுடைய முலையை ப்ராணஸஹிதமாகப்பஸையறச்சுவைத்தவனுக்கு.

(அன்பரடிக்கன்பர்)(உ) “స్తన్యంతద్విషసంమిశ్రంరస్య మాసీజ్జగద్గురోః| ஸ்தந்யம்தத்விஷஸம்மிஶ்ரம்ரஸ்யமாஸீஜ்ஜகத்குரோః” என்றும்(ங)“ விடப்பால முதாவமுதுசெய்திட்டமாயன் “என்றும் சொல்லுகிறபடியே அவள்கையிலகப்படாமல் அந்தவிஷப்பாலே அமுதாக்கி அமுதுசெய்து ஜகத்துக்கு வேர்பற்றான தன்னை நோக்கித்தந்தவனென்று அந்தகுணத்துக்குத்தோற்று அவன் பக்கல் ப்ரேமயுக்தராயிருக்குமவர்கள் திருவடிகளில் ப்ரேமயுக்தராயிருக்குமவர்கள்.

(திலதமெனத்திரிவார்தம்மை) இப்படி பாகவத விஷய ப்ரேமயுக்தராய் லோகத்துக்கு இவர்களொருதிலகமென்று விஶேஷஜ்ஞர்ஶ்லாகிக்கும்படி திரியும் மஹாத்மாக்களை. அன்றிக்கே, அன்பரடிக்கன்பர்க்கு-இவர்கள்திலகபூதரென்று அறிவுடையார் கொண்டாடும்படித் திரியும் பெரியோர்களென்னவுமாம்.

(உலகர்பழி தூற்றில் துதியாகும்) இப்படியிருக்கும் அதிகாரிகளை வர்ணாஶ்ரமாதி விஶேஷங்களொன்றும் பாராமல் பாகவதரென்கிற மாத்ரமே பற்றாசாகக் கொண்டு பகவத்விஷயந் தன்னிலுங் காட்டில் இவர்களே உத்தேஶ்யரென்று நினைத்து அநுவர்த்தித்துத்திரியா நின்றார்களென்று லௌகிகரானவர்கள் பழிதூற்றில்; அவர்கள்குணப்ரகாஶகமாகையாலே ஸ்தோத்ரமாய்விடும்.

(தூற்றாதவரிவரை, ப்போற்றிலதுபுன்மையேயாம்) இப்படிப்பழிதூற்றாதே லௌகிகரானவர்கள் கீழ்ச்சொன்னவந்த

---

(க) தி-மொ-க-ங-க. (உ) ஹரிவம்ஶே. (ங) தி-வாய்-க-ரு-கூ.

மூ;—அல்லிமலர்ப்பாவைக்கன் பரடிக்கன்பர்
சொல்லுமவிடுசுருதியாம்—நல்ல
படியாம் மனுநூற்கவர்சரிதை பார்வை
செடியார் வினைத்தொகைக்குத் தீ. (௪0)

---

அருளாளப் பெருமாளெம் பெருமானார்
திருவடிகளே சரணம்.
அருளாளப் பெருமாளெம்பெருமானா ரருளிச்செய்த
ஜ்ஞாநஸாரம் முற்றிற்று.

---

வதிகாரிகளை, லோகஸங்க்ரஹாதிகளுக்காக மேலெழச்செய்து கொண்டுபோருமாசாரங்களைக்கண்டு அவையடியாக நல்லவர்களென்று புகழில், அது-இவர்களதிகாரத்துக்குச் சேராமையாலே புன்மையேயாய் விடுமென்கை. புன்மை-பொல்லாங்கு, நிந்தையென்றபடி.

"న్యాసవిద్యైకనిష్ఠానాం వైష్ణవానాం మహాత్మనాం । ప్రాకృతాభి స్తుతిర్నిన్దా నిన్దా స్తుతిరితిస్మృతా - ந்யாஸவித்யைக நிஷ்டாநாம்வைஷ்ணவாநாம் மஹாத்மநாம் । ப்ராக்ருதாபிஸ் துதிர்நிந்தாநிந்தாஸ் துதிரிதிஸ்ம்ருதா" என்னக்கடவதிறே. (௩௯)

அவ;—நாற்பதாம்பாட்டு. இப்படியானலும் இவர்களுடைய சொலவும் செயலும் நாட்டார்க்குப் பொருந்தாமையாலே அதுதன்னையிட்டுப் பழிக்கிலோவென்ன, இதுப்ரதமபர்வநிஷ்டர்க்கு மொக்குமிறே யென்றுபார்த்து ஸாமாந்யேந பாகவதர்களுடைய உக்திவ்ருத்திகடாக்ஷங்களினுடைய வைபவத்தைச் சொல்லி இப்ரபந்தத்தை நிகமிக்கிருர்.

(அல்லிமலர்ப்பாவைக்கன்பரடிக்கன்பர்)(க)"கோலமலர்ப்பாவைக்கன்பா" என்று இதுவே நிரூபகமாகச்சொல்லி ஸம்போதிக்கும்படித் தாமரைப்பூவையிருப்பிடமாகவுடையபெரியபிராட்டிவிஷயத்தில் ப்ரேமயுக்தனயிருக்கு மீஸ்வரன் திருவடிகளில் ப்ரேமமே நிரூபகமாம்படியிருக்கும் பாகவதர்கள்.

---

(க) தி-வாய்-௧0-௧0-எ

(சொல்லுமவிடுகுருதியாம்) விநோதமாய்ச்சொல்லும் வார்த்தை வேதார்த்தமாயிருக்கையாலே அபௌருஷேயமாய் நித்யநிர்தோஷமாய் ஆப்ததமமாயிருக்கும் வேதத்தோபாதி ப்ரமாணமாய்ப் பரிக்ரஹிக்கலாயிருக்கும்.

(நல்லபடியாம் மநுநூற்கவர்சரிதை) அவர்கள் சரித்ரமானது - தர்மஶாஸ்த்ரங்களில் தலையாய் ஸதாசாரப்ரதிபாதகமாயிருக்கும் மாநவஶாஸ்த்ரத்துக்கு, இத்தைக்கொண்டோ இதுசொல்லிற்றென்னும்படி நன்றானமூலமாயிருக்கும். படியாவது - தன்னைக்கொண்டு தனக்குப்போலியானது செய்யலாம்படி மூலமாயிருக்குமதிறே.

(பார்வை செடியார்வினைத்தொகைக்குத்தீ) அவர்களுடைய கடாக்ஷமானது, தூறுமண்டிக்கிடக்கிற கர்மஸமூஹத்துக்கு அக்நிபோலே நாஶகமாயிருக்குமென்கை அதாவது - இவர்களுடையகடாக்ஷம் - ஸ்வவிஷயமானவர்கள்கர்மத்தை நிஶ்ஶேஷமாகப் போக்குகையாலேஸ்வரூபத்தை உஜ்ஜ்வலமாக்குமென்றதாயிற்று.

"వేదశాస్త్రరథారూఢాః జ్ఞానఖడ్గధరాద్విజాః। క్రీడార్థమపియద్బ్రూయుస్సధర్మః పరమోమతః - வேதஶாஸ்த்ரரதாரூடாஃ ஜ்ஞாநகட்கதராத்விஜாஃ। க்ரீடார்த்தமபியத்ப்ரூயு ஸ்ஸதர்மஃ பரமோமதஃ" என்றும் "వాసుదేవంప్రపన్నానాం యాన్యేవచరితానివై। తాన్యేవధర్మశాస్త్రాణీత్యేవం వేదవిదోవిదుః - வாஸுதேவம் ப்ரபந்நாநாம் யாந்யேவசரிதாநிவை। தாந்யேவதர்மஶாஸ்த்ராணீத்யேவம் வேதவிதோவிதுஃ" "నశుద్ధ్యతితథాజన్తుస్తీర్థవారిశతైరపి। విలయావయథాభూపవైష్ణవానాం హివీక్షణైః - நஶுத்த்யதிததாஜந்து ஸ்தீர்த்தவாரிஶதைரபி। விலயைவயதாபூப வைஷ்ணவாநாம்ஹி வீக்ஷணைஃ" என்னும் இதிஹாஸபுராணங்களில் சொல்லப்பட்ட வசநங்கள் இப்பாட்டிற் சொன்னவர்த்தத்துக்கு ப்ரமாணமாகவநுஸந்தேயங்கள். (௪௦)

பெரியஜீயர் திருவடிகளேசரணம்.

பெரிய ஜீயரருளிச்செய்த

**ஜ்ஞாநஸாரவ்யாக்யாநம் முற்றிற்று.**

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

அருளாளப்பெருமா ளெம்பெருமானாரருளிச்செய்த

# ப்ரமேயஸாரம்.

## இதற்கு விசதவாக்சிகாமணியான

ஸ்ரீ மணவாளமாமுனிகளருளிச்செய்த வ்யாக்யாநம்.

## தனியன்.

*நீங்காமலென்றும் நினைத்துத் தொழுமின்கள் நீணிலத்தீர்*
*பாங்காகநல்ல பிரமேயசாரம் பரிந்தளிக்கும்*
*பூங்காவளம் பொழில்சூழ் புடைவாழும் புதுப்புளிமன்*
*ஆங்காரமற்ற வருளாள மாமுனியம்புதமே.*

## அவதாரிகை.

ஸகலஶாஸ்த்ர நிபுணராய் தத்வஹிதபுருஷார்த்த யாதாத்ம்யவிதக்ரேஸரராய், ஸமஸ்தஸம்ஸாரிசேதநோஜ்ஜீவந காமராய், தம்மை அடியிலே அங்கீகரித்தருளின எம்பெருமானார் திருவடிகளிலே சிரகாலம் ஸேவைபண்ணி தத்வஹித புருஷார்த்த விசேஷங்களெல்லாம் சரமபர்வபர்யந்தமாக அவரருளிச்செய்யக்கேட்டு தந்நிஷ்டராயிருக்கும் அருளாளப்பெருமாளெம்பெருமானார் தம்முடைய பரமக்ருபையாலே ஸம்ஸாரிசேதநோஜ்ஜீவநார்த்தமாக ஸகலஶாஸ்த்ரங்களிலும். ஒரொரு ப்ரதேஶத்திலே தாத்பர்யரூபேண ப்ரதிபாதிக்கப்படுகையாலே ஸகலர்க்கும் அறியவரிதாம்படி யிருக்கிற அர்த்தவிசேஷங்களை ஸங்க்ரஹித்து ஜ்ஞாநஸாரமாகிற ப்ரபந்தமுகேந வருளிச்செய்து தலைக்கட்டினவநந்தரம் ஸகலஸாஸ்த்ர ஸங்க்ரஹமாகையாலே ப்ரமாணஸாரமான திருமந்த்ரத்தால் ப்ரதிபாதிக்கப்படுகிற ப்ரமேயங்களில் ஸாராம்ஶத்தை ஸங்க்ரஹித்து இப்ப்ரபந்தமுகேந வருளிச்செய்கிறார். ஆகையிறே இப்ப்ரபந்தத்துக்கு ப்ரமேயஸாரமென்று திருநாமமாயிற்று.

மூ.—அவ்வானவர்க்கு மவ்வானவரெல்லாம்
உவ்வானவரடிமை யென்றுரைத்தார்—இவ்வாறு
கேட்டிருப்பார்க் காளென்று கண்டிருப்பார் மீட்சியில்லா
நாட்டிருப்பாரென்றிருப்பன்நான். (க)

---

அவ;—முதற்பாட்டு. இதில் திருமந்த்ரத்துக்கு ஸங்க்ரஹமான ப்ரணவத்தாலே ப்ரதிபாதிக்கப்படுகிற ப்ரமேயத்தில் ஸாராம்ஶத்தை அருளிச்செய்கிறார்.

வ்யா;—(அவ்வானவர்க்கு) அகாரவாச்யனானவருக்கு. (க) "అఇతిబ్రహ్మ-அ இதிப்ரஹ்ம" என்று அகாரத்தை ப்ரஹ்மஶப்தவாச்யனான ஸர்வேஶ்வரனோடே ஸமாநாதி(ஃ)கரித்துச்சொல்லிற்றிறே ஶ்ருதி. அந்த ஸாமாநாதிகரண்யந்தான் வாச்யவாசகஸம்பந்தநிபந்தநமிறே. (உ) "సమస్తశబ్దమూలత్వాదకారస్య స్వభావతః। సమస్తవాచ్యమూలత్వాద్బ్రహ్మణోఽపి స్వభావతః। వాచ్యవాచకసమ్బన్ధస్తయోరర్థాత్ప్రతీయతే- ஸமஸ்தஶப்தமூலத்வாதகாரஸ்யஸ்வபாவதঃ। ஸமஸ்தவாச்யமூலத்வாத்ப்ரஹ்மணோபிஸ்வபாவதঃ।வாச்யவாசகஸம்பந்தஸ்தயோரர்த்தாத் ப்ரதீயதே" என்னக்கடவதிறே.

(மவ்வானவரெல்லாம்) மவ்வானவரென்று மகாரவாச்யரான ஜீவாத்மாக்களைச் சொல்லுகிறது. (ந) "మకారో జీవవాచకః- மகாரோஜீவவாசகঃ" என்னக்கடவதிறே. இதுதான் ஏகவசநமாயிருந்ததேயாகிலும் ஜாத்யேகவசநமாய்க்கொண்டு ஸமஷ்டிவாசகமாயிருக்கையாலே த்ரிவிதாத்மவர்க்கத்தையும் சொல்லக்கடவதாயிருக்கும். ஆகையாலே மவ்வானவரெல்லாமென்கிறார்.

(உவ்வானவர்) உகாரவாச்யரானவர். இத்தால் - ஆசார்யனைச் சொல்லுகிறது. எங்ஙனேயென்னில், உகாரம் லக்ஷ்மீவாசகமாக ஶாஸ்த்ர ஸித்தமாகையாலும், அவள் தனக்கு (ஃ) கடகத்வம் ஸ்வரூபமாகையாலும், ஆசார்யனுக்கும் கடகத்வமே ஸ்வரூபமாகையாலும் தத்ஸாதர்ம்யமுண்டாகையாலே இவனுடைய கடகத்வத்துக்கு மூலம் அவள் திருவடிகளின் ஸம்பந்த விஶேஷமாகையாலே தத்ப்ரயுக்தமான ஐக்யமுண்டிறே.

---

(க) ருக்வேதம். (உ) வாமந புராணம். (ந)

ஆகையால் தத்ஸாதர்ம்யத்தாலும், தத்ஸம்பந்தப்ரயுக்த த்தைக்யத்தாலும் ஆசார்யனை உகாரவாச்யனென்கிறது.

எம்பெருமானார் ஒருநாள் உகப்பிலே முதலியாண்டானுக்கு அருளிச்செய்ததாக அவருடைய குமாரரான கந்தாடையாண்டான் பட்டருக்கு அருளிச்செய்தவர்த்தவிஶேஷங்களெல்லாம் ப்ரதிபாதிக்கிற ப்ரணவஸங்க்ரஹமாகிற ப்ரபந்தத்திலே ஆசார்யனை உகாரவாச்யனாகச் சொல்லாநின்றதிறே. இவரும் எம்பெருமானார் திருவடிகளிலே ஸேவித்தவராகையாலே அவரருளிச்செய்யக்கேட்டிருக்குமது கொண்டிறே இப்ப்ரபந்தத்திலே இப்படியருளிச்செய்தது.

(அடிமையென்றுரைத்தார்) சேஷமென்றருளிச்செய்தார்; ஸம்பந்தஜ்ஞாநம் பிறப்பிக்கை (ஶு) கடகக்ருத்யமிறே. ஈஶ்வரன்சேஷியாய் இத்தலை சேஷமாயிருந்தாலும் இஸ்ஸம்பந்தத்தை ஆசார்யன் உபதேஶத்தாலே உணர்த்தினபோதிறே இவனுக்கு ப்ரகாசிப்பது. ஆகையாலே; அவ்வானவர்க்கு மவ்வானவரெல்லாம் அடிமையென்று உவ்வானவர் உரைத்தாரென்கிறார்.

(இவ்வாறுகேட்டிருப்பார்க்கு)இதுதான் உபதேஶகம்யமாகையாலே இப்ப்ரகாரத்தை உபதேஶமுகத்தாலே கேட்டு, தந்நிஷ்டராயிருப்பார்க்கென்கிறார்.

(ஆளென்று கண்டிருப்பார்) அதாவது-அப்படியிருப்பார்க்குஶேஷமென்று தங்களை தர்ஶித்திருக்குமவர்களென்கை. கீழ்ச்சொன்ன பகவச்சேஷத்வம் தத்காஷ்டையான பாகவதஶேஷத்வ பர்யந்தமாயிருக்கையாலேயிறே இவரிப்படியருளிச்செய்தது, திருமந்த்ரத்தில்பதத்ரயத்தாலும்ப்ரதிபாதிக்கப்படுகிற அநந்யார்ஹஶேஷத்வ அநந்யஶரணத்வ அநந்யபோக ([illegible]) த்வங்களாகிற ஆகாரத்ரயமும் ததீயாந்வய பர்யந்தமாயிறேயிருப்பது, இதுதான் மூன்றுபதத்திலும் ஆர்த்தமாகவருமித்தனையிறே, ஆகையாலே இப்பதத்திலார்த்தமாக ப்ரதிபாதிக்கப்படுகிறவித்தை அருளிச்செய்தாராயிற்று. ஆக இப்படித்தங்களைத்ததீயஶேஷத்வபர்யந்தமாக தர்ஶித்திருக்குமவர்கள்.

மூ;—குலமொன்றுயிர் பலதங்குற்றத்தாலிட்ட
கலமொன்று காரியமும்வேறும்—பலமொன்று
காணமைகாணும் கருத்தார் திருத்தாள்கள்
பேணமை காணும் பிழை. (உ)

(மீட்சியில்லா நாட்டிருப்பாரென் றிருப்பன்நான்) புநராவ்ருத்தியில்லாத திருநாட்டிலேபோய் அடியார்கள் குழாங்களுடன் கூடியிருக்குமவர்களென்று ப்ரதிபத்திபண்ணி யிருப்பன் நான். நானென்கையாலே ஸ்வப்ரதிபத்திவிஶேஷத்தையருளிச்செய்கிறார்.

எம்பெருமானார் திருவடிகளிலே ஸேவித்து ஸர்வஜ்ஞராய் பரமாப்தராயிருக்கையாலே தாமறுதியிட்டதே அர்த்தமென்று லோகம் பரிக்ரஹிக்கும்படியான மதிப்பராகையாலே யிறே "என்றிருப்பன் நான்" என்றருளிச்செய்தது. (க)

அவ;—இரண்டாம் பாட்டு. மகாரவாச்யரில் பத்த (ப³த்³த⁴) சேதநரானவர்களுக்கு ஸம்ஸாரம் ஒழுக்கறுமல் செல்லுகைக்கடி ஸதா (ஸ)சார்ய ஸமாஶ்ரயணமில்லாமை யென்கிறார்.

வ்யா;-(குலமொன்று)நிருபாதிகமாய் நித்யமாயிருக்கும் குலமொன்று. அதாவது-கீழ்ச்சொன்ன ஶேஷத்வம்; தொண்டக்குலமிறே. (உயிர்பல) ஆத்மாக்களநேகர்-அதாவது-அந்தஶேஷத்வாஶ்ரயமான வாத்மாக்கள் அஸங்க்யாதரென்கை. (தங்குற்றத்தாலிட்டகல மொன்று) அதாவது-தாங்கள்பண்ணின புண்யபாபரூபகர்மமடியாகத்தங்களை ஈஶ்வரனிட்டுவைத்தஶரீரமாகிற கலமொன்றென்கை. தங்குற்றத்தாலிட்டகலமொன்றென்கையாலே-ஈஶ்வரன் இவ்வாத்மாக்களை ஶரீரத்திலிடுவது அவ்வவருடையகர்மங்களை யாராய்ந்து அதுக்கீடாக வென்னுமிடம் சொல்லுகிறது. கலமொன்றென்றது-தேவாதிஜாதி பேதத்தாலும் தத்தவாந்தரபேதத்தாலும் அநேகமாயிருந்ததேயாகிலும் எல்லாம் ப்ருக்ருதிபரிணாம ரூபமென்னுமதில் பேதமில்லாமையாலே.

(காரியமும் வேறும்) அந்ததேஹபரிக்ரஹத்தால் கொள்ளும் கார்யமும்(வு)பிந்நமாயிருக்கும். காரியமாவதுதான்கர்மபலாநுபவமிறே. அது - வேறுகையாவது-புண்யபலாநுபவமும்,

மூ;—பலங்கொண்டு மீளாத பாவமுளதாகில்
குலங்கொண்டு காரியமென்கூறீர்—தலங்கொண்ட
தாளிணையானன்றே தனையொழிந்த யாவரையும்
ஆளுடையானன்றே யவன். (௩)

---

பாபபலாநுபவமும், உபயபலாநுபவமாய்க்கொண்டு வேறுபட்டிருக்கை. காரியமுமென்றது-குலமொன்றாயிருக்க உயிர்பலவாறுப்போலே, குற்றத்தாலிட்ட கலமொன்றாயிருக்க தத்கார்யமானபலாநுபவமும் பலவகைப்பட்டிருக்குமென்று நினைத்து, ஶேஷத்வமேகுலமானவாத்மாக்களுக்கு புண்யபாபரூபகர்மஸம்பந்தமும், அதீடியானதேஹபரிக்ரஹமும், அதின்கார்யமான ஸுகதுஃக்காநுபவமும், இப்படி ஒழுக்கருமல் நடப்பானேனென்னுமாகாங்க்ஷயிலேயருளிச் செய்கிறார்மேல்.

(பலமொன்றென்றுதுடங்கி) அதாவது-ஒராத்மாவை அங்கீகரிக்குமளவில் க்ரியா (ஞூ) திலாப பூஜைகளாகிறபலமொன்றில் கண்வையாதே இவ்வாத்மாவினுடைய உஜ்ஜீவநமே ப்ரயோஜநமாகவிஶேஷகடாக்ஷத்தைப் பண்ணும் நினைவையுடையனானவாசார்யனுடைய திருவடிகளை யாஶ்ரயியாமை காணுங்கோள் ஸம்ஸாரம் அவிச்சி (ஃ) ந்நமாய்ச்செல்லுகைக்கடியான குற்றமென்கை. பலமொன்று காணாமைகாணும் கருத்தாரென்கையாலே-ஆசார்யவைபவம் சொல்லுகிறது. திருத்தான்கள்பேணாமை யென்றவிடத்தில், பேணுகையாவது-விரும்புகையாய், பேணாமையாவது-விரும்பாமையாகையாலே ஆஶ்ரயியாமையைச் சொல்லுகிறது. பிழை-குற்றம். (௨)

அவ;—மூன்றாம்பாட்டு;-ப்ரயோஜநாந்தரப்ராவண்யம் நடக்குமாகில் ஶேஷத்வமாகிறகுலங்கொண்டு என்னப்ரயோஜநம்; திருவுலகளந்தருளின ஸர்வேஶ்வரன் தத்காலத்திலே ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்தாத்மாக்களையும் ஸ்வஶேஷமாகவுடையவனன்றோவென்கிறார்.

வ்யா;—(பலங்கொண்டு மீளாதபாவமுளதாகில்) ஐஶ்வர்யாதிகளிலேதேனுமொருபலத்தைக் கைக்கொண்டு, வேண்டாவெ

ன்றாலும் அதில்நின்றுமீளாமல் பற்றிநிற்கும்படியானபாபமுண்டாயிருக்குமாகில். அன்றிக்கே, பாவமென்றது-பா(வ)வமென்றபடியாய், பலத்தைக்கொண்டு இதில் நின்றும் மீளாமல்பற்றிநிற்கும்படியான நினைவுண்டாயிருக்குமாகிலென்னவுமாம்,(குலங்கொண்டு காரியமென்கூறீர்) ப்ரயோஜநாந்தரருசி கிடக்குமாகில், ஈஶ்வரன் இவ்வாத்மாவை ஸம்ஸாரத்தில் துவக்கறுத்துத் தன்திருவடிகளில் வாங்காமையாலே ஶேஷத்வமாகிற குலத்தால் என்னப்ரயோஜநமுண்டு சொல்லுங்கோளென்கை. அதுவென்? ஶேஷத்வஜ்ஞாநமுண்டானால் இவன் நம்முடையவனென்றபிமாநித்து ஈஶ்வரன் காரியம் செய்கைக்குடலாகாதோவென்கிற ஶங்கையிலே யருளிச்செய்கிறார்மேல்.

(தலமென்று தொடங்கி) (தலங்கொண்டதாளிணையான்) பூமியும் உபரிதநலோகமுமான ஸகலஸ்தலத்தையும் அளந்து கொண்டதிருவடிகளிரண்டையுமுடையவன். (அன்றே) அப்படியளந்துகொண்டவக் காலத்தில்.

(தனையொழிந்த யாவரையும் ஆளுடையானன்றேயவன்) தன்னையொழிந்த ஸகலாத்மாக்களையும்தனக் கடிமையாகவுடையவனன்றோவவனென்கை.இத்தால்திருவுலகளந்தருளினபோது எல்லார்தலைகளிலும் திருவடிகளைவைத்து அப்போதே எல்லாரையும் தனக்குச் சேஷமாக்கிக்கொண்டானாக நினைத்துஸந்துஷ்டனாய் நின்றவன், இத்தைவரையாக இவ்வாத்மாக்களைஸம்ஸாரத்தில் நின்றும் எடாதிருக்கிறது இவர்களுடைய அந்யபரதையறுந்தனையும் பார்த்திறே. ஆகையால் இவன் றனக்குச்சேஷத்வமுண்டானாலும் ப்ரயோஜநாந்தரபரதையற்றாலொழிய இவனை ஸம்ஸாரத்தில் நின்றும் அவனெடாமையாலே ப்ரயோஜநாந்தரருசி கிடக்கவுண்டான ஶேஷத்வஜ்ஞாநத்தாலென்ன ப்ரயோஜந முண்டென்றதாயிற்று.

ஆக, மூன்றுபாட்டாலே ப்ரணவார்த்தத்தை யருளிச்செய்தார். இனிமேல் நாலுபாட்டாலே நமஶ்ஶப்தார்த்ததையருளிச்செய்கிறார். நமஸ்ஸ-ப்தார்த்தம் அநந்யஶரணத்வமிறே; அதுக்கு உபயோகியான அர்த்தவிஶேஷங்களையுபபாதித்தருளுகிறார். (ந)

மூ;—கருமத்தால் ஞானத்தால் காணும் வகையுண்டே
தருமத்தாலன்றி யிறைதாள்கள்—ஒருமத்தால்
முந்நீர்கடைந்தானடைத்தான் முதல்படைத்தான்
அந்நீரமர்ந்தானடி. (௪)

அவ;—நாலாம்பாட்டு. ஶேஷியானவன் திருவடிகளேத்தானே தருகையாலொழிய உபாயந்தரங்களால் காணவிரகுண்டோ வென்கிறார்.

வ்யா ;—(கருமத்தால் ஞானத்தால் காணும்வகையுண்டே). அதாவது-கர்மயோகத்தாலும், ஜ்ஞாநயோகத்தாலும், பக்தியோகத்தாலும் காணும் ப்ரகாரமுண்டோவென்கை. ஞானத்தாலென்கிறவிதிலே பக்தியும் சொல்லுகிறது. "భక్తిశ్చ జ్ఞానవిశేషః-பக்திஶ்சஜ்ஞாநவிஶேஷः" என்கிறபடியே அதுதான் ஜ்ஞாநவிஶேஷமாகையாலே.(க)"కర్మణైవహి సంసిద్ధిమాస్థితా జనకాదయః - கர்மணைவஹிஸம்ஸித்திமாஸ்திதா ஜநகாதயः" என்றும்(உ)"నహి జ్ఞానేన సదృశం పవిత్రమిహ విద్యతే - நஹிஜ்ஞாநேநஸத்ருஶம் பவித்ரமிஹவித்யதே" என்றும் (௩) "మన్మనా భవ మద్భక్తో మద్యాజీ మాం నమస్కురు । మామేవైష్యసి యుక్త్వైవమాత్మానం మత్పరాయణః - மந்மநாபவமத்பக்தோமத்யாஜீ மாம்நமஸ்குரு। மாமேவைஷ்யஸியுக்த்வைவமாத்மாநம் மத்பராயணः"என்றும் கர்மாதிகளில் ஒரொன்றை பகவத்ப்ராப்திஹேதுவாகச் சொல்லாநிற்கும்; இவற்றால் காணும்வகையுண்டோ வென்று இவரருளிச்செய்தது, இவற்றினுடைய ஸ்வரூபத்தையும் பகவத்வைபவத்தையும் தெளியக்கண்டவராகையாலே. இவைபலவ்யாப்தமாய்ப்போருகிறது - ப்ரபத்தி இவற்றுக்கங்கமாய்நின்று கார்யம்செய்து கொடுக்கையாலே யென்று கருத்து.

(தருமத்தாலன்றி யிறைதாள்கள்) அதாவது - ஶேஷியானவன் திருவடிகள் தானேதருகையாகிறவற்றாலொழிய வென்றபடி. இறையென்றுப்ரதம பதத்திற்சொன்ன அகாரவாச்யனை ஶேஷியைச் சொல்லுகிறது. தாள்கள் தருமத்தாலன்றி யென்றது-திருவடிகளே உபாயமென்கிற ப்ரமாணப்ரஸித்தியாலே.

(க) கீதை-௩-௨௦. (உ) கீ- (௩) கீ-௯ ௩௪.

பூர்வவாக்யத்தால் உபாயவரணம் சொல்லுகிறவளவில் "చరణౌ శరణం ప్రపద్యే-சரணௌ ஶரணம் ப்ரபத்யே" என்னாநின்றதிறே. (௧) "ஆறெனக்குநின்பாதமே சரணாகத்தந் தொழிந்தாய்" என்றும், (௨) "கழல்களவையே சரணாகக்கொண்ட" என்றும், (௩) "அடிமேல் சேமங்கொள்தென் குருகூர்ச்சடகோபன்" என்றும் (௪) "சரணேசரண் நமக்கு" என்றும், திருவடிகளே உபாயமென்னுமதை ஒருகால்போலே பலகாலும் ஆழ்வார் அருளிச்செய்தாரிறே.

(ஒருமத்தால் முந்நீர்கடைந்தான்) தூர்வாஸ ஶாபோபஹதராய் வந்துஶரணம் புகுந்த இந்த்ராதிகளுக்காக மந்தரபர்வதமாகிற ஒருமத்தாலே ஒருவராலும் கலக்கவொண்ணாத ஜலஸம்ருத்தியையுடைய கடலைக் கடைந்தவன்.

(அடைத்தான்) (௫) "సీతాముఖకమల సముల్లాస హేతోశ్చ సేతోః-ஸீதாமுககமல ஸமுல்லாஸஹேதோஶ்சஸேதோः" என்கிறபடியேபிரிவாலே தளர்ந்த பிராட்டிமுககமல விகாஸத்துக்காக நீரைக்கண்டவாறே வெருவியோடும் குரங்குகளைக் கொண்டு நீரிலேஅமிழக்கடவ மலைகளாலே (௬) "అప్రమేయో మహోదధిః - அப்ரமேயோமஹோததி:" என்கிறபடியே ஒருவரால் அளவிடவொண்ணாத ஆழத்தையும் அகலத்தையுமுடைத்தான கடலையடைத்தவன்.

(மூநல் படைத்தான்) கரணகளேப்ரவிது(ధు)ரராய், போக(భోగ) மோக்ஷஶூந்யராய்க்கிடந்தஸம்ஸாரிசேதநரை கரணகளேபரப்ராப்தியலே போக(భోగ)மோக்ஷபாகி(భాగి)களாக்குகைக்காக, (௭) "అప ఏవ ససర్జాదౌ-அப ஏவ ஸஸர்ஜாதௌ" என்கிறபடியே ஆதியிலே ஜலதத்வத்தை ஸ்ருஷ்டித்தவன்,

(அந்நீரமர்ந்தான்) ஸ்ருஷ்டரானவிவர்களுடையரக்ஷணார்த்தமாக (௮) "வெள்ளத்தடங்கடலுள் விடநாகணைமேல் மருவி" என்கிறபடியே அந்தஜலத்திலே கண்வளர்ந்தருளினவன்.

(அடி) அவனுடைய திருவடிகளை. இத்தால் ப்ரயோஜநாந்தரபரராய் இன்றாஶ்ரயித்த தேவர்களோடு நித்யாஶ்ரிதையான

(௧) தி-வாய்-௫-௭-௧௦. (௨) தி-வாய்-௫-௮-௧௧. (௩) தி-வாய்-௫-௯-௧௧
(௪) தி-வாய்-௫-௧௦-௧௧. (௫) ஆளவந்தார்முக்தகம். (௬) ரா-யு-௧௬-௩௧.
(௭) மநு-௧-௮. (௮) தி-வாய்-௭-௮-௪.

மூ.—வழியாவதொன்றென்றால் மற்றவையும் முற்றும்
ஒழியாவதொன்றென்றாலோமென்று—இழியாதே
இத்தலையாலேதுமில்லை யென்றிருந்ததுதான்
அத்தலையால் வந்தவருள். (ரு)

பிராட்டியோடு நித்யஸம்ஸாரிகளான சேதநரோடு வாசியற எல்லாரையும் ரக்ஷித்தவனுடைய திருவடிகளையென்கை. "ஒரு மத்தாலென்று துடங்கி அந்நீரமர்ந்தானடி இறைதாள்கள் தருமத்தாலன்றிக் கருமத்தால் ஞானத்தால்காணும் வகையுண்டோ" என்றந்வயம். (ச)

அவ; — அஞ்சாம்பாட்டு. ஸித்தோபாயத்தின்படியைக் கண்டால் உபாயாந்தரங்களை ஸவாஸநமாகவிட்டு, அதுதன்னிலும் தன்னுடைய ஸ்வீகாரத்திலுபாயபுத்தியற்றுத் தன்வெறுமையை யநுஸந்தித்திருக்குமது ஸர்வேஶ்வரனுடைய க்ருபாபலமென்கிறார்,

வ்யா;-(வழியாவதொன்றென்றால்) உபாயமாவதொன்றென்றால். அதாவது - கர்மஜ்ஞாநபக்திப்ரபத்திகளென்று நாலுபாயமாக ஶாஸ்த்ரம் சொல்லிற்றேயாகிலும், கர்மாதியான மூன்றும் கார்யஸித்தியில் ஈஶ்வரன்கை பார்த்திருக்குமவையாகையாலே அவற்றுக்கு ஸாக்ஷாதுபாயத்வமில்லை. ஆனபின்பு ஸாக்ஷாதுபாயமாவது - சதுர்த்தோபாயமொன்றென்றுசொன்னாலென்கை.

(மற்றவையும்முற்றுமொழியா) அதாவது-(க)"ಸರ್ವಧರ್ಮಾನ್ಪರಿತ್ಯಜ್ಯ - ஸர்வதர்மாந்பரித்யஜ்ய" என்கிறபடியே மற்றுமுண்டான உபாயாந்தரங்களெல்லாவற்றையும் ஒன்றொழியாமல் விட்டென்கை. மற்றவையுமென்று-ஸித்தோபாயவ்யதிரிக்தமான ஸகலோபாயங்களைச் சொல்லுகிறது. முற்றுமென்று-அவற்றைவிடும்போது நிஶ்ஶேஷமாக விடவேணுமென்கிறது. ஒழியாவென்றது-ஒழிந்தென்றபடியாய், பரித்யஜித்தென்றபடி.

(அதொன்றென்றால்) அந்தஸித்தோபாயமானது ஏகபதத்தில் சொல்லுகிறபடியே சேதநருடைய ஸ்வீகாரத்தில் உபாயபுத்தியையும் ஸஹியாதபடி அத்விதீயமென்றால். (ஓமென்று)

(க) கீதை-கஅ-சாசு.

மூ;—உள்ளபடியுணரி லொன்று நமக்குண்டென்று
விள்ளவிரகிலதாய் விட்டதே—கொள்ளக்
குறையேதுமில்லார்க்குக் கூறுவதென் சொல்லீர்
இறையேது மில்லாத யாம். (௬)

உடன்பட்டு. (இழியாதே) நம்முடைய ஸ்வீகாரமுண்டானாலன்றோ அதுகார்யகரமாவதென்று இவ்வழியாலே தான் இவ்வுபாயத்துக்குள்ளிழியாதே.

(இத்தலையாலேது மில்லையென்றிருந்தது தான்) இப்பேற்றுக்குடலாகச் சொல்லலாவது இத்தலையா லொன்றுமில்லை யென்று தன் வெறுமையை யநுஸந்தித்திருந்த அவ்விருப்புத்தான். (அத்தலையால் வந்தவருள்) (௧) "அளிவருமருள்" என்கிறபடியே நிர்ஹேதுகமாக அவன் தன்நினைவாலே வந்த க்ருபையினுடைய பலமென்கை. அருளென்றது-அருளின் பலமென்கை. (௫)

அவ;—ஆறும்பாட்டு. ஸ்வரூபயாதாத்ம்ய தர்ஶியாய் இவ்வுபாயத்திலதிகரித்தவன் அநுஸந்தித்திருக்கும் ப்ரகாரத்தை ஸ்வகதமாக வருளிச்செய்கிறார்.

வ்யா;—(உள்ளபடியுணரில்) ஸ்வரூபத்தையுள்ளபடி தர்ஶிக்கில். அதாவது-ஜ்ஞாத்ருத்வகர்த்த்ருத்வாதிகளோடும் ஶேஷத்வத்தோடும் கூடியிருக்கிறயெல்லாந்தவாகாரத்தையிட்டு தர்ஶிக்கையன்றிக்கே, ஸ்வரக்ஷணேஸ்வயத்ந கந்தா(Xஞு) ஸஹமானபாரதந்த்ர்யமே வடிவான வவ்வளவும் செல்லதர்ஶிக்கிலென்கை.

(ஒன்று நமக்குண்டென்று விள்ளவிரகிலதாய் விட்டதே) பேற்றுக்குடலான தொன்று நமக்குண்டென்றுவாய் விடுகைக்குவழியற்று விட்டதேயென்கை. அன்றிக்கே, விள்ளுகையாவது-நீங்குகையாய், அவனபி(ஷி)மாநத்திலே யொதுங்கிக்கிடக்குமதொழியப்பேற்றுக் குடலாக நமக்கொன்றுண்டென்று பிரியநிற்க விரகற்றுவிட்டதே யென்னவுமாம். அதுவென்? நமக்கு ரக்ஷகனானனும், (௨) "ரக்ஷமாம்-ரக்ஷமாம்" என்கிறபடியேயுக்திமாத்ரம் இவனும் சொல்லவேண்டாவோ வென்கிற ஶங்கையிலே யருளிச்செய்கிறார் மேல்.

(௧) தி-வாய்-௧-௩-௨. (௨) பார-ஸபா-௬௬-௪௧.

மூ;—இல்லையிருவர்க்கு மென்றிறையை வென்றிருப்பார்
இல்லையஃ தொருவர்க்கெட்டுமதோ—இல்லை
குறையுடைமைதானென்று கூறினரில்லா
மறையுடையமார்க்கத்தேதாண். (எ)

(கொள்ளக்குறை யேதுமில்லார்க்கு) தான் ரக்ஷிக்குமிடத்தில் நம்பக்கலுள்ள தொன்றையும் கூட்டிக்கொள்ளவேண்டாதபடிநிரபேக்ஷரானவர்க்கு. (இறைமேயதுமில்லாதயாம்.) ஆத்மாவோடு ஆத்மீயங்களோடு வாசியறஸகலமும் அங்குத்தைக்குச் சேஷமாகையாலே ஏகதேசமுமொன்று மில்லாதநாம்.

(கூறுவதென்சொல்லீர்) நம்மைரக்ஷிக்கைக் குடலாக அவரைக்குறித்துச் சொல்லுவதென்? சொல்லுங்கோளென்று ஸங்கிஹிதரைப்பார்த்து அருளிச்செய்கிறார். இத்தால் அவன்பரிபூர்ணனாய் நாம் தரித்ரரானபின்பு உபயஸ்வரூபாநுகுணமாக அவன்றானே ரக்ஷிக்குமித்தனையொழிய நாம்சொல்லவேண்டுவதொன்றுண்டோவென்கை. (ஸ)

அவ ;—ஏழாம்பாட்டு. குறையேதுமில்லார்க்கென்றும், இறையேதுமில்லாதயாமென்றும், அருளிச்செய்த ப்ரஸங்கத்திலே இப்படி இரண்டுதலைக்குமுள்ள வில்லாமையை அநுஸந்தித்து, சேஷியானவனை ஜயித்திருப்பாரில்லை. அது ஒருவர்க்கு ஸித்திக்குமதோவென்கிறார்.

வ்யா;—(இல்லையிருவர்க்குமென்று) இரண்டுதலைக்கும் ஓரில்லாமையுண்டென்றநுஸந்தித்து. (இறையைவென்றிருப்பாரில்லை) சேஷியானவனைத் தன்ஸ்வாதந்த்ர்யத்தாலே வீசுகொம்பாய் நிற்கையைவிட்டுப் பரதந்த்ரனாய்வந்து நிற்கும்படி இவ்வநுஸந்தாநத்தாலே ஜயித்திருப்பாரொருவருமில்லை.

(அஃதொருவர்க்கெட்டுமதோ) அந்தவநுஸந்தாநம் ஒருவர்க்கெய்துமதோ? அதிதுர்லபமன்றோவென்கை. இருவர்க்குமில்லையென்றவதுதான் ஏதென்னுமாகாங்க்ஷையிலே அருளிச்செய்கிறார்மேல் (இல்லை குறையுடைமைதானென்று) அவனுக்கு இத்தலையில் ஒன்றும் கொள்ளவேண்டும் குறையில்லை. இவனுக்கு அத்தலைக்கொன்றும் கொடுக்கத்தக்க உடைமைதானில்லையென்று.

மூ;—வித்தமிழ வின்பம் துன்பம் நோய் வீகாலம்
தத்தமவையே தலையளிக்கும்—அத்தைவிடீர்
இச்சியாநிச்சியா தேத்தவெழில் வானத்
துச்சியானுச்சி யானும். (அ)

(கூறினுரெல்லாம் மறையுடைய மார்க்கத்தேகாண்) அதாவது-அபௌருஷேயமாகையாலே விப்ரலம்பாதிதோஷ ஸம்பாவநாகந்த(X)ரஹிதமாய், அதஏவ ஆப்ததமமாயிருக்கிற வேதமார்க்கத்தை தர்ஶித்துக்கொள்ளென்கை. மார்க்கத்தைக் காணென்று ஸங்கிஹிதனுபிருப்பா னொருவனைப்பார்த்துச் சொல்லுமாபோலே, ஸர்வர்க்கு முபதேஶமாக வருளிச்செய்தாராயிற்று. (எ)

அவ;—எட்டாம் பாட்டு. நாராயண பதார்த்தமான அநந்யபோக(X)த்வத்தை யருளிச்செய்கிறார்; கைங்கர்யமே புருஷார்த்தமென்றும், அதுபண்ணும் க்ரமமுமிறே அதில் சொல்லுவது. அவையிரண்டையும் ஸங்க்ரஹேணவருளிச் செய்கிறார் இதில்.

வ்யா;—(வித்தமித்யாதி.) கைங்கர்யம் பண்ணுமதிகாரிக்கு ஶரீரத்தோடிருக்கும்நாள், வரும்வித்தலாப(X)தத்வியோகாதிகளடியாகவந்தஹர்ஷஶோகங்கள் பரமபுருஷார்த்தமானகைங்கர்யத்திற் செல்லுகிற மநஸ்ஸைப்பாரவடிக்குமவையாகையாலே அவைவந்தாலும்மநஸ்ஸு கலங்காமல் இவனிருக்கைக்குடலானவிவற்றை முந்துறவருளிச் செய்கிறார். வித்தம்-தநம். அதாவது-ஸ்வர்ணரஜதாதிகள்-இழவு-தத்விநாஶம், அதாவது-அஸ்திரமாகையாலே அவற்றுக்குவருமிழவு. இன்பம்-அநுகூலவஸ்த்வநுபவமாகிறஸுகம். துன்பம் - ப்ரதிகூலவஸ்த்வநுவமாகிறதுஃக்கம். நோய்-ஶாரீரமான ரோகங்கள். வீகாலம்-ஶரீரத்தினுடையவிநாஶகாலம். வீவு-முடிவு. இவையெல்லாவற்றையும்.

(தத்தமவையே) தந்தாமுக்கடியான அந்தக்கர்மங்களே. (தலையளிக்கும்)விபாகதஶையிலேகொடுக்கும். ப்ராரப்த(X)கர்மபலங்களானவை வாராதொழியாதிறே. (அத்தைவிடீர்) அதாவது-அதில்மநஸ்ஸு வைக்கவேண்டா வென்றபடி. இனிமேல் கைங்கர்யத்தைச் சொல்லுகிறது. (இச்சியான்) ஐஶ்வர்யாதிகளாகிற ப்ரயோஜநாந்தரங்களிலொன்றையு மிச்சியாதவன்.

மூ;—தத்தமிறையின் வடிவென்று தாளிணையை
வைத்தவரை வணங்கியிராப்—பித்தராய்
நிந்திப்பார்க்குண்டேறு நீணிரயம் நீதியால்
வந்திப்பார்க்குண்டிழி யாவான் (கூ)

---

(இச்சியாதேத்த) ஏத்துகிறவிதுக்குப் பரமபதாதிகளாகிற வொன்றையும் ப்ரயோஜநமாக விச்சியாதே ஸ்வயம்ப்ரயோஜநமாக ஏத்த. ஏத்துகையாவதுதான்-வாசிக கைங்கர்யமிறே. (க) "ஆழியங்கையம்மானையேத்தாதயர்த்து. - வாளாவிருந்தொழிந்தேன் கீழ்நாட்களெல்லாம்" என்றாரிறே ஆழ்வார். இதுதான் மாநஸவாசிககாயிக கைங்கர்யங்களுக்கு முபலக்ஷணம். இப்படி அடிமைசெய்ய.

(எழில்வானத்துச்சியானுச்சியானும்) அதாவது-(உ)"ஸோ$\acute{}$ஸ்ய
ஸ்ரஷ்டே-நாகஸ்யப்ருஷ்டே" என்கிறபடியே விலக்ஷணமான பரமாகாஶத்திலுயர்ந்த நிலத்திலே எழுந்தருளியிருக்கிற ஸர்வேஶ்வரனுக்கு ஶிரஸாவாஹ்யனுமென்கை. இத்தால் இங்கேயிருந்து இப்படி அடிமைசெய்யுமவன் நித்யமுக்தரை யடிமைகொண்டு அங்கேயெழுந்தளியிருக்கு மவனுக்கு அத்யாதரணீயனுமென்றதாயிற்று. (அ)

அவ;—ஒன்பதாம் பாட்டு. கீழ்எட்டுப்பாட்டாலே பதத்ரயாத்மகமான திருமந்த்ரத்தில் ப்ரதிபாதிக்கப்படுகிற ப்ரமேயங்களில் ஸாராம்ஶங்களை யருளிச்செய்தார் ; ததுபதேஷ்டாவான வாசார்யனை பகவதவதாரமாக ப்ரதிபத்திபண்ணிததநுரூபமாக அநுவர்த்தித்திராதே ஸஜாதிய புத்தியாகிற நிந்தையைப் பண்ணுமவர்களுக்கும் தத்வைபவமறிந்து ததநுகுணமாக ஸேவித்துப்போருமவர்களுக்கு முண்டாவதான பலவிஶேஷங்களையருளிச்செய்கையாலே ஆசார்ய வைபவத்தை யருளிச்செய்கிறார் இதில்.

வ்யா;—(தத்தமிறையின் வடிவென்று) "தம்தம்" என்கிற மெல்லொற்றை வல்லொற்றாக்கித் தத்தமென்று கிடக்கிறது. ஆகையாலே, தந்தாமிறையின்வடிவென்றபடி; அதாவது-நாராயணனாகையாலே எல்லார்க்கும், "நம்முடையவிறை, நம்முடை

---

(க) பெரியதிருவ-அஉ. (உ) தை-நா- ௧

யவிறை" என்று ப்ராப்தி சொல்லிப்பற்றலாம்படி ஸாதாரண ஶேஷியான ஸர்வேஶ்வரனுடைய திவ்யவிக்ரஹ மென்கை. "ஸாக்ஷாந்நாராயணோ தேவஃ க்ருத்வா மர்த்யமயீம் தநும்- ஸாக்ஷாந்நாராயணோதேவஃ க்ருத்வாமர்த்ய மயீம்தநும்" என்றும், "யஸ்ய ஸாக்ஷாத்பகவதி ஜ்ஞாநதீபப்ரதே குரௌ-யஸ்யஸாக்ஷாத்பகவதிஜ்ஞாநதீபப்ரதே குரௌ" என்றும் ஆசார்யனை பகவதவதாரமாக ஶாஸ்த்ரம் சொல்லாநின்றதிறே.

(தாளிணையை வைத்தவரை) "மருளாமிருளோட மத்தகத்துத்தன் தாள் அருளாலே வைத்தவவர்" என்கிறபடியே தங்களுடைய அஜ்ஞாநாந்த காரமெல்லாம் போம்படித் தம்முடைய திருவடிகளிரண்டையும் தங்கள் தலையிலே வைத்தருளின வாசார்யரானவரை.

(வணங்கியிராப்பித்தராய்) முறையிலே அநுவர்த்தித்திராத ப்ரா(ப்)ந்தராய். "தாளிணையை வைத்தவவரை, தத்தமிறையின் வடிவென்று வணங்கியிராப்பித்தராய்" என்கையாலே அர்த்தஸ்திதியில் பழுதுண்டாயன்று, அப்படிப்ரதிபத்திபண்ணி அநுவர்த்தித்திராதொழிகிறது. இவர்களுடையசித்தஸ்கலநமென்று நினைத்து அருளிச்செய்கிறார்.

(நிந்திப்பார்க்கு) மாநுஷப்ரதிபத்தியாகிற நிந்தையைப் பண்ணுமவர்களுக்கு, வேறொன்றும்வேண்டா, இப்படிப்ரதிபத்திபண்ணுகைதானே யாயிற்றுநிந்தை.

(ஏறுநீணிரயமுண்டே) அதாவது-இப்படி நிந்திக்குமவர்களுக்கு ஒருகாலும் கரையேற்ற மின்றிக்கே, நெடுகச்செல்லாநிற்கும் ஸம்ஸாரமாகிற நரகமுண்டென்கை; ஏறுநீணிரய மென்கையாலே, யமன் தண்டலான நரகத்திற் காட்டில் இதுக்குண்டானவ்யாவ்ருத்தியைச்சொல்லுகிறது. அதுக்கொருகால்கரையேற்ற முண்டிறே. இதுநித்யமாய்ச் செல்லுமித்தனையிறே. இத்தால் ஆசார்ய விஷயத்தில் மாநுஷப்ரதிபத்தி பண்ணும் மஹாபாபிகளானவர்கள் ஒருகாலத்திலும் உஜ்ஜீவந யோக்யதையின்றிக்கே நித்யஸம்ஸாரிகளாய்ப் போவர்களென்றதாயிற்று.

(நீதியால் வந்திப்பார்க்குண்டிழியாவான்) அதாவது-கீழ்ச்சொன்னபடியே அவதாரவிஶேஷ மென்றுப்ரதிபத்திபண்ணி முறைதப்பாமல், அநுவர்த்தித்துப் போருமவர்களுக்கு புநராவ்ருத்தியில்லாத பரமபதமுண்டென்கை. இத்தால் ஆசார்யவைப

மூ;—இறையுமுயிரு மிருவர்க்குமுள்ள
முறையும்முறையே மொழியும்—மறையும்
உணர்த்துவாரில்லா நாளொன்றல்ல ஆன
உணர்த்து வாருண்டான போது. (௧௦)

அருளாளப் பெருமாளெம்பெருமானார்
திருவடிகளே சரணம்.

அருளாளப்பெருமாளெம் பெருமானாரருளிச்செய்த
ப்ரமேய ஸாரம் மூற்றிற்று.

---

வத்தை நன்றாகவறிந்து அவன்திருவடிகளிலே "தேவுமற்றறியேன்" என்று ஸேவித்துப்போரும் மஹாத்மாக்களானவர்கள் திருநாட்டிலேபோய் அங்குள்ளாரோடுஸமாந போகபாகி(ஸூரி)களா யிருப்பரென்றதாயிற்று. (௯)

அவ;—பத்தாம் பாட்டு. இப்படி ஆசார்யவைபவத்தை யருளிச்செய்த வநந்தரம் இவ்வாசார்யன் பண்ணும் உபகாரவைபவத்தையும் லோகமெல்லாமறியும்படி ஸுஸ்பஷ்டமாக வருளிச்செய்து இப்ப்ரபந்தத்தை நிகமிக்கிறார்.

வ்யா;—(இறையும்) அகாரவாச்யனான வீஸ்வரனும், (உயிரும்) மகாரவாச்யனான வாத்மாவும். (இருவர்க்கு முள்ளமுறையும்) அகாரத்தில் சதுர்த்தியாலே சொல்லப்பட்ட சேஷி சேஷபாவமாகிற ததுபயஸம்பந்தமும், (முறையே மொழியும் மறையும்) அந்தஸம்பந்தத்தையே க்ரமமாகப்ரதிபாதிக்கிற வேதரூபமான திருமந்த்ரமும்.

(உணர்த்துவாரில்லா நாளொன்றல்ல) இவையெல்லாம் நித்யமாயிருந்ததே யாகிலும் இவற்றையறிவிப்பாரில்லாத காலத்திலே எல்லாம் அஸத்கல்பமாய்க்கிடந்தன.

(ஆனவுணர்த்துவாருண்டானபோது) இவையெல்லாமறிவிப்பாருண்டான காலத்திலே உளவாயிற்றனவென்கை. இவற்றையறிவிக்குமவனாகிறான் ஆசார்யனிறே, அதுதான் இப்ப்ரபந்தத்தில் முதற்பாட்டாலே அருளிச்செய்தாரிறேதாமே, இத்தால்; அஜ்ஞாதஜ்ஞாபகனானவாசார்யன்பண்ணும் உபகாரவைபவத்தை யருளிச்செய்தாராயிற்று.

பெரியஜீயரருளிச் செய்த
ப்ரமேயஸாரவ்யாக்யாநம் மூற்றிற்று.
பெரியஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# ஞானஸாரம் பதவுரை.

## க-பாட்டு:—ஊனவுடற்சிறை.

(ஆர்த்தரானவர்கள்)

| | |
|---|---|
| ஊன | மாம்ஸப்ரசுரமான |
| உடல் | ஶரீரமாகிற |
| சிறை | காராக்ருஹத்தை |
| நீத்து | விட்டு |
| ஒண்கமலகேள்வன் | அழகிய தாமரைப்பூவை வாஸஸ்தாநமாகவுடைய பெரியபிராட்டியாருக்கு வல்லபனானவனுடைய |
| அடிதேன் | திருவடிகளின் போக்யதையை |
| நுகரும் | அநுபவிக்கையிலுண்டான |
| ஆசைமிகுசிந்தையராய் | ஆசைமிக்கிருந்துள்ள மநஸ்ஸையுடையவர்களாய், |
| பழுத்தால் | பக்வமானால் |
| தானேவிழும் | தானேவிழும்படியான |
| கனிபோல் | பழம்போலே, |
| பற்றற்று | ப்ராப்யாபாஸ ப்ராபகாபாஸங்களில் ஸங்கமற்று |
| வீழும். | ஸர்வேஶ்வரன் திருவடிகளில் ஶரணாகதராய் (பண்ணுகிற) விழுகிற |
| விழுக்காடேதான் | விழுகைதானே (ஆர்த்த ப்ரபத்திதானே) |
| வீடு | மோக்ஷத்தை |
| அருளும் | (அவிளம்பேந) ப்ராபிக்கும். (க) |

## உ-பாட்டு:—நரகும்.

| | |
|---|---|
| நாள்மலராள்கோனை | ஶ்ரிய:பதியை |
| பிரிவு | விஶ்லேஷித்திருப்பது |
| நரகும் | து:க்கமுமாய், |

| | |
|---|---|
| பிரியாமை | ஸம்ஶ்லேஷித்திருப்பது |
| சுவர்க்கமுமாய் | ஸுகமுமாய், |
| துரிசற்று | இப்படியுண்டான ப்ரேமத்தில் உபாயத்வபுத்தியாகிற தோஷமற்று, |
| சாதகம்போல் | வர்ஷதாரையல்லது தரியாதசாதகம் போலே, |
| நாதன்தனதி | வருத்தஶேஷியான ஸர்வேஶ்வரனுடைய [று) |
| அருள் | பரமக்ருபையே (ப்ராப்திஸாதநமென் |
| பார்த்திருத்தல் | ப்ரதீக்ஷித்திருக்கை, |
| கோதிலடியார் | ப்ராப்யாந்தர ப்ராபகாந்தரங்களில் ஸங்கமாகிற தோஷமற்ற ஶேஷபூதரானவர்களுடைய |
| குணம் | ஸ்வபாவம். (உ) |

## ௩-பாட்டு:— ஆனையிடர்கடிந்த.

| | |
|---|---|
| ஆனை | கஜேந்த்ராழ்வானுக்கு |
| இடர் | முதலையினாலுண்டான துஃக்கத்தை |
| கடிந்த | நீக்கின |
| ஆழியங்கை | திருவாழியை அழகியகையிலேயுடைய |
| அம்புயத்தாள்கோனை | ஶ்ரியஃபதியை [டைய |
| விடில் | விஶ்லேஷிக்கில், |
| நீரில் | ஜலத்தில் நின்றும் |
| குதித்தெழுந்த | குதித்துக்கிளர்ந்து பிரிந்த |
| மீனெனவே | மத்ஸ்யம்போலே |
| ஆக்கைமுடியும்படி பிறத்தல் | ஶரீரம் நஶிக்கும்படியான அவஸ்த்தைபிறக்கை, |
| அன்னவன்தாள் | அப்படிப்பட்ட ஶ்ரியஃபதியின் திருவடிகளை |
| நீக்கமிலாவன்பர் | பிரியலுஹியாதபடியான ப்ரேமமுள்ளவர்களுடைய |
| நிலை | ஸ்வபாவம். (௩) |

### ச-பாட்டு:—மற்றொன்று.

| | |
|---|---|
| மற்றொன்றை | பக்வத்கைங்கர்யத்துக்கு வேறானதொன்றை |
| எண்ணாதே | புருஷார்த்தமாகக் கணிசியாதே |
| மாதவனுக்கு | ஸ்ரியஃபதிக்கு |
| ஆட்செயலே | அடிமைசெய்யுமதில், |
| இது | "இது |
| உற்றது | ஸ்வரூபத்துக்குச்சேர்ந்தது" |
| என்று | என்று |
| உளம் | ஹ்ருதயமானது |
| தெளிந்து | தேறி, (அக்கைங்கர்யம்பெற்றால்) |
| பெற்ற | ப்ராப்தமான |
| பெரும்பேற்றின்மேல் | "இம்மஹா புருஷார்த்தத்துக்குமேலே |
| பேறுஉளதோ | ஒருபுருஷார்த்தமுண்டோ" |
| என்றிருப்பார் | என்றிருக்குமவர்கள் ; |
| வானத்தவர்க்கு | பகவதேகபோகராயிருக்கும் நித்யஸூரிகளுக்கும் |
| அரும்பேறு | பெறுதற்கரிய புருஷார்த்த பூதராவர்கள். (ச) |

### ரு-பாட்டு:—தீர்த்தமுயன்றாடுவதும்.

| | |
|---|---|
| முன் | பாரதயுத்தத்தில் |
| பார்த்தனை | சோகாவிஷ்டனான அர்ஜுநனுக்கு |
| காத்தபிரான் | சரமஶ்லோகத்தையுபதேசித்து ரக்ஷித்தருளின மஹோபகாரகனானவன் |
| பார்ப்பதன்முன் | கடாக்ஷித்தருளுவதற்குமுன்பு, |
| தீர்த்தம் | கங்கைமுதலான தீர்த்தங்களிலே (பாபக்ஷயார்த்தமாக) |
| முயன்று | உத்யோகித்து |
| ஆடுவதும் | அவகாஹிக்குமதுவும், |

| | |
|---|---|
| செய்தவங்கள் | க்ரயஶேஷணார்த்தமாகச் செய்யப்படும் தபஸ்ஸுக்களை |
| செய்வனவும் | செய்யுமவையும்; [வன், |
| சீர்த்துவரைமன்னன் | ஸ்ரீமத்த்வாரகைக்கு நிர்வாஹகனா |
| நமக்கு | ஶேஷத்வஸ்வரூப மறியாதநமக்கு |
| அடியோமென்னும்வாழ்வு-அடிமையாகிற ஸம்பத்தை | |
| ஈந்ததற்பின் | அருளின்பின்பு |
| இனி | இனிமேலுள்ளகாலம் |
| வேண்டும் குறையென்ன | உபாயோபேயங்கள்நிமித்தமாகக் குறைபடவேணுமோ. (ரு) |

## சு-பாட்டு:—புண்டரீகை.

| | |
|---|---|
| புண்டரீகைக்கேள்வன் | ஶ்ரியஃபதியின் |
| அடியார் | தாஸ்யைகரஸராயிருக்குமவர்கள், |
| அப்பூமிசையோன் | திருநாபீகமலத்திலுண்டான ப்ரஹ்மாவின் |
| அண்டமும் | ஆநந்தஹேதுவான அண்டத்தை |
| ஒருபொருளா | ஒருசரக்காக |
| ஆதரியார் | விரும்பமாட்டார்கள்; |
| ஒருமீன் | ஒருமத்ஸ்யமானது, |
| மண்டி | தன்ஶக்தி யெல்லாவற்றோடும் நெரு |
| மலங்க | நிலைகுலைந்து கலங்கும்படி [ங்கி |
| புரண்டமாத்திரத்தால் | இடம் வலங்கொண்டு புரண்டமாத்ரத்தால் |
| முந்நீர்கடல் | மூன்று ஜலத்தையுடைய ஸமுத்ரமா |
| ஆர்த்து | நிலைகுலைந்து ஒலித்து [னது |
| கலங்கிடுமோ | கலக்கத்தை யடையுமோ? (சு) |

## எ-பாட்டு-தோளார்.

| | |
|---|---|
| தோளார் | திருத்தோள்களோடே சேர்ந்திருந்துள்ள |
| சுடர்திகிரி | தேஜோரூபமான திருவாழியையும் |

| | |
|---|---|
| சங்குடைய சுந்தரனுக்கு | ஸ்ரீபாஞ்ஜந்யத்தையு முடையனாகை யால் வந்தவழகை யுடையவனுக்கு |
| ஆளானார் | அவ்வழகுக்குத்தோற்று அடிமையா னவர்கள், |
| மற்றொன்றில் | அவ்வடிமைக்கு வேறானப்ராக்ருத விஷயங்களொன்றிலும். |
| அன்புசெய்யார் | விருப்பத்தைப் பண்ணார்கள் ; |
| மீளா | புநராவ்ருத்தியில்லாததாய் |
| பொருவரிய | நிரவதிகதேஜோரூபமாயிருக்கையா லே உபமாந ரஹிதமாய் |
| விண்ணாட்டில் | பரமாகாஶஶப்த வாச்யமான திரு நாட்டிலே |
| போகம் | பரமாநந்தத்தை |
| நுகர்வார்க்கு | அநுபவிக்க வேணுமென்னு மாசை யுடையவர்களுக்கு |
| இந்திரன்நாடு | இந்த்ரனுக்கு போகஸ்தாநமானஸ்வர் க்கமானது |
| நரகன்றோ | நரகப்ராயமன்றோ? (எ) |

## அ-பாட்டு:—முற்றப்புவனம்

| | |
|---|---|
| புவனமெல்லாம்முற்ற உண்ட | ஸகல லோகங்களையும் ஒன்றொழியா மல் ப்ரளயத்திலழியாமே தன் திரு வயிற்றில்வைத்து நோக்கின |
| முகில்வண்ணன் | காளமேகநிபமான வடிவையுடைய வனுடைய |
| கற்றைத்துழாய்சேர் | தழைத்திருந்துள்ள திருத்துழாயோ டேசேர்ந்திருந்துள்ள |
| கழலன்றி | திருவடிகளையொழிய |
| மற்றொன்றை | வேறொரு ப்ரயோஜநத்தை |
| இச்சியாவன்பர் | இச்சியாத படியானப்ரேமத்தையுடை யவர்கள் |

| | |
|---|---|
| தனக்கு | வகுத்தசேஷியானதனக்கு (அடிமை செய்யுமிடத்தில்) |
| எங்ஙனே செய்திடினும் | எப்படி செய்தாலும் |
| உகந்து | தான்ப்ரீதனாய்க்கொண்டு |
| உச்சியாலேற்கும். | ஶிர்ஸாவஹிக்கும். (அ) |

## கூ-பா-ஆசிலருளால்

| | |
|---|---|
| ஆசில் | ஸஹேதுகத்வமாகிறதோஷமில்லாத |
| அருளால் | க்ருபையாலே |
| அனைத்துலகம் | ஸமஸ்தலோகத்தையும் |
| காத்து | அநிஷ்டங்களைப் போக்கிரக்ஷித்து |
| அளிக்கும் | அபிமதங்களைக் கொடுக்கும் |
| வாசமலராள் மணவாளன் | பெரியபிராட்டியாருக்கு வல்லபனானவன் |
| தேசுபொலி | தேஜஃப்ரசுரமான |
| விண்ணாட்டில் | பரமபதத்திற் காட்டிலும், |
| வேறொன்றையெண்ணாதார் | தன்னையொழிய வேறொருப்ரயோஜநத்தைக் கணிசியாதவர்களுடைய |
| நெஞ்சத்து | ஹ்ருதயத்தில் |
| இருப்பு | வாஸம்செய்வதை |
| சால | மிகவும் |
| விரும்பும் | ஆதரியாநிற்கும். (கூ) |

## கO-பா-நாளுமுலகை

| | |
|---|---|
| நாளும் | நாள்தோறும் |
| உலகை | லோகத்தையடைய |
| நலிகின்ற | ஹிம்ஸியாநிற்கிற |
| வாளரக்கன் | வாளைத்தனக்கு பலமாகவுடைய ராவணனுடைய |
| தோளும் | தோள்களையும் |
| முடியும் | தலைகளையும் |
| துணித்தவன் | அறுத்துப்பொகட்டவனை |

| | |
|---|---|
| பூமடந்தை கேள்வன் | ஶ்ரியঃ பதியானவன், |
| தன்தாளில் | தன்னுடைய திருவடிகளில் |
| பொருந்தாதார் | பொருத்த மற்றிருக்கிறவர்களுடைய, |
| உள்ளத்தில் | ஹ்ருதயத்தில் |
| இருந்தாலும் | நிர்ப்பந்தத்துக்காக விருந்தாலும் (அவ்விருப்பு). |
| முண்மேலிருப்பு | கண்டகாக்ரத்திலிருப்புபோல் துঃக்காமஹமாயிருக்கும். (௧0) |

## ௧௧-பா-தன்பொன்னடி

| | |
|---|---|
| விரையார் | பரிமளப்ரசுரமான |
| துழாயலங்கல் | திருத்துழாய் மாலையாலே அலங்க்ருதனாய் |
| மாரிமாகொண்டல் நிகர் | வார்ஷிகமானமஹாமேகம் போன்ற வடிவழகையுடையனான |
| மால் | ஸர்வேஶ்வரன், |
| தன் | நிருபாதிகஶேஷியான தன்னுடைய |
| பொன்னடியன்றி | ஸ்ப்ருஹணீயமான திருவடிகளை யொழிய |
| மற்றொன்றில் | வேறொருப்ரயோஜநத்தில் |
| தாழ்வுசெய்யா | ப்ராவண்யத்தைப் பண்ணாத |
| அன்பர் | ப்ரேமத்தையுடையவர்கள் |
| உகந்து இட்டது | ப்ரீதிப்ரேரிதராய்க் கொண்டுஸமர்ப்பித்த த்ரவ்யமானது |
| அணுவெனினும் | அத்யல்பமாயிருந்ததே யாகிலும், (அதை) |
| பொன்பிறழு | ஸ்வர்ணரூபமாய்க் கொண்டுவிளங்கா நின்றுள்ள |
| மேருவாய் | மஹாமேருவைப்போலே (மஹத்தாகநினைத்து) |
| கொள்ளும் | அங்கீகரிக்கும். (௧௧) |

## கஉ-பா-மாருயிணைந்த

| | |
|---|---|
| மலர்மடைந்தைகோன் | ஶ்ரிய꞉பதியானவன் |
| மாருயிணைந்த | தன்பக்கல் ஶாத்ரவயுக்தமாய்ச்சேர்ந்துநின்ற |
| மருதம் | யமளார்ஜுநமானது |
| இற | முறிந்துவிழும்படி |
| தவிழ்ந்த | தவிழ்ந்துபோன |
| சேருரரவிந்தம் | தன்னிலமான சேற்றிலலர்ந்த செவ்வித்தாமரைப்பூப்போலே சிவந்திருக்கிற |
| சேவடியை | திருவடிகளை |
| வேருக | விலக்ஷணமாக (பரமப்ராப்யமாக) |
| உள்ளாதார் | அநுஸந்தியாதவர்கள் (ப்ரயோஜநாந்தரபரராயிருக்குமவர்கள்) |
| ஒள்நிதியை | சீரியதநத்தை |
| ஈந்திடினும் | ஸமர்ப்பிக்கினும் |
| தான் | அவாப்தஸமஸ்த காமனுனதான் |
| உகந்து கொள்ளான் | விரும்பி அங்கீகரியான். (கஉ) |

## கந-பா-பண்டே

| | |
|---|---|
| பண்டே | முன்னமே (அநாதியாக) |
| உயிரனைத்தும் | ஸகலாத்மாக்களும் |
| பங்கயத்தாள்நாயகற்கே | ஶ்ரிய꞉பதியானவனுக்கே |
| தொண்டாமெனதெளிந்த | ஶேஷபூதராயிருப்பர்களென்று ஸம்ஶயவிபர்யயமறக் கண்டுதெளிந்த |
| தூமனத்தர்க்கு | பரிஶுத்தாந்த꞉ கரணர்க்கு, |
| பலவும் | ஶாஸ்த்ரங்கள் பலவற்றையும் |
| கற்று | அதிகரித்து, (ஆத்மஸ்வரூபத்தைப் பாராதே) |
| தம் உடம்பை | ஜாத்யாதிகளுக்கு ஆஶ்ரயமான தங்கள் தேஹத்தையே |
| பார்த்து | கண்டு |

| | |
|---|---|
| அபிமானிக்கும் | தங்களைப்போரப்பொலியே அபிமானித் திருக்கும் |
| உலகத்தவரோடு | லௌகிகரோடு |
| உறவு | ஸம்பந்தமானது |
| உண்டோ | உண்டோ ?. (கச) |

## கச-பா-பூதங்களைந்தும்

பூதங்களைந்துபொருந்தும் பஞ்சபூதங்களினுடைய ஸமுதாய ரூபமான

| | |
|---|---|
| உடலினால் பிறந்த | தேஹமடியாக வுண்டான |
| சாதங்கள் நான்கினொடும் | ப்ராஹ்மணாதி நாலுவர்ணத்தோடும் |
| சங்கதமாம் | சேர்ந்திருக்கிற |
| பேதங்கொண்டு | உத்கர்ஷாபகர்ஷப்ரதிபத்திஹேது வான விசேஷங்கொண்டு |
| என்னபயன் பெறுவீர் | என்னப்ரயோஜநம் பெறுவதிகோள்; |
| எவ்வுயிர்க்கும் | எல்லா வாத்மாக்களுக்கும் |
| இந்திரைகோன் தன்னடியே | ஶ்ரியஃபதியானவன் திருவடிகளே |
| சரண் | புகலென்று |
| காணும் | காணுங்கோள். (கசு) |

## கரு-பா-குடியும்

| | |
|---|---|
| குடியும் | க்ராமமும் |
| குலமும் | கோத்ரமும் |
| எல்லாம் | மற்றும்நிரூபகமாய்ப் போரும்ஸூத்ராதிகளும், |
| கோகநகைக்கேள் வனடியார்க்கு | ஶ்ரியஃபதியானவனுடைய தாஸபூதரானவர்களுக்கு |
| அவனடியேயாகும் | ஶேஷியானவவன் திருவடிகளில் ஸம்பந்தமேயாகும். (ஔபாதிகமான க்ராமகுலாதி நிரூபகங்கள் போய் ஸ்வாபாவிகமான பகவத்ஸம்பந்தமே நிரூபகமாகுமென்றுகருத்து.) |

(இதுக்குத்ருஷ்டாந்தம் மேல்)

| | |
|---|---|
| படியின்மேல் | பூமியின்மேல் காணும்படியான |
| நீர்கெழுவும் | ஜலஸம்ருத்தியை யுடைய |
| ஆறுகளின் | நதிகளுடைய |
| பேரும் | நாமங்களும் |
| நிறமுமெல்லாம் | வர்ணங்களுமெல்லாம், |
| ஆர்கலியை சேர்ந்து | ஸமுத்ரத்தில் ப்ரவேசிக்கவே |
| மாய்ந்திடுமற்று | பின்புகாணவொண்ணுதபடியாகு மாபோலே (கஅ) |

## கசு-பா-தேவர்

| | |
|---|---|
| நான் | அஹம்ஶப்தவாசயனுன நான் |
| தேவர் | தேவதைகள் |
| மனிசர் | மநுஷ்யர்கள் |
| திரியக்கு | திர்யக்கானபசு பக்ஷ்யாதிகள் |
| தாவரமாம் | ஸ்தாவரங்களாகிற |
| யாவையுமல்லேன் | ஸகலமுமல்லேன்; (அஹம்ஶப்தவாச்ய னுன ஆத்மா தேஹமாத்ரத்தில்முடிந்த தேவாதி பேதவ்ய வஹாரவிஷயமல்ல னென்று கருத்து) |
| நான் | நான் |
| பூவின்மிசை | பூவின்மேல் வர்த்திக்கும் |
| ஆரணங்கின் | பெரியபிராட்டியாருக்கு |
| கேள்வன் | வல்லபனுய் |
| அமலன் | ஹேயப்ரதிபடனுய் |
| அறிவேவடிவாம் | ஜ்ஞாநாநந்த ஸ்வரூபனுன |
| நாரணன் | நாராயணனுடைய |
| தாட்கே | திருவடிகளுக்கே |
| அடிமை | ஶேஷமானதாய் |
| இலகும் | ஜ்ஞாநாநந்தாதிகளால் உஜ்ஜ்வலமான |
| உயிர் | ஆத்மாவாவன் (கசு) |

## ௧௭-பா-ஒன்றிடுக

| | |
|---|---|
| விண்ணவர்கோன் | தேவர்களுக்கு நிர்வாஹகனான இந்த்ரனுடைய |
| செல்வம் | ஐஶ்வர்யமானது |
| ஒன்றிடுக | (அபேக்ஷியாதிருக்க) தானேவந்து சேர்ந்திடுக; |
| ஒழிந்திடுக | அல்லது, தன்னை விட்டுநீங்கிடுக; |
| என்றும் | எக்காலத்திலும் |
| இறவாதிருந்திடுக | மரணமில்லாமல் வாழ்ந்திடுக; (அப்படியிராமல்) |
| இன்றே | இப்போதே |
| இறக்க | மரணமாயிடுக; |
| இவற்றால் | இந்த ஐஶ்வர்யாகமாதிகளாலுண்டாகும் |
| களிப்பும் | கர்வமும் |
| கவர்வும் | க்லேசமும், |
| தன் | ஸ்வஸ்வரூபத்தை |
| தெளிந்தபின் | நன்றாக அறிந்தபின்பு |
| பிறக்குமோ | உண்டாமோ? (ஆத்மஸ்வரூப மறிந்தவர்களுக்கு ஐஶ்வர்யாகமாதிகளாலுண்டாகும் கர்வாதிகள் உண்டாகாதென்று கருத்து). (௧௭) |

## ௧௮-பா-ஈனமிலா

| | |
|---|---|
| மட்டார் | தேன்வெள்ளமிடுகிற |
| துழாயலங்கல் | திருத்துழாய்மாலையாலே அலங்க்ருதனான |
| மால் | ஸர்வேஶ்வரன், |
| ஈனமிலாவன் பரென்றாலும் | தன் திருவடிகளில் பழுதற்றப்ரேமமுடையவர்களானாலும், |
| எய்திலா | பகவத்விஷயத்துக்குப்ரதிகூலரான |
| மானிடரை | க்ஷுத்ரமநுஷ்யரை |

| | |
|---|---|
| எல்லாவணத்தாலும் | ஸம்பாஷணாதி ஸர்வப்ரகாரத்தாலும் |
| தானறிய | ஸர்வஜ்ஞனை தானறிய |
| விட்டார்க்கு | பரித்யஜித்தவர்களுக்கு |
| எளியன் | ஸுலபனாயிருக்கும், |
| விடாதார்க்கு | அப்படி அவர்களை விடாதவர்களுக்கு |
| அறவரியன். | மிகவும் துர்லபனாயிருக்கும். (கஅ) |

## கக-பா-நல்லபுதல்வர்

| | |
|---|---|
| நல்லபுதல்வர் | குணவான்களான புத்ரர்கள் |
| மனையாள் | குணவதியான பார்யை |
| நவையில்கிளை | குற்றமற்ற பந்துக்கள் |
| இல்லம் | விலக்ஷணமான க்ருஹம் |
| நிலம் | ஸுக்ஷேத்ரம் |
| மாடு | பஹுக்ஷீரப்ரதங்களானபசுமுதலான [வை |
| இவையனைத்தும் | இவையெல்லாம் |
| அல்லலெனை | துக்காவஹங்களென்று |
| தோற்றி | மநஸ்ஸுக்குத் தோற்றி |
| எரிதீயில் | ஜ்வலிக்கிற அக்நிபோலே |
| சுடுமேல் | தாபகரமாகில், [ளுக்கு |
| அவர்க்கு | இப்படிப்பட்ட அவஸ்தை பிறந்தவர்க |
| ஏற்றரும் | ஸ்வயத்நத்தால் பெறுதற்கரிய |
| வைகுந்தத்து | பரமபதத்திலேபோய் |
| இருப்பு | அடியார்குழாங்களுடன் கூடியிருக்குமிருப்பு |
| எளிதாம் | ஸுலபமாம். (ககூ) |

## உ0-பா-விருப்புறினும்

| | |
|---|---|
| விருப்புறினும் | க்ஷுத்ரவிஷயங்களில் விருப்பத்தைப் பண்ணிலும், |
| தொண்டர்க்கு | தன்பக்கல் பக்தரானவர்களுக்கு |
| வேண்டும் இதமல்லால் | அவர்களுஜ்ஜீவநத்துக்கபேக்ஷிதமான ஹிதத்தை யொழிய |

| | |
|---|---|
| திருப்பொலிந்தமார்பன் | பெரிய பிராட்டியாரெழுந்தருளி யிருக்கையாலே உஜ்ஜ்வலமான திருமார்பை யுடையவன், |
| அருள்செய்யான் | அபேக்ஷிதமான க்ஷுத்ரவிஷயங்களைக்கொடான்; (இதற்குத்ருஷ்டாந்தம்மேல்) |
| குழவி | விளைவதறியாத சிறுப்ராஜை |
| நெருப்பை | அக்நியை, |
| விடாதே | அதின்தேஜஸ்ஸைக்கண்டுவிடமாட்டாமல் |
| விழவருந்தினும் | அதிலேவிழுகைக்குயத்நித்தாலும், |
| தாய் | ப்ரஜைக்கு நாஶகமென்றறிந்த தாயானவள் |
| தடாதொழியுமோ | அதில்விழாதபடித்தகையாதொழியுமோ? (உ0) |

## உக-பாட்டு:—ஆரப் பெருந்துயர்

| | |
|---|---|
| வேரிச்சரோருகைகோஸ் | பரிமளப்ரசுரமான தாமரைப்பூவை யிருப்பிடமாக வுடையபெரியபிராட்டியாருக்கு வல்லபனானவன் |
| அன்பர்கள்பால் | தனபக்கல் பக்தரானவர்கள் விஷயத் [தில் |
| ஆரப்பெருந்துயர் | மிகவும் பெருந்துஃக்கத்தை |
| செய்திடினும் | விளைத்தபோதிலும் |
| தேரில் | ஆராயில் |
| மெய் நலமாம் | மெய்யானஸ்நேஹ கார்யமாம், (எது போல வென்னில்) |
| பொறுத்தற்குஅரிதெனி லும் | பொறுக்கப்போகாதென்று தோற்றியிருந்தாலும் |
| மைந்தன் | புத்ரனுடைய |
| உடல்புண்ணை | ஶரீரத்திலுண்டான புண்ணை |
| அறுத்தற்கு | சேதி(ச்சே)க்கைக்கு (உக) |
| இசைதாதை அற்று | அநுமதிபண்ணும் பிதாவைப்போலே. |

## உஉ-பாட்டு:—உடைமை.

| | |
|---|---|
| நான் | நான் |
| உடைமையென்றும் | ஸர்வேஶ்வரனுடைய உடைமை யென்றும், |
| உடையான் | இவ்வாத்மாவை யுடையவன், |
| உயிரை | இவ்வாத்மாவை ஸம்ஸாரத்தில் நின்றும் உத்தரிப்பிக்கைக்காக |
| வடமதுரை வந்து | வடமதுரையில் வந்து |
| உதித்தானென்றும் | ஆவிர்ப்பவித்தருளின ஶ்ரீக்ருஷ்ணனென்றும், |
| திடமாகவறிந்து | த்ருடமாக வறிந்து |
| அவன் தன்தாளில் | ஸ்வாமியானவவன் திருவடிகளிலே |
| அடைந்தவர்க்கு | ஶரணம் புகுந்தவர்களுக்கு, |
| பின்பிறந்துபடும் | பின்பு ஒருஜந்மம் பிறந்து அநுபவிக்கத்தக்க |
| நீள்துயரம் | தீர்க்கமான கர்மம் |
| உண்டோ | உண்டோ?. (உஉ) |

## உங-பாட்டு:—ஊழ்வினை.

| | |
|---|---|
| ஊழ்வினை | பழையதாக ஆர்ஜிக்கப்பட்ட கர்மமாகிற |
| குறும்பர் | ஸ்வதந்த்ரர்கள் |
| ஓட்டருவரென்று | ஓடிவந்து நலிவர்களென்று |
| அஞ்சி | பயப்பட்டு |
| ஏழைமனமே | அறிவிலியான நெஞ்சே! |
| இனிதளரேல் | இனிமேல் ஶோகிக்க வேண்டாம்; |
| ஆழிவண்ணன்தன் | கடல்போன்ற வடிவையுடைய ஸர்வேஶ்வரனுடைய |
| அடிக்கீழ் | திருவடிகளின் கீழே |
| வீழ்ந்து | விழுந்து, |
| சரணென்று | நீயே எனக்குச்சரணமாக வேணுமென்று |

| | |
|---|---|
| இரந்து | யாசித்து, |
| ஒருகால் | ஒருதடவை |
| சொன்னதற்பின் | இந்தவார்த்தையைச் சொன்னபின்பு |
| துயர் | கர்மபலமாய் வருகிறதுஃக்கமானது |
| உண்டோ | உண்டாகுமோ ?. (உங) |

## உச-பாட்டு-வண்டுபடி.

| | |
|---|---|
| வண்டுபடி | மதுபானார்த்தமாக வண்டுகள்படிந்து கிடக்கிற |
| துளபமார்பனிடை | திருத்துழாயாலே அலங்க்ருதமான திருமார்பையுடைய ஸர்வேஶ்வரன் விஷயத்தில் |
| செய்தபிழை | செய்த குற்றங்களானவை |
| பல உண்டென்று | அநேகங்களுண்டென்று |
| உளம் | மநஸ்ஸே! |
| தளரேல் | தளராதே கொள். |
| இறை | ஸர்வஸ்வாமியானவன், |
| தொண்டர் செய்யும் | தன்பக்கல் பக்தரானவர்கள் செய்யும் |
| பல்லாயிரம் பிழைகள் | அநேகமாயிரம் குற்றங்களை |
| பார்த்திருந்தும் | ஸர்வஜ்ஞனுகையாலே பார்த்துக்கொண்டிருக்கச் செய்தேயும், |
| காணும் கண் | அப்பிழைகளை தர்ஶிக்கும் ஜ்ஞாநரூபமானகண்ணை |
| இல்லாதவன்காண் | உடைத்தாகாதவன் காண். (உச) |

## உரு-பாட்டு:—அற்ற முரைக்கில்.

| | |
|---|---|
| அற்றமுரைக்கில் | அறுதியா (பரமாத்தமா)னதுசொல்[லில் |
| அம்புயைகோன் | ஶ்ரியஃபதியானவன் |
| அடைந்தவர்பால் | ஆஶ்ரிதரானவர்கள் பக்கல், |
| குற்றம் | குற்றங்களை |
| உணர்ந்து | தர்ஶித்து |
| இகழும் கொள்கையனே | அதடியாக அவர்களை இகழ்ந்துவிடும் ஸ்வபாவத்தை யுடையவனே? |

| | |
|---|---|
| எற்றே | என்னே? (அவன் ஸ்வபாவ மறியாதவர் நினைவு என்னே யென்கிறார்) |
| தன்கன்றின் | தன்கன்றினுடைய |
| உடம்பின் | உடம்பிலுண்டான |
| வழுவன்றோ | அழுக்கையன்றோ, |
| அன்று | அப்போது |
| அதனை ஈன்றுகந்த | அந்தக்கன்றைப் பெற்றதாலுண்டான உகப்பையுடைய |
| ஆ | பசுவானது, |
| காதலிப்பது | விருப்பத்துடன் புஜிப்பது. (௨௫) |

## ௨௬-பாட்டு-தப்பில்.

| | |
|---|---|
| தப்பில் | ஜ்ஞாநாநுஷ்டாநங்களிலொரு தவிர்தலில்லாத |
| குரு | ஆசார்யனுடைய |
| அருளால் | ப்ரஸாதத்தாலே |
| தாமரையாள் நாயகன்றன் | ஸ்ரியஃபதியினுடைய |
| ஒப்பில் | ஒப்பில்லாத (ஸஹாயாந்தர நிரபேக்ஷமான) |
| அடிகள் | திருவடிகள், |
| நமக்கு | அகிஞ்சநராய், அநந்யகதிகளான நமக்கு |
| உள்ளத்து | ஹ்ருதயத்திலிருக்கிற |
| வைப்பென்று | சேமநிதியென்று |
| தேறியிருப்பார்கள் | விஸ்வஸித்திருக்குமவர்கள், |
| தேசுபொலி | தேஜஸ்ஸுமிக்கிருக்கிற |
| வைகுந்தத்து | பரமபதத்திலே |
| ஏறி | அர்ச்சிராதிகதியாலேபோய் |
| பணிகட்கு | பகவத்கைங்கர்யங்களுக்கு |
| ஏய்ந்திருப்பார் | அநுரூபமான அதிகாரிகளாயிருப்பார்கள், (௨௬) |

## உ௭-பாட்டு-நெறியறியாதார்.

| | |
|---|---|
| நெறி | ஸம்ஸாரத்தைத்தப்புவிக்குமுபாயத்தை |
| அறியாதாரும் | அறியாதவர்களும், |
| அறிந்தவர்பால்சென்று | உஜ்ஜீவநோபாயமறிந்தவர்கள் பக்கல்சென்று |
| செறிதல்செய்யா | ப்ரணிபாதாதிரூபமான ஶுஶ்ரூஷாதிகளைச் செய்யாத |
| தீமனத்தர்தாமும் | துஷ்டஹ்ருதயரானவர்களும், |
| இறையுரையை | ஸர்வேஶ்வரனருளிச்செய்த சரமஶ்லோகார்த்தத்தை |
| தேறுதவரும் | விஶ்வஸியாதவர்களும், |
| திருமடந்தைகோனுலகத்து | ஶ்ரியःபதியின் லோகமான ஶ்ரீவைகுண்டத்தை |
| ஏறார் | ப்ராபியார்கள். |
| இடர் | ஸம்ஸாரமாகிற துःக்கத்தில் |
| அழுந்துவார் | மக்நராய்ப்போருவர்கள். (உ௭) |

## உ௮-பாட்டு-சரணாகதி.

| | |
|---|---|
| சரணாகதி | மஹாவிஶ்வாஸபூர்வகமாக அகிஞ்சநாதிகாரியாலே அநுஷ்டிக்கப்படும் ப்ரபத்தியானது, |
| மற்றோர்சாதனத்தை | ஸ்வயத்நரூபகர்மஜ்ஞாநாதிகளான உபாயங்களிலொன்றை |
| பற்றில் | பேற்றுக்குஸாதநமாக அவலம்பிக்கில் |
| அரணாகாது | தான்ரக்ஷகமாகாமல் நழுவிப்போம். |
| அஞ்சனைதன்சேயை | அஞ்ஜநாதபுத்ரனை திருவடியை |
| ஆரணழிய | அவர்பலமழியும்படியாக |
| கட்டியது | ராக்ஷஸர்களாலே கட்டப்பட்டதாய், |
| வேறோர்கயிறுகொண்டு - | தன்பக்கல் விஶ்வாஸமில்லாமல் வேறொருசணற்கயிற்றைக்கொண்டு |

| | |
|---|---|
| ஆர்ப்பதன்முன் | கட்டுகையில் ப்ரவ்ருத்தமானபோதே |
| விட்ட | தான்விட்டுப்போன |
| புடைபோல் | ப்ரஹ்மாஸ்த்ரம்போலே |
| விடும் | இவனைவிட்டு நீங்கிப்போம். (உஅ) |

## உகூ-பாட்டு-மந்திரமும்-

| | |
|---|---|
| மந்திரமும | அநுஸந்தாதாவுக்கு ரக்ஷகமான திரு மந்த்ரமும், |
| ஈந்தகுருவும் | அம்மந்த்ரப்ரதனான வாசார்யனும், |
| அம்மந்திரத்தால் | அந்தத்திருமந்த்ரத்தால் |
| சிந்தனைசெய்கின்ற | அநுஸந்திக்கப்படுகிற |
| திருமாலும் | ஶ்ரியஃபதியும், |
| நந்தலிலாது | கேடில்லாமல், (இடைவிடாமல்) |
| என்றும் | ஸர்வகாலமும் |
| அருள்புரிவர் | ப்ரஸாதத்தைப்பண்ணுகைக்கு விஷயபூதர் |
| யாவர் | யாவர்சிலர், |
| அவர் | அவர்களே |
| இடரை | ஸாம்ஸாரிகதுஃக்கங்களை |
| வென்று | ஜயித்து |
| கடிது | ஶீக்ரமாக |
| வீடு | மோக்ஷத்தை |
| அடைவர் | ப்ராபிப்பர்கள். (உகூ) |

## ௩௦-பாட்டு-மாடும்-

| | |
|---|---|
| மாடும் | தனக்கு க்ஷீராதிகளைக்கொடுக்கும் பசுக்களும் |
| மனையும் | போகஸ்தாநமானக்ருஹமும் |
| கிளையும் | ஸஹவாஸயோக்யரான பந்துக்களும் |
| மறைமுனிவர்தேடும் | வைதிகரான முனிவர்களாலே விரும்பித் தேடப்படுவதான |
| உயர்வீடும் | உத்க்ருஷ்டமான மோக்ஷமும் |

| | |
|---|---|
| செந்நெறியும் | அம்மோக்ஷத்தைப்ராபிக்கும் அர்ச்சிராதி மார்க்கமும், |
| பீடுடைய | ஸம்ஸாரநிவர்த்தகத்வமாகிற பெருமையையுடைய |
| எட்டெழுத்தும் | திருவஷ்டாக்ஷரத்தை |
| தந்தவனேயென்றிராதார் | -ப்ரஸாதித்தருளின வாசார்யனே யென்றிராதவர்களுடைய |
| உறவை | ஸம்பந்தத்தை |
| விட்டிடுகை | பரித்யஜிக்கைதானே |
| விதி | ஶாஸ்த்ரவிஹிதமென்று |
| கண்டீர் | காணுங்கோள். (ருo) |

## ருக-பாட்டு-வேதம்.

| | |
|---|---|
| தீதில் | அப்ராப்தத்வாதி தோஷமில்லாத |
| சரணாகதி | ப்ரபத்தியை |
| தந்த | தனக்கு உபகரித்த |
| தன்இறைவன் | தனக்கு அஸாதாரணஶேஷியான ஆசார்யனுடைய |
| தாளே | திருவடிகளே |
| அரணாகுமென்னுமது | ரக்ஷகமாமென்னுமதுவே, |
| ஒரு | அத்விதீயமாய் |
| நான்கு | ரிகாதிபேதத்தாலே சதுர்விதமான |
| வேதம் | வேதத்தினுடைய |
| உட்பொதிந்த | உள்ளேநிதிபோலே சேமித்துவைத்த |
| மெய் | தத்வரூபமான |
| பொருள் | அர்த்தமாம்; (இதுவுமன்றி) |
| கோதில் | அயதார்த்தப்ரதிபாதகத்வமாகிற தோஷமில்லாத |
| மநுமுதல்நூல் | மந்வாதிஸகலஸ்ம்ருதிகள் |
| கூறுவதும் | சொல்லும்படியான வர்த்தமும் இதுவேயாம். (ருக) |

## ருஉ-பாட்டு-மானிடவன்.

| | |
|---|---|
| குருவை | தனக்கு உபகாரகனான வாசார்யனை |
| மானிடவனென்றும் | மநுஷ்யனென்றும், |

| | |
|---|---|
| மலர்மகள்கோன் | ஶ்ரியஃபதியானவன் |
| தானுகந்தகோலம் | தானுகந்தருளின அர்ச்சாவிக்ரஹத்தை |
| உலோகமென்றும் | அதினுபாதாநமானலோஹமென்றும் |
| ஈனமதா | ஹீநமாக |
| எண்ணுகின்ற | சிந்தியாநிற்கிற |
| நீசர் | அத்யந்தநிக்ருஷ்டரான |
| இருவருமே | இவர்களிருவருமே, |
| எக்காலும் | காலதத்வமுள்ளதனையும் |
| கீழாம் | மிகவும்தண்ணியதான |
| நரகு | நரகத்தை |
| நண்ணிடுவர் | ப்ராபிப்பர்கள். (௩௨) |

## ௩௩-பாட்டு-எட்டவிருந்த.

| | |
|---|---|
| எட்டவிருந்த | ஸந்நிஹிதனாயிருக்கிற |
| குருவை | ஆசார்யனை |
| இறையன்றென்று | ஶேஷியன்றென்று |
| விட்டு | த்யஜித்து |
| ஓர்பரனை | தனக்கு அனுகவரியனாயிருக்கும் பரனை ஸர்வேஶ்வரனை |
| விருப்புறுதல் | லபிக்கவேணுமென்று ஆசைப்படுகை, |
| பொட்டென | சடக்கென |
| தன் கண் | தன் கண்ணை |
| செம்பளித்திருந்து | மூடிக்கொண்டிருந்து; ( மேல்விளைவைத் விசாரியாமலிருந்து) |
| கைதருத்திநீர் | கையில்துருத்தியில் விடாய்க்காகச் சேர்த்துவைத்திருந்த ஜலத்தை |
| தூவி | நிலத்திலே உகுத்து |
| அம்புதத்தை | ஆகாஶவர்த்தியான மேகத்தை, |
| பார்த்திருப்பானற்று | விடாய்பிறந்தபோது ஜலபானம்செய்ய ப்ரதீக்ஷித்திருக்குமவன்செயல் போன்றதாகும். (௩௩) |

## ௩௪—பாட்டு—பற்றுகுருவை.

| | |
|---|---|
| பற்றுங்குருவை | தன்னாலேபற்றப்பட்டிருக்கிற வாசார்யனை |
| பரனன்றென | ரக்ஷகனன்றென்று |
| இகழ்ந்து | அவமதிபண்ணிக்கைவிட்டு, |
| மற்றோர்பரனை | வேறேயொருபரனானஸர்வேஶ்வரனை |
| வழிப்படுதல் | தன் ரக்ஷணார்த்தமாக அநுவர்த்திக்கை, |
| தன்கைப்பொருள் | தன்கையிலிருக்கிற தநத்தை |
| விட்டு | அல்பமென்ற நினைவாலே த்யஜித்து |
| ஆரேனும் | மற்றெவராகிலும் |
| தாம் | தாங்கள் |
| காசினியில் | பூமிக்குள்ளே |
| புதைத்த | புதைத்துவைத்திருக்கும் |
| அப்பொருள் | அந்த தநத்தை |
| தேடித்திரிவானற்று | தேடித்திரியுமவன் செயல்போலாகும். |
| எற்றே | என்னேயென்று துஃக்கிக்கிறார். (௩௪) |

## ௩௫—பா—என்றும்.

| | |
|---|---|
| நின்ற புனல் | தனக்கு தாரகமாயிரா நின்றஜலத்தை |
| பிரிந்த | விட்டகன்ற |
| பங்கயத்தை | தாமரைப் பூவை, |
| பொங்குசுடர் | கிளர்ந்த தேஜஸ்ஸையுடைய |
| வெய்யோன் | ஆதித்யனானவன், |
| தான் | முன்விகாஸத்தைப் பண்ணும் தானே |
| அனலுமிழ்ந்து | நெருப்பையுமிழ்ந்து |
| உலர்த்தியற்று | உலர்த்திவிடுமாப்போலே, |
| என்றும் | ஸர்வகாலமும் |
| அனைத்துயிர்க்கும் | எல்லாவாத்மாக்களுக்கும் |
| ஈரம் செய் | தண்ணளிபண்ணா நிற்கும் |
| நாரணனும் | ஸர்வேஶ்வரனும் |

| | |
|---|---|
| தன்னாரியன்பால் | தனக்கு தாரகனை ஆசாரியன்பக்கல் |
| அன்பொழியில் | ப்ரேமம் குலைந்தால் |
| அன்றும் | நிக்ரஹத்தைப்பண்ணு நிற்கும். (௩௫) |

## ௩சு-பா-வில்லார்.

| | |
|---|---|
| வில்லார் | தேஜஸ்ஸு மிக்கிருந்துள்ள |
| மணி | ரத்நங்களை |
| கொழிக்கும் | குவித்தெறடா நிற்கும் |
| வேங்கடம் | திருவேங்கடமென்கிற |
| பொற்குன்றமுதல் | ஸ்ப்ருஹணீயமான திருமலைதொடக்கமாயுள்ள, |
| செல்லார் | மேகங்கள்வந்துபடியும்படியிருக்கும் |
| பொழில் | பொழில்களாலே |
| சூழ் | சூழப்பட்டிருக்கிற |
| திருப்பதிகளெல்லாம் | உகந்தருளின திவ்யதேசங்களெல்லாம், |
| மருளாமிருள் | அஜ்ஞாநமாகிற அந்தகாரமானது |
| ஓட | அதிஶீக்ரமாகப்போம்படியாக |
| மத்தகத்து | ஶிஷ்யனுடைய ஸிரஸ்ஸிலே |
| தன்தாள் | தம்முடைய திருவடிகளை |
| அருளாலே | நிர்ஹேதுகக்ருபையாலே |
| வைத்த | வைத்தருளின |
| அவர் | ஆசார்யரான அவரேயாவர். (௩சு) |

## ௩எ-பா-பொருளும்

| | |
|---|---|
| பொருளும் | தனக்குண்டான தநமும் |
| உயிரும் | தன்ப்ராணனும் |
| உடம்பும் | தன்ஶரீரமும் |
| புகலும் | தன்க்ருஹமும் |
| தெருளும் | தன்ஜ்ஞாநமும் |
| குணமும் | தன்னுடைய ஶமதமாதிகுணங்களும் |
| செயலும் | தன்வ்யாபாரங்களும், ஆகிய இவையெல்லாவற்றையும் |

| | |
|---|---|
| அருள்புரிந்த | நிர்ஹேதுகக்ருபைபண்ணித்தன்ணே யங்கீகரித்தருளின |
| தன்னரியன்பொருட்டா | தன்ஆசார்யனுக்குச் சேஷமாக |
| சங்கற்பம் செய்பவர் | ஸங்கல்பித்திருக்குமவர்களுடைய |
| நெஞ்சு | ஹ்ருதயமானது |
| எந்நாளும் | எப்போதும் |
| மாலுக்கு | ஸர்வேஶ்வரனுக்கு |
| இடம் | விரும்பிவர்த்திக்கும் இடமாகும்; |

## ௩அ-பா-தேனர்

| | |
|---|---|
| தேனர் | மதுஸம்ருத்திமாரூத |
| கமலம் | செவ்வித்தாமரைப்பூவை வாஸஸ்தாநமாகவுடைய |
| திருமாமகள் | பெரியபிராட்டியாருக்கு |
| கொழுநன் | வல்லபனானஸர்வேஶ்வரன், |
| தானே | ஸர்வாதிகனைதானே |
| குருவாகி | மநுஷ்யரூபங்கொண்டு ஆசார்யனுகி, |
| தன்னருளால் | தன்னுடையக்ருபையாலே, |
| மானிடர்க்காய் | உபதேஶத்தால் திருந்துவதற்குயோக்யரானமநுஷ்யர்களுக்காக |
| இந்நிலத்தே | அவர்களிருந்த இந்தபூமியிலே |
| தோன்றுதலால் | அவதரிக்கையால், |
| யார்க்கும் | எல்லாசேதநர்க்கும் |
| அவன் தாளிணையை | ஶேஷியான அந்தவாசார்யன் திருவடிகளை |
| உன்னுவதே | ப்ராப்யமாக அநுஸந்திக்குமதுவே |
| சாலஉறும் | மிகவும் ஸ்வரூபத்துக்குச்சேரும்; |

## ௩௯-பா-அலகை

| | |
|---|---|
| அலகைமுலை | பெற்றதாய்போல்வந்தபேயின் முலையை |

| | |
|---|---|
| சுவைத்தார்க்கு | அவள்ப்ராணனோடே புஜித்துத்தன்னைநோக்கித் தந்தவன்பக்கல் |
| அன்பரடிக்கு | ப்ரேமயுக்தரானவர்களுடைய திருவடிகளில் |
| அன்பர் | ப்ரேமயுக்தராய், |
| திலதமென | லோகத்துக்குத் திலகபூதரென்று ஶ்லாகிக்கும்படி |
| திரிவார்தம்மை | ஸஞ்சரிக்கும் மஹாத்மாக்களை |
| உலகர் | லௌகிகரானவர்கள் |
| பழிதூற்றில் | பகவத்விஷயத்திலும்,வர்ணாஶ்ரமாதிவிபாக([illegible])மறபாகவதவிஷயத்தில் அதிப்ராவண்ய முடையவரென்பதே ஹேதுவாகநிந்திக்கில், |
| துதியாகும் | அது இவர்கள்குண ப்ரகாசகமாகையால், ஸ்துதியாகும். |
| அவர் | அந்த லௌகிகர் |
| தூற்றாது | அப்படிநிந்தியாமல், |
| இவரை | இந்தபாகவதப்ராவண்யமுடையவர்களை |
| போற்றில் | நல்லவரென்றுபுகழில் |
| அது | அந்தபுகழ்கை |
| புன்மையேயாம் | நிந்தையேயாய்விடும். (௩௯) |

## ௪௦-பா-அல்லிமலர்

| | |
|---|---|
| அல்லிமலர்ப்பாவைக்கு | பெரியபிராட்டியார்விஷயத்தில் |
| அன்பர் | ப்ரேமயுக்தனாயிருக்கும் ஸர்வேஶ்வரனுடைய |
| அடிக்கன்பர் | திருவடிகளில் ப்ரேமயுக்தராயிருக்குமவர்கள் |

| | |
|---|---|
| அவிடுசொல்லும் | விநோதமாய்ச்சொல்லும் வார்த்தையும் |
| சுருதியாம் | வேதத்தோபாதி ப்ரமாணமாய்ப்பரிக்ரஹிக்கலாயிருக்கும்; |
| அவர்சரிதை | அவர்களுடைய அநுஷ்டாநமானது |
| மநுநூற்கு | ஸதாசாரப்ரதிபாதகமான மநுஸ்ம்ருதிக்கு |
| நல்லபடியாம் | நன்றான மூலமாயிருக்கும்; |
| பார்வை | அவர்களுடையகடாக்ஷம் |
| செடியார் | தூறுமண்டிக்கிடக்கிற |
| வினைத்தொகைக்கு | கர்மஸமூஹத்துக்கு |
| தீ | அக்நிபோலே நாஶகரமாயிருக்கும். (௪0) |

# ஞானஸாரம் பதவுரை

## முற்றிற்று

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ப்ரமேயஸாரம் பதவுரை.

## க-பா-அவ்வானவர்க்கு.

| | |
|---|---|
| அவ்வானவர்க்கு | அகாரவாச்யனான ஸர்வேஶ்வரனுக்கு |
| மவ்வானவரெல்லாம் | மகாரவாச்யரான ஜீவாத்மாக்களெல்லாரும் |
| அடிமையென்று | ஶேஷபூதர்களென்று |
| உவ்வானவர் | கடகத்வமேஸ்வரூபமாயுள்ள ஆசார்யரானவர்கள் |
| உரைத்தார் | அருளிச்செய்தார்கள்; |
| இவ்வாறு | இந்தப்ரகாரத்தை |
| கேட்டு | உபதேஶமுகத்தாலே கேட்டு |
| இருப்பார்க்கு | அதிலே நிலைநின்றிருக்குமவர்களுக்கு |
| ஆளென்று | ஶேஷபூதர்களென்று |
| கண்டிருப்பார் | தங்களை தர்ஶித்திருக்குமவர்கள், |
| மீட்சியில்லா | புநராவ்ருத்தியில்லாத |
| நாடு | திருநாட்டிலே போய் |
| இருப்பாரென்று | அடியார் குழாங்களுடன் கூடியிருக்குமவர்களென்று, |
| நான் | எம்பெருமானார் திருவடிகளிலே ஸேவித்திருந்தநான் |
| இருப்பன் | ப்ரதிபத்திபண்ணியிருப்பன். (க) |

## உ-பாட்டு-குலமொன்று.

| | |
|---|---|
| குலம் | ஆத்மாவுக்கு நிருபாதிகமாயிருக்கும் ஶேஷத்வரூபமான குலம் |
| ஒன்று | ஒன்றேயுள்ளது. |
| உயிர் | அந்தஶேஷத்வாஶ்ரயமான ஆத்மாக்கள் |

| | |
|---|---|
| பல | அஸங்க்யாதர் ; |
| தம்குற்றத்தால் | தாங்கள்பண்ணின புண்யபாபரூபகர்மமடியாக |
| இட்ட | ஈஶ்வரன் இவர்களுக்குக்கொடுத்த |
| கலம் | ஶரீரமாகிறபாத்ரம் |
| ஒன்று | ஒன்றேயாகும். (தேவாதிபேதத்தால் ஶரீரங்களநேகமானாலும் எல்லாம் ப்ருக்ருதிபரிணாமமாகையால் அத்தையிட்டு ஒன்றென்று சொல்லப்பட்டது) |
| காரியமும் | அந்தந்த தேஹபரிக்ரஹத்தா லுண்டாகும் புண்ய பாபபலாநுபவரூபமான ஸுகதுஃக்காதிகளாகிற காரியமும் |
| வேறும் | பலவகைப் பட்டிருக்கும். (இப்படி ஸம்ஸாரம் இடைவிடாமல் நடக்கைக்கடி சொல்லுகிறார்மேல்) |
| பலமொன்று | க்யதிலாபபூஜாதிகளாகிற பலமொன்றிலும் |
| காணாமை | கண்வையாதே |
| காணும் கருத்தார் | இவ்வாத்மாவினுஜ்ஜீவநத்திலேயேநோக்கான நினைவையுடைய ஆசார்யனது |
| திருத்தாள்கள் | திருவடிகளை |
| பேணாமைகாணும் | ஆஶ்ரயியாமை காணுங்கோள்; |
| பிழை | இப்படி ஸம்ஸாரம் அவிச்சிந்நமாய்ச் செல்லுகைக்கடியான குற்றம் (உ) |

## ரு-பாட்டு-பலங் கொண்டு.

| | |
|---|---|
| பலங்கொண்டு | ஐஶ்வர்யாதிகளிலேதேனுமொருபலத்தைக்கொண்டல்லது |
| மீளாத | (உபதேசாதிகளால் திருத்தினாலும்) மீளாமல் பற்றிநிற்கும் படியான |

பாவம் — பாபமானது
உளதாகில் — உண்டாயிருக்குமாகில்
குலங்கொண்டு — ஶேஷத்வமாகிற ஸம்பந்தமிருப்பதால்
காரியமென் — என்ன ப்ரயோஜநமுண்டு;
கூறீர் — சொல்லுங்கோள்;
தலங்கொண்ட — ஸமஸ்த லோகங்களையும் அளந்துகொண்ட
தாளினையான் — திருவடிகளையுடையனான
அவன் — அந்தஸர்வேஶ்வரன்,
அன்றே — அப்படியளந்து கொண்ட காலத்திலே
தனையொழிந்த — தன்னையொழிந்த [யே
யாவரையும் — ஸகலாத்மாக்களையும்
ஆளுடையானன்றே — தனக்கடிமையாக வுடையவனன்றோ (இப்படி ஶேஷத்வஸம்பந்தம் அநாதிஸித்த மென்றறிந்திருக்கச்செய்தேயும் நம்மை ஸம்ஸாரத்தில் நின்றும் எடாமலிருப்பது ப்ரயோஜநாந்தர ருசிகிடப்பதாலென்று கருத்து). (௩)

## ௪-பாட்டு-கருமத்தால்.

ஒருமத்தால் — மந்தரபர்வதமாகிற ஒருமத்தாலே
முந்நீர் — அகாதமான ஸமுத்ரத்தை
கடைந்தான் — தேவதைகளுக்காகக் கடைந்தவனாய்,
அடைத்தான் — பிராட்டி நிமித்தமாக அக்கடலை மலைகளாலே அடைத்தவனாய்,
முதல் — ஸ்ருஷ்டியின் முதலிலே
படைத்தான் — அந்தஜலத்தை ஸ்ருஷ்டித்தவனாய்,
அந்நீர் — அந்த ஜலத்திலே
அமர்ந்தான் — சேதநரக்ஷணார்த்தமாகக் கண்வளர்ந்தருளினவனாய், இப்படி ஆஶ்ரிதரக்ஷகனான ஸர்வேஶ்வரனுடைய

| | |
|---|---|
| அடி | திருவடிகளை, |
| இறை | ஶேஷியானவவனுடைய |
| தாள்கள் | திருவடிகள்தானே |
| தருமத்தாலன்றி | தருகையாகிறவற்றையொழிய (லும் |
| கருமத்தால் | ஸ்வயத்நரூபமான கர்மயோகத்தா |
| ஞானத்தால் | ஜ்ஞாந பக்தியோகங்களிலும் |
| காணும்வகையுண்டே | காணும் ப்ரகாரமுண்டோ. (௪) |

## ரு-பாட்டு-வழியாவது,

| | |
|---|---|
| வழியாவது | ப்ராப்திஸாதநமாவது |
| ஒன்றென்றால் | நான்காவதான ஸித்தோபாயமொன்றுதானென்று சொன்னால் |
| மற்றவை | ஸித்தோபாய வ்யதிரிக்தமான |
| முற்றும் | உபாயாந்தரங்களெல்லாவற்றையும் |
| ஒழியா | நிஶ்ஶேஷமாகப் பரித்யஜித்து, (அது தன்னிலும்) |
| அது | அந்த ஸித்தோபாயமானது |
| ஒன்றென்றால் | சேதநஸ்வீகாரத்தி லுபாயபுத்தியையும் ஸஹியாதபடி அத்விதீயமென்றால் |
| ஓமென்று | உடன்பட்டு, |
| இழியாதே | ஸித்தோபாயம் ஸ்வீகாரஸாபேக்ஷமென்று அவ்வழியாலிழியாதே, |
| இத்தலையால் | இத்தலையான சேதநரால் |
| ஏதுமில்லையென்று | ப்ராப்திஸாதநமாக வநுஷ்டிப்பது ஒன்று மில்லையென்று |
| இருந்ததுதான் | தங்கள் வெறுமையை அநுஸந்தித்திருந்த அவ்விருப்புத்தான், |
| அத்தலையால் வந்த | அத்தலையான ஸர்வேஶ்வரனால் வந்த |
| அருள் | க்ருபையின் பலம். (ரு) |

## ௬-பாட்டு-உள்ளபடி.

| | |
|---|---|
| உள்ளபடி | ஸ்வஸ்வரூபத்தை உள்ளபடி |
| உணரில் | தர்சித்தால் |
| ஒன்று | பேற்றுக்கு உடலாவதொன்று |
| நமக்கு | அகிஞ்சநரானநமக்கு |
| உண்டென்று | உளதென்று |
| விள்ள | பிரியநிற்க, |
| விரகிலதாய்விட்டதே | வழியற்று விட்டதன்றோ?; |
| கொள்ள | நம்பக்கல் கொள்ளவேண்டும்படியான |
| குறையேதுமில்லாற்கு | குறை ஒன்றுமில்லாத ஸர்வேஶ்வரனுக்கு, |
| இறையேது மில்லாத | அவனுக்குச் சேஷமான ஆத்மாத்மீயங்களில் ஏகதேசமுமில்லாத |
| யாம் | ஶேஷபூதரானநாம் |
| கூறுவதென் | (நம்மை ரக்ஷிக்கைக்குடலாக) அவனைக்குறித்துச் சொல்லுவதென்?; |
| சொல்லீர் | சொல்லுங்கோளென்று ஸங்கிஹிதரைப்பார்த்துச் சொல்லுகிறார். (௬) |

## ௭-பாட்டு-இல்லையிருவர்க்கு.

| | |
|---|---|
| இருவர்க்கும் | ஶேஷஶேஷிகளிருவர்க்கும் |
| இல்லையென்று | ஓரில்லாமை உண்டென்று, (இவ்வநுஸந்தாநத்தாலே) |
| இறையை | ஶேஷியானவனை |
| வென்றிருப்பாரில்லை | ஜயித்திருப்பாரொருவருமில்லை, |
| அஃது | அவ்வநுஸந்தாநம் |
| ஒருவர்க்கு | ஒருவருக்கு |
| எட்டுமதோ | எய்துமோ. |
| குறைதான் | அவனுக்கு இத்தலையில் கொள்ள வேண்டும் குறைதான் |
| இல்லை | இல்லை; |
| உடைமைதான் | இவனுக்கு அத்தலைக்குஸமர்ப்பிக்கத்தக்க உடைமைதான் |

| | |
|---|---|
| இல்லை | இல்லை, |
| என்று | என்று, |
| கூறினரில்லா | அபௌருஷேயமான |
| மறையுடையமார்க் கத்தே | வேதமார்க்கத்தில் |
| காண் | கண்டுகொள். (எ) |

## அ-பாட்டு-வித்தமிழவு

| | |
|---|---|
| வித்தம் | தநத்தினுடைய |
| இழவு | விநாஶமும், |
| இன்பம் | ஸுகமும் |
| துன்பம் | துஃக்கமும் |
| நோய் | ரோகாதிகளும் |
| வீகாலம் | ஶரீரவிநாஶகாலமும், ஆகிய இவை யெல்லாவற்றையும் |
| தத்தமவையே | தந்தாமுக்கடியான அந்தக்கர்மங்கள் |
| தலையளிக்கும் | பலதசையிலேகொடுக்கும்; [தானே |
| அத்தை | அதில் |
| விடர் | மநஸ்ஸுவைக்கவேண்டா. |
| இச்சியான் | ப்ரயோஜநாந்தரங்களிலொன்றையு மிச்சியாதவன், |
| இச்சியாது | மோக்ஷாதிரூபமான வொருப்ரயோ ஜநத்தையு மிச்சியாமல் |
| ஏத்த | வாய்படைத்த ப்ரயோஜநம்பெறும் படி ஸர்வேஶ்வரனை ஸ்துதிக்க, |
| எழில்வானத்து | விலக்ஷணமான பரமபதத்தில் |
| உச்சியான் | உயர்ந்தநிலத்திலே யெழுந்தருளியிரு கும் ஸர்வேஶ்வரனுக்கு |
| உச்சியானும் | ஶிரஸாவஹிக்கத்தக்கவனுவான். (அ) |

## கூ-பாட்டு-தத்தமிறையின்

| | |
|---|---|
| தாளிணையை வைத்த | அஜ்ஞாநாந்தகாரம்போம்படி தம் திருவடிகளை வைத்தருளின |
| அவரை | ஆசார்யனை |
| [redacted]மிறையின் | நமக்கு ஸ்வாமி, நமக்கு ஸ்வாமியென் றுமுறைசொல்லத்தக்க ஸர்வேஶ்வ வரனுடை... |

| | |
|---|---|
| வடிவென்று | திவ்யவிக்ரஹமென்று |
| வணங்கியிரா | க்ரமத்திலே அநுவர்த்தித்திராதே |
| ஸித்தராய் | ப்ராந்தராய், |
| நிந்திப்பார்க்கு | மாநுஷப்ரதிபத்திபண்ணி நிந்திப்பவர்களுக்கு |
| ஏறா | ஒருகாலும் கரையேற்றமின்றிக்கேயிருப்பதாய் |
| நீள் | நெடுகச்செல்லாநிற்கும் |
| நிரயம் | ஸம்ஸாரமாகிற நரகம்தான் |
| உண்டு | உண்டு. (௯) |
| நீதியால் | முறைதப்பாமல் |
| வந்திப்பார்க்கு | அநுவர்த்தித்திருக்குமவர்களுக்கு |
| இழியா | புநராவ்ருத்தியில்லாத |
| வான் | பரமபதமானது |
| உண்டு | உண்டு, |

## ௰-பா-இறையும்.

| | |
|---|---|
| இறையும் | அகாரவாச்யனான ஈச்வரனையும், |
| உயிரும் | மகாரவாச்யனான ஆத்மாவையும், |
| இருவர்க்குமுள்ள | இவ்விருவர்க்குமுண்டான |
| முறையும் | சதுர்த்தியால் சொல்லப்பட்ட ஶேஷஶேஷிபாவஸம்பந்தத்தையும், |
| முறையேமொழியும் | க்ரமமாகப்ரதிபாதிக்கிற |
| மறையும் | வேதரூபமான திருமந்த்ரத்தையும் |
| உணர்த்துவாரில்லாநாள் | யதாவத்தாக அறிவிப்பாரில்லாதகாலத்திலே |
| ஒன்றல்ல | (அவையெல்லாம்) ஒருவஸ்துவாகாமல், அஸத்கல்பமாய்க்கிடந்தன; |
| உணர்த்துவாருண்டானபோது | (இவையெல்லாம்) அறிவிப்பாருண்டானபோது |
| ஆன | உளவாயிற்றன. (௰) |

ப்ரமேயஸாரம் பதவுரை முற்றிற்று.